Typed

சுப்ரமணியர் மேல்கள்
+ நட்பக்க

சிந்துகள்

DR. இந்திராதேவி

526 - சுப்ரமணியர் ஞானம்

சுவடி எண்: ௫௨௬

சுப்பிரமணியர் யோகம்

சுவடி எண் : 526

சுவடி பெயர் : சுப்பிரமணியர் யோகம்

ஏட்டின் நீளம் :

படியெடுத்த நாள் : 21.4.95

முடித்த நாள் : 9.6.95

மொத்த பக்கங்கள் : 143

பொருளடக்க பக் : 2

படியெடுத்தவர் : தா.ரா

குறிப்பு : சுப்பிரமணியர் யோகம் என்னும் பெயருடைய இச்சுவடி மிகவும் நன்றாக உள்ளது. இதில் சுப்பிரமணியர் அருளிய யோகம் 5, 8, 16, 12, திருக்கோட்டம் மற்றும் 32, அகத்தியருக்கு உபதேசம் 32, 16, 100, 200 ஆகிய பகுதிகள் அடங்கியுள்ளன. பாடல்கள் எண்வகை ஒழுக்கமாக காணப்படுகின்றன. முழுதும் முழுவதும் உள்ளது.

ஏடு எண்: 526

சுப்பிரமணியர் யோகம்

ஹரி ஓம். சுப்பிரமணிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய ஐந்து.

சீர்மேவும் நாவினா லடைத்தி டாமல்
செலுத்தடா யும்மண் ணாக்கில் நேராய்
பார்மேவும் அண்டவுச்சி தன்னி லேதான்
பாயுமடா வாசியுந்தான் பரத்தி னூடே
தார்மேவும் மூலமடா தன்னில் லிங்கம்
தண்டுக்கும் அண்டத்திற்கும் தமர்தா னிற்கும்
கார்மேவும் விந்துவடா பிடறி மார்கம்
கனிந்துமிக யிறங்குமடா கண்டு பாரே // 1.

பாரடா வண்ணாக்கில் மனம்நேர தாகப்
பத்திகொண்டு அண்டமதைப் பார்க்கும் போது
ஆரடா வாசியுந்தான் பிடறி மார்கம் சென்று
ஆகாசப் பிரமத்தில் லடங்கிப் போகும்
நேரடா நிருவிகற்பம் ஆதி யாச்சு
நித்தியபிரம சாரியென்றும் பேருண் டாகும்
வீரடா சிலம்பொலியும் னாதங் கேட்கும்
வேலெடுத்த கீதிசத்தி வருக லாமே // ௨

வருகலாம் மட்சரத்தைப் பார்க்கும் போது
மைந்தனே மனம்ரெண் டாய்ப் பிரிந்து போகும்
உருகலாம் அட்சரத்தைத் தன்னி யேதான்
உன்மனமே யட்சரமா யண்ட மேவிக்
குருபரன்போ லுன்மனதைச் செலுத்தும் போது
கோடிரவி மதியுடைய சாந்தி மீறும்
திருவருளா லகிறியுந்தா னுயரத் தாக்கும்
சிவனோடு சேர்ந்துவிளை யாட லாமே // 3

ஆடவாம் ரவிமதியின் சுடர்தான் மூன்றும்
அண்ட உச்சி தன்னிலையும் அடங்கிப் போகும்
பாடவாம் பச்சையடா அண்டம் வாங்கி
பாச்சடா உப்பையுந்தான் அண்டத் துள்ளே
தேடவாம் திருக்கள்ளிப் பாலி னாடே
தில்லைப்பால் விட்டரைத்து வண்ட வாயை மூடி
கூடவாம் உப்பையுந்தான் குவித்து மூடி
கூறுகிறேன் மும்மண்டல மத்தையு மெடுத்துப்
பாரே/4

யெடுத்திடவே மெழுகுபோலத் திரண்டு நிற்கும்
யெந்தெந்தச் சரக்குவகை யெல்லாம் நீறும்
அருத்துவங்க நீர் வாங்கும் செம்புநீர் வாங்கும்
அடங்காத வியாதியெல்லா மரண்டே ஓடும்
தருத்துமிகப் பேசாதே வாட மேதை
தனக்கே சாட்சியதாய் தவமே செய்து
கருத்துமிகத் திரியாதே அகத்தியனே கேளு
கர்த்தனுட னாலித்வே கருத்தஞ்சு முற்றே//5.

ஆறுமுகக் குருவருளிய ஐந்தும்
முற்றிற்று.
சுப நமஸ்த்து

4. ஹரி ஓம். சுப்பிரமணிய சுவாமிகளருளிய யோக சூட்சம் . 8 :-

பூரணத்தின் தொண்டாங்கிப் பொறிகளைந்தே
போதமய மாயிருந்துப் புருவ மேவி
காரணத்தின் குண்டலியாங் கருவைக் குள்ளே
கடந்தெழுந்த கேசரியைக் கடந்தப் பாலே
மாரணத்தில் நெருப்பாறு மயிர்ப்பாலத்தில்
மனதடங்கித் தான்கடந்து மௌனம் பெற்று
ஆரணத்தின் முகத்தானை வணங்கி யேதான்
அவஸ்த்தையுட நிர்ணயத்தை வகுத்து ளோமே // 1

ஓமென்ற பிரணவமாங் கடந்தப் பாலே
யுகமுடிந்த பட்டணத்துக் கப்பால் சென்று
ஆமென்ற அட்சரங்கள் கீழ் மேலாக
அடங்கியே பதினாறை எட்டாக
நாமென்ற சொல்லற்று வெளியாயிப் பாடி
சாந்தியுட கொலுவிருப்பை நன்றாய்ச் சொல்லவே
காமென்ற புடமாய்ச் சென்மஞ் சென்மம்
கடந்தெழுந்தார் பிரமநிலை காட்டு ளோமே // 2

காட்டுகிறே னகத்தியமா முனியே கேளு
கருத்தொன்றாயித் தானிருத்துக் கபட மற்று
அ. நாட்டுகிறேன் மௌனத்தால் அனுதினமும் நோக்கி
நந்திகொலுச் சிங்கார நடனங் கண்டு
பூட்டுகிறேன் பிரமத்தில் சென்றும் போது
பொறிகளைந்தங் கருவிதைநொந்தாட்த் தாழுஞ் சாரும்
வீட்டினையு மிகமடா கீர்த்தி கண்டேன்
வேல்முருக னென்றுவந்து மேவும் பாரே // 3

வாரான பிரமத்திற் செல்லும் போது
வஸ்த்துடனே மதுவுண்டு பசியுந் தீர்ந்தேன்
காரான கமலமணி விமலமணி தன்னைக்
குறிப்பறிந்து விந்துவிலே கூடிக் கொண்டு
நேரான கேசரத்தில் தூங்கி மைந்தா
நெருந்தாரஞ் சத்தியமா நெருப்பாறு தாண்டி
வீரான ஆயுபடை வீடு தன்னில்
நிர்மலமாய் வெட்டவெளி நிர்மயமா நின்றே பாரு // 4

பாரப்பா கலைமாறி அமிர்த முன்னு
பன்னிரண்டு முகத்துடைய வன்னியாலே
ஆரப்பா அஷ்டகர்ம வசியப் போக்கு
அறுபத்து நாலுசித்து மாட்டி வைக்கும்
5. காரப்பா உப்பினுட நிலையுந் தோணும்
கூறாத மந்திரத்தின் கொடுமையாலே
வீரப்பா வாதமெல்லாம் கைக்குள்ளாகும்
விந்துமணி திரண்டிடவே வேதை தானே // 5

தானென்ற வயித்தியமுஞ் சித்தியாகும்
தந்திவட்ட மதிதாண்டித் தானே செல்ல
தேனென்ற அகாரமடா உகாரந் தானும்
சிந்தைகுந்த சிகாரமடா மூன்றினாலே
ஊனென்ற திரிகோணந் தன்னிற் சென்று
உண்மையென்ற மௌனத்தைக் கண்டு பாரே //
கோனென்ற ஆணவமும் மடங்கிப் போகும் 6
கும்பத்தின் சித்தியுட கூர்மையாலே //

பாரேறீ சாகரமே யீசன் விந்து
பஞ்சயந் திரியத்தால் மாய்கை யாச்சு
ஆரேறீ அணுப்போலே தந்தை விந்து
அப்பனை நாதமதி லடங்கும் போது
சீரேறீ விடையமெட்டும் கூடச் சேர்ந்து
செனிக்கையாலே பஞ்சயந் திரிய மாச்சு
வீரேறீ கருவிதொண்ணூத் தாறு மாக
விசைகொண்டு சென்மமுந்தா னெடுத்த வாறே// 7.

௮. யெடுத்ததினா லாவதென்ன மௌனம் பாரு
யெட்டாத சுழிமுனையா லிருந்து கொண்டு
அடுத்துமிக மனந்தனையும் போக்கி டாமல்
அஷ்டாட்சரத்தி னுட அருமை பெற்று
தொடுத்துமிகக் கற்பமெல்லாம் அறிந்தே உண்ணு
சுத்தசிவந் தன்னிலையுஞ் சுகித்த மாக
தருத்துமிக முடுகிடவே காற்றி றேம்
சார்ந்தவர்க்கே சாஸ்த்திரமிது யெட்டு
முற்றே // 8.

ஸ்ரீ புவனாம்பிகை துணை செய்து ரட்சிக்கவும்.

ஞானிலும் சுப்பிரமணிய சுவாமி யருளிய - 16.

முந்தியே ஓங்காரச் சுடர்முன் னாலே
முனைதாண்டி முச்சந்தி நடுவே சென்று
சொந்தியே திருவாசல் குள்ளே நின்று
ஸ்ரீ சிவாத்மா பரமாத்மா இரண்டு மொன்றாய்
நந்தியே நாற்பத்தி முக்கோண மேர்வில்
நடுவிருக்கும் குண்டலியாள் ணடனம் பெற்று
சந்தியாலே முப்பழமும் அமுர்த முண்ட
தந்தியும் பணிந்துமிகச் சாற்று வோமே// 1.

சாற்றுகிறேன் ராசராசாங்க யோகம்
தண்மையுள்ள அகத்தியமா முனியே கேளு
மாத்திலையு மதிகமடா முப்பத்தி ரெண்டின்
மௌனமெல்லாம் வெளியாக்கிப் பதினார் தன்னில்
ஆத்துகிறேன் சுழினையடா மேல் வீட்டில்
துருவமென்றுந் துரியாதீதந் தன்னில்
காத்திலையு மதிகமடா நடனங் காணும்
கோடிவரை யாருந்தானும் மௌனம் பாரே// 2.

பாருநீ சாகரத்தின் விந்துக் குள்ளே
பன்னிரண்டு முகமுள்ள வன்னி யாலே
கூறுநீ ரவிமதியும் குண்டலியாற் பாயும்
குக்கலென்ற மரத்தினுட கூர்மை யாலே
வீருநீ மனதடங்கி யதினுட் டாக்கி
விட்டகுறை தொட்டகுறை விதியைப் பார்த்து
ஆறையட்டு அசுரர்தனை வதைத்த தாலே
சுப்பிரமணிய னென்றுசொல்லி நமக்குப் பேரே// 3

அ. பேரிட்டு யெனையழைத்தா ளென்றன் ஆத்தாள்
~~பிரணவத்தோ ரமிர்தஞ் செலுத்தி வைத்தாள்~~
பிரணவத்தோ டாறுதலந் தன்னைக் காட்டி
சீரிட்டா ளென்னையெடுத்து முத்த மிட்டாள்
தித்திப்புப் பாலமிர்தஞ் செலுத்தி வைத்தாள்
வீரிட்ட அகம்பிகாரம் போக்கச் சொன்னாள்
விந்துவிலே வீற்றிருந்து வாழச் சொன்னாள்
பாரிட்ட பலவேத மார்க்கஞ் சொன்னாள்
பஞ்சவர்ணப் பரிதனிலே பாய்ந்தேன் பாரே // 4.

பாரப்பா அறுபத்து நான்கு யோகம்
பார்தனிலே பாராம லழிந்து போனார்
ஆரப்பா அறுபத்தி நான்கு யோகம்
அறையாரென் அகத்தியமா முனியே கேளு
வீரப்பா அண்டவச்சி தன்னுக் குள்ளே
வீரமுடன் யெட்டிலையும் நாலைச் சேர்த்து
காரப்பா கமலமணி தன்னைக் கண்டு
காத்துவனா ரிருந்திடத்தை கூர்ந்து காணே // 5

கோணய்யா கார்மேகம் யாடியா டித்து
கருணையுடன் பொன்மாரிப் பொழிந்தாற் போலே
தோணய்யா தோணுமடா புருவமேவ
சித்தசிவ கொள்கையுந்தான் தோணு மைந்தா
நாணய்யா கொள்கையாலே அமிர்த முண்டு
நாற்பத்தி முக்கோண மேருவிற் புக்கி
வீணய்யா கருவிகிளை வேரறுத்து
வேதாந்தந் தன்னில்வினை யாடினேனே // 6

விளையாடிப் பார்க்கையிலே சத்த மேகம்
மின்னியடா யிடியடித்து வேகமாக
நிலையாக வுரிசித்து யெழுகிற் தானாய்
நிறைந்ததினால் நிலத்திலேயும் உப்புண் டாச்சு
மலையாமலே நிலமதிர்ந்து உப்பெடுத்து
மார்க்கமுடன் சத்தசலம் தன்னை விட்டு
அலையாமல் கரைத்ததையு மிறுத்து மைந்தா
அப்பனே அடுப்பேற்றிக் காய்ச்சு காய்ச்சே // 7.

காய்ச்சியடா யாக்கியினிப் பார்க்கும் போது
கருணையுள்ள உப்பதுவும் வெளுப்ப தாகும்
தாட்சியாணி வையாமல் சாகர மேலி
தன்னுடைய சாற்றியுந்தா னுப்பாய் சேறு
பாச்சியாணிப் பதினாறு திறமே மைந்தா
பாலகனே கையால் வைத்து உருக்கிச் சாய்க்க
வாய்ச்சதடா மணிபோலே திரண்டு போகும்
மௌனமென்ற மணியனுட வல்லமை தானே // 8.

தானென்ற தாம்பிரத்தை யுருக்கி மைந்தா
சத்தியமாய் மணிதனையுங் கொடுக்கும் போது
வானென்ற தாம்பிரத்து நீரை வாங்கி
வஜ்ஜமணி குதித்துயாணிக் கீழே வீழும்
கோனென்ற மணிதனையும் பதனம் பண்ணு
கூறுகிறேன் மாற்றதுவும் பதினா றாகும்
தேனென்ற தம்பகமதை யென்ன சொல்வேன்
சிவசிவா தெரியாமல் பதனம் பண்ணே // 9

பதனமென்ற ரவிமதியும் சடர்மேன் றாலே
பார்தனிலே ரசவாதம் பலித மாகும்
அதனமென்ற வைத்தியமும் வசியற் றாளும்
அஷ்டகர்மம் அனேகமுந்தான் சித்தி யாகும்
நிதானமுடன் மௌனமதை அறியா விட்டால்
நீணிலத்தில் வைகுந்த தொழில் விழலாய்ப் போகும்
விதனமினி வையாமல் விந்து நாதம்
வெளிதனிலே வைத்துவிளை யாடு வாயே // 10

ஆடுவா யங்கென்று கண்டந் தன்னில்
அருத்திய டா அம்மென்று மதியாற் றாக்கி
நாடுவாய் உம்மென்றே ரவியால் வாங்கி
நலமுடனே உங்கென்று கண்டத் தேகி
கூடுவாய் உம்மென்று ரவியாலத் தாக்கி
கூறுகிறேன் அம்மென்று மதியால்த் தாக்கி
தேடுவாய் சிங்கென்று அண்ட மேவத்
திடப்படவை மௌனமுந்தான் தீர்க்க மாமே // 11.

தீர்க்கமுடன் மௌனமதை அறிவா ருண்டோ
செப்புகிறேன் இம்மென்றால் திடம தாகும்
பார்க்கையிலே அனுதினமு மறந்தி டாமல்
பலபேத மாகவுந்தான் திரிந்தி டாமல்
கார்க்கையிலே சம்சாரத் துறக்கந் தன்னி
கடுங்கோபம் விட்டகன்று கருணை மேவி
ஏற்கையிலே குருவினுட பாதம் போற்றி
எட்டாத முக்கனியை யெடுத்து உண்ணே // 12

எருத்தைதுருத்துக் கற்பமறிந் துண்டு தேறி
ஏகாந்த மானதொரு புரவி மீதில்
அருத்தருத்துச் சவாரியது செய்யும் போது
ஆகாச வீதிவழி அருகே செல்லும்
கொருத்தருத்து ஆறுவரை தாண்டி நிற்கும்
கோடிரவி போலவையுந்தான் வெளிச்ச மாகும்
கருத்தழைந்து திரியாமல் கலங்கி டாமல்
கண்டவனே கயிலாய தேகம் பாரே // 13.

பாரேநீ சாகரத்தின் விந்துக் குள்ளே
பஞ்சவர்ணம் போலவையுந்தான் பரிதான் கட்டும்
ஆரேநீ அறியார்கள் உலகத் தோர்கள்
அகத்தியனே அந்தனுக்கு அருளிச் செய்தேன்
வாரேநீ அண்டவச்சி முதுகிற் சென்று
மகத்தான லலாடக்கண் திறந்து பாரு
வீரேநீ பணிரெண்டு தலமொன் றாகும்
விந்துவிலே விளைந்ததை யென் றறிந்து பாரே // 14.

பாரப்பா அண்ணாக்கி லுண்ணாக் கேறி
பார்தனிலே பார்ப்பவர்க்குப் பாவ மாகும்
ஆரப்பா கண்வெடிக்கும் தேகம் போகும்
அம்பிகா யோகமென்ற அப்யா சத்தால்
வேறப்பா அதுவெல்லாந் தள்ளி மைந்தா
வீரமுடன் முன்சொன்ன விபரம் போலே
சாரப்பா தாரணையும் சாரணையற்ற தன்னைத்
தனித்திருந்து பூரணமாய்த் தவமே செய்யே //
15.

செய்யப்பா யிந்நூலைப் பதினா றுக்குள்
திரட்டிவைத்தேன் ஞானமெல்லாந் தீர்க்க மாக
மெய்யப்பா பன்னிரெண்டு வருஷங் காத்து
மேன்மையுடன் திரிந்தாலும் யீந்திடாதே
கையப்பா யிந்நூலைக் காட்டிடாதே
கர்மம்வந்து யெய்துமடா கண்டுபாரு
வையப்பா யிந்நூலைப் பதனம் பண்ணு
வந்தித்துவட பாதமலர் வணங்கு மாறே // 16

குருபாதமே துணை. வேலும் மயிலும் துணை.

16. ஹரியும் நானாக. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி அருளிச் செய்த 16.

தாட்டிகமாய் அங்கென்று குவைய லொட்டி
சத்தியமாய் சிங்கென்று புருவ மேவி
நாட்டியே உங்கென்று குவைய லொட்டி
நடுவணையாம் அங்கென்று புருவ மேவி
கட்டியே சிங்கென்று குவைய லொட்டிக்
கூறாக்க கீழ்மேலும் பார்க்கும் போது
வீட்டிலே வைத்ததொரு தீபங் காணும்
வெளிச்சத்தி லொருவெளிச்சங் காட்டுந் தானே //
1.

தானென்ற கண்ணாடிக் குள்ளே தானும்
தான்பார்க்கும் போதுமுகங் காட்டும் போலே
தேனென்ற கண்ணாடிக் குள்ளே தானும்
தெளிந்தமுகந் தானுமொரு கண்ணாடி யாகி
நானென்ற தீபவெளி யப்படியே கண்டு
நம்பனாக்க் கருவாதொன் ஞானாங் சாகும்
கோனென்ற குருவருளை நெஞ்சில் வைத்து
குறித்தவர்க்கு யெத்தனையுஞ் சித்தி யாச்சே //
2

ஆச்சடா யிப்படியே பழக்கஞ் செய்து
அணுநேரம் விடாமலேநீ அருளைப் போற்று
வாச்சுடா மதிதனையும் ரவியால் சேர்த்து
மார்க்கமுடன் ரவிதனையும் அக்கினியில் சேர்த்தால்
மூச்சடா விந்துவுந்தான் திரண்டு போகும்
முக்கியமாய்ச் சிலம்பொலியும் காதில் கேட்கும்
கோச்சடா பேச்சற்ற யடமு மாச்சு
கருத்துவைத்து உருத்துவைத்துக் கனிந்து பாரே/ 3.

அ. பாரப்பா புவனத்துப் பொரியு மத்து
பரப்பிரம வாசினையாம் பரத்தில் தாக்கும்
சேரப்பா வழலையுந்தான் னத்துப் போகும்
தீர்க்கமுடன் மெகாரமென்ற மவுனந் தன்னை
காரடா இம்மென்று யருந்து கொண்டு
கனிந்துருகி யேகாட்சர மிதுதா னென்று
ஆரடா கேசரியா ளாட்டைப் பார்த்து
அடங்காத அஞ்செழுத்தும் மாறைகுத்து மாச்சே// 4.

ஆச்சடா ரவிமதியும் அக்கினியு மாச்சு
அருளான விந்துடனே நாத மாச்சு
வாச்சடா ஆதாரங் கூடத் தானும்
வெருவியே அஞ்செழுத்து மிதுதான் மெக்கான்
மூச்சடா யேகவஸ்து ஒன்று சேர்ந்தால்
முக்கியமா சடாட்சரமு மிதுவே ஆச்சு
கோச்சடா யெருவகை யோனி யானால்
கருத்துடனே யெவ்வுயிரைப் படைக்க லாமே// 5.

படைத்தபடி அஷ்டாச் சரத்தைச் சொல்வேன்
பரப்பிரம மூலமென்றா திதற்குப் பேரு
உடைத்துவிட ______ ______
______ ______ ______

யினி அடுத்த யெட்டுப்புரம் கோர்வையாய்ப்
பார்த்துக் கொள்ளவும்.

படைத்தபடி அஷ்டாச் சரத்தைச் சொல்வேன்
பரப்பிரம மூலமென்றா திதற்குப் பேரு
17. உடைத்துவிட்ட சிலம்பொலியும் மத்துதானால்
உத்தமனே அரகிட்ட யுடனே காணும்
மடத்தனமாய்த் திரியாதே மவுனந் தன்னை
மார்க்கமுடன் நாலுநேரந் தவறாமல்
திடப்படவே நாள்தோறும் பழக்கஞ் செய்தால்
தீர்க்கம் நாற்பதுநாளில் சித்திதானே // 6

சித்திசொல்வே னின்னம் அஷ்டாச்சரத்தைக் கேளு
தீர்க்கமுடன் பரப்பிரமந் தன்னைத் தாண்டி
பத்தியுடன் அவருடைய உயிரைப் பார்த்தால்
பராபரமானந்த மென்று உணைப் பகருவாராம்
இத்தலத்தில் அவ்விடத்தில் செல்லும் போது
யென்னசொல்வேன் றின்ப அஷ்டாட்சரத்தின்
மார்க்கம்
சத்தியென்ன சிவமென்ன மாய்கை யென்ன
தட்டளிந்து ஓடிவாடுந் தாக்கிப் பாரே // 7

பாரப்பா பார்க்கின்ற போது தானும்
பதிவான தன்னுடலு மில்லாப் போலும்
ஆரப்பா வெவ்வுயிர்க்கு நிறைந்தான் போலும்
அங்கமுற்றா நிருக்குதென்று தெரியாப் போலும்
நேரப்பா யாப்பழியே தொந்த மானால்
நிர்விகற்ப சமாதியென்று மிதற்குப் பேரு
வேரப்பா பேசாதே முத்தர் கூட
வேகம் வைத்துச் சாரஉச்சி தன்னில் நில்லே // 8.

அ. நில்லென்றேன் சாரஉச்சி தன்னி லேதான்
நிற்கையிலே சாரத்துக்குச் சார்தான் காட்டும்
சொல்லென்றேன் சொல்லுக்கே பேச்சுண் டாகும்
சொல்லுகிறேன் வித்துக்கோர் வித்துண் டாகும்
அல்லென்றேன் பகலுக்கோர் பகலுண் டாகும்
அப்பனே யருள்க்கோர் திருவுண் டாகும்
கொல்லென்றேன் கூடக்குறைவுமாய் குறைந்து தானால்
கூசாமல் பரப்பிரமம் தான்தான் பாரே // 9

பாரென்றா முச்சிமுதை வாகாசந்தான்
பார்க்கையிலே பன்னிருகை வேலுண் டாகும்
ஆறென்றால் வேலற்றா லடங்கிப் போகும்
அருமையுள்ள மயிலேறி நடக்க லாகும்
கூறென்றால் மௌனமதைக் காரா மல்தான்
கருதையவன் உலகத்தில் ஞானி யென்பான்
சீறென்றால் சினமடங்கி உலகந் தன்னில்
சேத்தாரைப் போலையுற்றான் திரிந்து கொள்ளே // 10

திருவான மூன்றெழுத்து விபரம் கேளு
செப்புகிறேன் அவ்வென்றால் சூரியர்தானாச்சு
குருவான சிவ்வென்றால் சந்திரன்தானாச்சு
18. கூறுகிறேன் உவ்வென்றால் அக்கினியு மாச்சு
கருவான மூன்றுமொன்றாய்ச் சேர்ந்த போது
கணமான லோகமெல்லாம் வசிய மாகும்
பருவமுடன் தேவர்களும் பணிய லாச்சு
பாக்கியமாம் திருபாதம் பணிந்து நில்லே // 11.

நில்லடா மூன்றெழுத்து மகிமை யாலே
நிர்விகற்ப சமாதியாலே நின்றே வாழ்ந்தேன்
அல்லடா தேகசித்தி மாய சித்தி
அஷ்டமா சித்தியுட னருளை பெற்றேன்
சொல்லடா அரக்கரொடு சிகமு குதும்
சூட்சமுட னெனைக்கண்டால் பணிவா
றையா
கல்லடா கல்லுமதை யுருகிப் போகும்
கர்த்தனென்று நம்மையுந்தான் கர்த்தராய் பாரே // 12.

ஸ்ரீவால தண்டாயுதக் கடவுளார் பாதார
விந்தமே தஞ்சம். சுப்பிரமணிய சுவாமி
பன்னிரண்டு மாற்றுப் பெற்றது.
முருகையர் ரட்சிக்கவும். வேலும் மயிலும்
துணை. பராசக்தி பாதமே தஞ்சம்.
சிவமலித்து

19. ஹரிஓம் சுப்பிரமணியர் ௬. பதினாறு .16.

குருகடாட்சம்:

ஆதியெனும் சுரமேறு அய்யர் பாதம்
அருமறையும் நாலுமே துலங்க வென்று
சோதியெனும் யெனையீன்ற உமையாள் பாதம்
சுருதிமதி அக்கிலமா மதனைப் போற்றி
நீதியெனும் யென்குலையாய் வளர்ந்து நின்ற
நின்மயமே தசதீட்சை பத்து மாகி
காதிலிருந் சிலம்பொலியுங் கேட்டு நின்ற
கணபதியா மென்தமையன் காப்பு தானே // 1.

தானடா அகத்தியமா முனியே கேளு
தன்னுயிரே சிவமென்று நினைக்க வேணும்
கோனடா மூலத்தி லொன்று மில்லை
குறியான பிரமனுட வீட்டி லில்லை
வானடா மால்வீட்டி லொன்று மில்லை
வளமான ருத்திரனார் மனையா லில்லை
தேனடா மயேஸ்பரத்தின் கூறு மில்லை
தெளிவான சதாசிவத்தி லில்லைப் பாரே // ௨.

பாரப்பா சக்கரமாஞ் சொற்பனந்தா னாகிப்
பரிவுடனே அகத்தியென்றும் விசுத்தி யாச்சு
ஆரப்பா யெனைப்போலே ஆர்தான் சொல்வார்
அகத்தியனே உனக்கொரு பட்டாய் கேளு
நேரப்பா கும்பமல்லோ உந்தன் தாயார்
நிறைவிகற்ப சமாதியல்லோ குலைதா னாச்சு
வேரப்பா ஹரிதத் தாமரையு மாச்சு
விளக்கொளியாம் ஆங்கென்றும் ஆதியாச்சு / 3.

ஆச்சடா அறுபத்து நாலு யோகம்
அடங்கலுமே பாடிவைத்தார் சித்த ரெல்லாம்
யேச்சடா உயிர்களையுங் கொல்ல வென்று
இன்பமுடன் அம்பிகா யோக மென்றும்
வாச்சடா நாவையுந்தான் மேலே யுன்னி
வழிவான வாய்வுகளைக் கட்டும் போது
பேச்சடா கண்தெறிக்கும் வாய்வு தானும்
பிரியமுடன் சயரோகம் மாகுந் தானே // 4.

தானவனே வாசியென்றால் சொல்லக் கேளு
தீந்தையு — விந்துவல்லோ வாசி ஆச்சு
கோனவனே மனமல்லோ நிலையு மாச்சு
குறிப்பறிய ஆயாரத்தைட் டிதலு மாச்சு
நானென்ற நிலையல்லோ யுந்தா மாச்சு
நடுவீடு பன்னிரண்டு ஆதார மாகித்
தேனென்ற திரையேகும் வளைந்து கொண்டு
சிக்கியே கர்மவலைக் காச்சு பாரே // 5

பாரென்ற பாசமென்றால் மலிதான் யென்பான்
பதிவான யீசனுந்தான் நான்தா னென்பான்
நேரென்றா விடிகாத்து நான்தா னென்பான்
நெஞ்சகத்தில் வஞ்சகமே அறியா மலிதான்
20. சேரென்றால் வழலையென்று முப்பூ வென்பான்
திறமான ஆதாரங் கம்பி யுப்பு
வாரென்ற அண்டசரா சரங்க ளெல்லாம்
வகையாக வந்தவகை வழிமாய்ப் பாரே // 6

பாரென்றீ ரீசனுடன் மால்தான் கூடப்
பதிவான யிடகாத்து முப்பூ வெல்லாம்
ஆறென்றா லாதாரம் கம்பி யுப்பு
அண்டசரா சரமெல்லாம் படைத்த விந்து
நேரென்ற ஐவருமே உமையாள் தானும்
நிர்விகற்பம் சமாதியுந்தா னிலைக்க வேண்டி
கூறென்றேன் தசதீட்சை பத்து நகாரயக்
குமரகுரு பரனேநீ கூறு வாயே // ௭.

கூறுதற்கு நாவுமுண்டோ வாய்தா னுண்டோ
கும்பித்து ரேசித்துத் தம்பித் தாலும்
ஆறுதலம் கடந்தப்பால் சென்றிட் டாலும்
ஐவரையு மொன்றாகக் கட்டி னாலும்
மேருவி லொருகாலை வைத்து மிதித்திட் டாலும்
மேலான கேசரத்தில் பறந்திட் டாலும்
சார்விலா பேர்களுக்கு நிலைதா னுண்டோ
தன்னையுந்தா னறியாட்டால்ச் செல்கல் தானே // 8

அ. தன்னுள்ளே அறிந்தவனே ஒருவ னப்பா
சகலவுயிர் தங்களுக்குஞ் சாட்சி யாகி
யென்னுள்ளே யறிந்தவனு மவனு மாகி
ஏகாந்தக் குவதையவ அருளு மாகி
மண்ணுள்ள உயிர்களெல்லாம் மதுவாய் நின்றும்
மகத்தான தசதீட்சை பத்து மாகி
கண்ணுள்ளே நிறைந்தொன்று விந்து மாகிக்
கவனம்வைத்து முக்கோணத்தைக் கண்டு தேனே // 9.

தேரடா நிலையறியச் சொல்லக் கேளு
சின்மயமே குலதெய்வந் தானாய் நிற்கும்
ஆரடா ருத்திரனும் மாயுந் தானும்
அவர்களுக்கு அருத்தசுடு காடு தன்னில்
நேரடா யறுகோட்டுக் குள்ளே கூட
நிலைத்ததடா வஸ்ததென்றே நான்தா னாகி
வேரடா வெட்ட வெளி யான போது
வெறும்பாழாம் தசதீட்சை நான்தான் பாரே // ௰

பாரப்பா அறுகோட்டுக் குள்ளே நீயும்
பரிவான ரீங்காரங் குலையா லொட்டு
ஆடப்பா யறுகோணம் புருவ மத்தி
அழகான அட்சரத்தை மாறி ஊது
நேரப்பா அஞ்செழுத்துங் கூடச் சேரு
நிலையான மூன்றெழுத்தாம் வாலை விந்தை
௯ா. வேரப்பா பந்தனமாம் அங்கிலிய மென்று
விபரமுட னோலிலி யென்று மாட்டே // ௧௧

மாட்டுகிறேன் வசிவசி யென்றே யூது
மருவான நசிமசி யென்றே யூது
பூட்டுகிறேன் அங்கென்றும் இங்கென் றந்தான்
புருவநடு மத்தியாலே புகழ்ந்து பாரு
காட்டுகிறேன் சரவண பவன்தா னென்றும்
கங்குரவி யத்தவிடம் கருணை யாக
மூட்டுகிறேன் ஐயென்றுங் கிலியு மென்றும்
மூடர்களோ சவ்வென்றால் முத்தி யாச்சே // ௧௨

முத்தியடா பிரமமென்ற முத்தி யாச்சு
முக்குணமே ரவிமதியும் அக்கினியு மாச்சு
புத்தியுடன் மனமென்றால் இம்மென் றாச்சு
புத்திகெட்ட மடையரிடம் போட வேண்டாம்
சத்தியடா விந்துதிக்கும் வழலை யாச்சு
தன்னறிவு தோன்றுகிற மன மாச்சு
புத்தியடா புசுண்டருக்கு மிதுவே சித்தி
புதைத்துவைத்த முக்குணத்தால் தீச்சை பத்தே // 13.

அ. பத்தென்றும் பிரமமென்றும் தீட்சை யென்றும்
பரமனுக்கு மெட்டாத வஸ்து வென்றும்
யெத்தென்றும் யெற்றுட யேக்கம் வேண்டாம்
இந்திரியம் பிறந்தவிடஞ் சொல்ல வேணும்
சுத்தென்றும் பூமியுட வக்கம் சொல்லும்
சோதியே தீயாருந்த விடந்தான் சொல்லும்
கத்தென்றால் சிலுகுவிட இடந்தான் சொல்லும்
கர்த்தனே யாத்தவகை காட்டு வாயே // 14.

காட்டுகிறேன் யென்மகனே அகத்தியனே கேளு
கடந்தெரிந்த சுக்கிலமே நான்தா னாச்சு
பூட்டுகிறே னீத் (எல்ல) பரந்தான் ருத்திர னாச்சு
புத்திகெட்ட மனத்தாலே யெல்லாம் போச்சு
நாட்டுகிறேன் தசதீட்சைக் கெல்லா மான
நடுவெரிந்த யடக்கண்ணில் இம்மென் றேகி
கூட்டுகிறேன் சுதகால மெந்தி டாமல்
குறியறிந்து பார்த்ததினால் பிரம்ம மானேன் //
15.

நானான பதினாறு கலையு மானேன்
நான்தேய்ந்தேன் அணுவாகி நிறைந்தே கொண்டேன்
௨௨. பூணான காவிகுரவி யதுவு மானேன்
புசுண்டருடன் வழக்காடிப் போருஞ் செய்தேன்
வானானைக் காப்பதற்கு முப்பா லுண்டே
வுதுவான பதினாறு மகிழ்ந்து சொன்னேன்
கோணான குருபீட மிதான் ~~க~~ னப்பா
குணமாக அறிந்திருவாய் பதினாற் முற்றே // 16.

ஸ்ரீ வால சுப்பிரமண்யர் பதினாறு முற்றிற்று.
ஞான பண்டிதர் சுவாமி திருவடிகளே சரணம்
வேலும் மயிலும் துணை. தேவி சகாயம்.

வாரிஜம் ௩௨.

1. பூரணமா யெங்கெங்கும் ஒன்றாய் நின்ற
பொருளையுந் ~~கான்~~ தானறிந்து போத மாகி
காரணமாய் யவ்வாடக்கண் திறந்து பார்த்துக்
கருத்தொன்றாய்த் தானிருத்திக் கபடம் நீக்கி
நாரணார் பதிகடந்து சிவன மாக
நீந்தியுட பார்வையினால் நடனங் கண்டு
தாரணையாய் முப்பாழுங் கடந்து நின்ற
தத்திதனைப் பணிந்துமிகச் சாத்து வோமே // 1.

சாத்துகிறேன் பெருநூலா யரந்தான் சொன்னேன்
தப்பாமல் வதைக்குறுக்கி ஐந்நூறு சொன்னேன்
யேத்துகிறேன் யிருநூறாய்ப் பின்னால் சொன்னேன்
யென்மகனே யதைக்குறுக்கி நூறுஞ் சொன்னேன்
மாத்திலையும் அதிகமடா ஐம்ப தாக்கி
மனமகிழ்ந்து முப்பத்தி ரெண்ட தாக
வாத்தியே சித்தரெல்லாம் பிழைக்க வேண்டி
வஸித்துவட நிர்ணயத்தைக் காட்டு வேனே // ௨

அ. காட்டுகிறேன் அகத்தியமா முனியே கேளு
கனமான அஷ்டகர்மந் திலதப் போக்கு
நாட்டுகிறேன் அஞ்சணமும் அரைப்பு வித்தை
நலமான வாதமொடு வயித்தி யந்தானும்
பூட்டுகிறேன் யோகமொடு ஞானந் தானும்
பொறிகளஞ் சும் ஒன்றாக்கும் புலன்கள் தன்னை
தேட்டிலையும் அதிகமடா பிரமந் தன்னை
சிவநிலை சிவநிலையாய்த் தெளிந்து பாரே // ௩.

பாரப்ப ராச ராசாங்க யோகம்
பார்தனிலே ஆறிவார் கோடிக் கொன்று
ஆரப்பா ஆதாரம் வெவ்வே றென்றும்
அகமகிழ்ந்து பாராமல் அறிவாங் கெட்டு
நேரப்பா பன்னிரண்டு தலங்க ளென்றும்
நிர்விகற்ப சமாதியையும் அறியா மற்றான்
வேரப்பா பலவிதங்கள் நூல்கள் பார்த்து
வெட்டவெளி அந்நூற்றின் விபரங் காணான்.
சாரப்பா. தனையறிந்தால் யோக மார்க்க
தந்திதனைக் கடந்துநின்றாங் மௌன மார்க்கே // ௪.

2. ஆமென்ற மயிர்ப்பாலம் நெருப்பாறுந் தாண்டி
ஆறுமுக வேலனென்று அருளும் பெற்று
ஓமென்ற பிரணவமே சுழிமுனை வீடு
ஒருகோடி ரவிபோலே காந்தி மீறும்
நாமென்ற சொல்லற்று நந்தி யூடே
நாற்பத்தி முக்கோண மேலிற் சென்று
காமமென்ற காமதேன் கற்ப கத்தைக்
கருவறிந்து கண்டவனே ஞானி தானே // 5

தானென்ற ஆணவத்தா லுலகம் பாரார்
சஞ்சார சமாதியினால் மௌன மாகும்
ஊனென்ற ரவிமேலே மதிதான் நிற்கும்
உற்றுப்பாரந்திடமே கர்ம பீடம்
கோனென்ற அந்திடமே பிரம பீடம்
கோடிகரு நெல்லியுந்தான் குளிர்ச்சி காட்டும்
தேனென்ற கனையெடுமைப் பாது மேத்த
சித்தர்கள்தான் ரகசியங்கள் செப்பு வாரே // 6

செப்புவா ரண்டவச்சிக் குள்ளே மூலம்
சிவசிவா சோதியுட விருட்ச முண்டு
முப்பொருளு மொன்றாக நிறுத்தி மைந்தா
முடிவிலொரு லாடக்கண் திறந்து பார்க்க
கற்பூர தீபம்போல்ச் சோதி காணும்
கபாலவுச்சி முதுகுவெளி யேறிப் பாயும்
தற்பரத்தி அன்னையுந்தா ஜசாத் தாக்கும்
சாதகமாய் நீயறிந்து தனித்து நில்லே // 7.

அ. நில்லடா ரேசித்துக் கும்பித் தேதான்
நிறுத்தடா பூரித்து நிலையால் நில்து
வில்லடா வில்விசையைப் பார்க்கும் போது
விட்டகுறை தொட்டகுறை இரண்டும் காணும்
கொல்லடா கருவிகரு மரண்டு போகும்
கூறாத மந்திரத்தின் குறியைக் காட்டும்
அல்லடா ஆதிவஸ்த்தும் அனாதி வஸ்த்தும்
அருமையுட னொன்றாகச் சேர்த்துப் பாரே // 8.

பார்க்கையிலே அகத்தியமா முனியே கேளு
பன்னிரண்டு அங்குலந்தான் பாயும் போது
ஏற்கையிலே சந்திரன்தான் நாளும் போச்சு
என்மகனே தேகமுந்தா னிறந்து போகும்
கார்க்கையாலே நாளையுந்தா னெட்டில் சேரு
3. கலங்கலரவி யொன்றாகக் கலந்து போகும்
மார்க்கமுடன் னறியாமல் மனிதர் தானும்
மாண்டிறந்து போவதற்கு வருந்து வாரே // 9

வருவதுவும் போவதுவும் யோகந் தானும்
மகத்தான கற்பமொடு மௌனந் தானும்
திருவதுவாம் வாதமொடு வயித்தியம் தானும்
தீர்க்கமுடன் அஞ்சனமும் திலதப் போக்கும்
மருவதுவாம் அஷ்டகர்மம் அரைப்பு வித்தை
மகத்தான ஐம்பதொரு ரட்சரங்கள் தன்னை
குருபரனே யதுசொல்ல வேணு மென்று
கும்பிட்டே னிருதாளைப் பணிந்தேன் பாரே // 10

பாரேநீ அகத்தியமா முனியே கேளு
பார்தனிலே அறுபத்துநாலை யோக மென்று
சீருகெட்டுத் திரிந்தவனு மிறந்து போவான்
செப்புகிறேன் ராச ராசாங்க யோகம்
ஆறாறுவை றறியாமல் வேதஞ் சேர்த்து
ஐம்பத்தோ ரட்சரமு பேத மாக
அ. கூறாகச் சொன்னதுபோல் மனிதர் தன்னை
கொல்லுதற்கு ஒப்பனையாய்க் கூறினாரே // 11.

கூறினால் ராச ராசாங்க யோகம்
குறிப்பறிந்து சொல்லுகிறேன் மகனே கேளு
வீரிய மாகவந்தான் மனதொன் றாகி
விந்துவடா புருவமதை உருவிப் பாரு
சீறியே ரவிதனையும் மதியிற் சேர்த்து
சித்தமுடன் னக்கினியால் ரவியே சேரு
மாறியே மனக்கண்ணி னாலே பார்க்க
மக்தான யோகமுந்தான் கைக்குள் ளாச்சே // 12

ஆச்சென்ற அரிக்குமுத வைகுந்தைக் கண்ணான்
அதிலடங்கும் வட்டமுந்தான் விந்தும் பாரார்
மூச்சென்ற விந்துவல்லோ இம்மைக் னாச்சு
முடிவான அகாரமுந்தான் சேர லாச்சு
நீச்சென்றே திரியாமல் இருந்து கொண்டு
நிருவிகற்ப சமாதியிலே நிலையில் நின்று
வீச்சென்றும் பொய்தொழில்கள் செய்திடாமல்
வேதாந்தச் சாரணையை விரும்பித் தீரே // 13.

4. விரும்பியே மூலமடா அண்டத்துச்சி
வேதமடா சந்திரன்றான் நாலு மிச்சம்
திரும்பியே போறதுவும் வாறதுவும் ஒன்றாய்
சிவத்தோடே சேராமல் சிதறிப் போனால்
துரும்புபோல் ஒன்தேகம் பறக்கும் பாரு
சோதிமணி துலங்குகின்ற யிடமுங் காணான்
கரும்பினையும் ரசனையடா மதுவைக் காணான்
காலனுக்கு ஆளாகப் போவான் றானே // 14.

தானென்ற ஆணவத்தைப் போக்கி நீங்கள்
தனித்திருந்து யோகமென்ற தவமே செய்தால்
கோனென்ற குண்டலியாம் அண்டத்துள்ளே
கோடிரவி போலவந்தான் கீர்த்தி மீறும்
ஊனென்ற கண்டத்தில் கபமே போக்கு
உன்மனதில் நினைத்தபடி ரூபங் காட்டும்
தேனென்ற அருவியாங்கே அமிர்தம் பாயும்
திரையேனுங் கிழிந்துமிகத் தீர்க்க மாமே // 15

அ. தீர்க்கமடா யோகமுந்தான் முடிந்த போது
சித்திநா விநாயகனார் செயலிதன் னாலே
பார்க்கையிலே மவுனத்தி லடங்கிப் போகும்
பன்னிரண்டு முகத்துடன் வன்னி சென்று
காக்கையிலே முப்பாழுங் கடந்து செல்லுங்
கர்மமென்ற வினைகளெல்லாம் கடந்து போகும்
ஏற்கையிலே யிருதயத்தை ஒன்ற தாக்கி
எட்டிரெண்டும் ஒன்றாகச் சேர்த்துப் பாரே // 16

பாரடா யெட்டிரெண்டும் அறியாத் தோசி
பரப்பிரமந் தன்னுடைய பாதங் காணான்
ஆரடா யெட்டிரெண்டும் யேதென் றாக்கால்
அப்பனே அகாரமல்லோ சந்திர பீசம்
மேரடா சூரியந்தா னுகார மாகும்
மேன்மையுள்ள சிகாரமந்தான் வன்னி வன்னி
வேரடா சந்திரனைச் சூரியனில் சேர்த்து
விட்டிறை தொட்டிறை தெரியுந் தானே // 17.

௫. தொட்டிறை சொல்லுகிறேன் சூரிய கீதம்
துலங்குமடா வன்னியுந்தா னதின்மேல் நிற்கும்
வட்டமிட்ட சூரியன்றான் அக்கினியில் சென்று
வடவரையா னுச்சியின்மேல் மாறிப் பாயும்
திட்டமடா னக்கினியும் பிரம கிட்டில்
சேர்ந்துமிகச் சேர்ந்திடவே அமிர்த மாகும்
நட்டணையாய்த் திரியாதே நாத விந்து
நாற்பத்தி முக்கோணம் நின்றதானே // 18

தானென்ற அன்பத்தோ ரட்சரத்தைக் கேளு
சத்தியமாய் மனதடங்கி அண்டத் துள்ளே
ஊனென்றும் பாயுமடா உந்தன் அன்பு
ஒன்றான அட்சரமே பிரமந் தன்னில்
கோனென்று ஒருவகிரிலை பெற்று மைந்தா
கோடிரவி மதியானுடை காந்தி யாலே
தேனென்ற அண்டவச்சி தன்னைச் சத்தித்
திருவான பஞ்சாட் சரமி தாச்சே // 19

அ. ஆச்சடா கருநெல்லி மரமி தாச்சு
அப்பனே வெண்சாரை சந்திரன்தா னாகும்
மூச்சடா அக்கினியோ சுணங்க னாகும்
முகுதுமடா கணையெருமைப் பாலுண் டாச்சு
நீச்சடா விருச்சகந்தான் சோதி சோதி
நிலையான சோதியென்றால் மௌன மாச்சு
வாச்சடா இம்மென்ற மவுனந் தன்னை
வழமாக அறுதினமும் நிறுத்திப் பாரே // ௨௦.

பாரப்பா அஷ்டகர்மம் சொல்லக் கேளு
பார்தனிலே சிங்கென்று எழுதி மைந்தா
நேரப்பா ஐங்காயம் ஐந்து பூதம்
நினைவான எழுத்தையுந்தா னிரவில் கட்டி
வேரப்பா விநாயகனை அதின்மேல் வைத்து
வீரான மதிதனையும் ரவியிற்ச் சேர்த்து
சேரப்பா ரவிதனையும் அக்கினியிற் சேர்த்து
சிங்கென்றே எதிரியைத்தான் திடமாய்ப் பாரே // ௨௧.

6. திடமாகப் பார்க்கையிலே நினைத்ததுதான் போலே
தீர்க்கமுடனாருமடா அஷ்ட கர்மம்
வடவரையில் உச்சியுந்தான் கிழிந்து போகும்
மாரியும்நீ தீர்ப்பதற்கு வகைதான் கேளு
அடவடனே அக்கினியைச் சூரியனிற் சேரு
அப்பனே சூரியனை மதியிற் சேரு
நடணமிடு அங்கென்று நிறுத்திப் பார்க்க
நலமான கர்மமெல்லாம் பறக்கும் பாரே // ௨௨

பறக்குமடா அஞ்சனத்தின் வகைதான் கேளு
பார்தனிலே தனைப்பிண்டத் தயிலம் வாங்கி
நிறைக்குமடா திகைப்பூடு சாகா மூலி
நீலியுடன் கருந்தும்பை நீலப் பச்சை
சிறக்குமடா தேவாங்குப் பித்துஞ் சேரு
தீர்க்கமுடன் கரும்பூனைத் தயிலம் வாங்கிச்
சரக்காக உணத்தியின் தயிலந் தன்னை
சத்தியமாய் கல்வத்தில் ஆட்டிப் பாரே // ௨௩.

அ. பாரடா பூமியுந்தான் பிளந்தே யோடும்
பாலகனே மறைப்புவித்தை சொல்லக் கேளு
ஆரடா பெயிரிய்க்கு நிலம் போலே
அடவான புல்லாமணக்கு அதுபோலாகும்
நீரடா கருந்துளசி குன்றி வேரும்
நிலையான கருடன்கிட்டை நிலையாவாரை
தேரடா யிதுவெல்லாம் ஒன்றாதாகத்
தீர்க்கமுடன் முன்சொன்ன தயிலஞ் சேரே // ௨௪.

சேரடா கல்வத்தி லிட்டு நன்றாய்த்
தீர்க்கமுடன் கேசரியின் பீசஞ் சேர்த்து
ஆரடா சாமமுந்தா னாது மட்டும்
அரைத்ததையும் நன்றாகப் பதனம் பண்ணு
நேரடா சமாதொடு புருகுஞ் சேர்த்து
நிலையான புருவத்தி லிட்டு நன்றாய்
வேரடா பார்க்கையிலே ஒருவர் காணார்
வீரான வசியமுந்தான் சொல்லக் கேளே // ௨௫.

7. கேளடா கேசரியின் பித்தும் ராகும்
கிருபையுடன் யிப்புலியும் கண்ணாடிப் பூச்சி
ஆளடா கெருடன்முட்டை பச்சோந்தி யாகும்
அப்பனே அழல்வண்டு திகைப்பூ டாகும்
கோளடா யிருவா லரணை யாகும்
கூறுகிறேன் ஞாய்க்குருவி சமூலம் வாங்கி
வாளடா யிந்திர கோபப் பூச்சி
மயில்பித்து வராகத்தின் பித்துங் கூட்டே // ௨௬

கூட்டியே வெள்ளையாவரைத் தயிலம் வாங்கி
கூறுகிறேன் கருங்கொம்மட்டி யிலையுஞ் சேர்த்து
நாட்டியே யிவழைவையும் கல்வத் திட்டு
நலமாக முன்சொன்ன தயிலம் விட்டு
தாட்டிகமாய் அரைத்திடுவாய் நாழு சாமம்
சத்தியமாய் அரைத்ததையும் வழித்துக் கொண்டு
பூட்டியே சுபாதோடு புனுகு சேர்த்து
புருவநடு மத்தியாலே பொட்டுப் பாரே // ௨௭

போடப்பா யின்னாலிற் சொன்ன மையிக்கி
பூரணமாய் முன்சொன்ன அஷ்டகர்மம் போலே
நாடப்பா ரவிமதியும் சுடர்தான் மூன்றை
நலமான பிரமத்தில் சேர்த்து மைந்தா
கூடப்பா சிவகென்று மௌனம் பூட்டிச்
சூரித்துநீ மையாடவே கொடுமை மெத்த
சாடப்பா உலகத்தில் தெரிந்திடாமல்
சத்தியமாய் மையதனைப் பதனம் பண்ணே // ௨௮.

பதனமடா கெந்தியொடு வீரம் பூரம்
பதிவான (ஏரி) தாரமொடு லிங்கந் தானும்
அதனமடா நீற்றுதற்கு வகைதான் கேளு
அப்பனே கருநொச்சிச் சாகா மூலி
நிதனமடா குமரியைத்தான் றமைத்து நன்றாய்
நேசமுடன் சரக்குகளை யிணமாய் வைத்து
விதனமினி வாராமல் மூலிச் சாத்தை (சாற்றை)
விட்டுநன்றாய்க் குக்குடத்தின் புடந்தான் போடே// 29.

போட்டுநீ யெடுத்துமிகப் பார்க்கும் போது
8. பத்திரனே வெண்மையாய் நீறிப் போகும்
நாட்டிலே யெற்தெந்த வியாதிக் கெல்லாம்
நலமான அனுபானந் தன்னில் சேர்த்து
வாட்டமினி வாராமல் கொடுக்கும் போது
வந்தவினை பறக்குமடா மைந்தா கேளு
தாட்டிகமா யுவருப்புக் கரைத்து நன்றாய்
சத்தியமா யாருத்ததையும் காச்சிப் பாரே// 30

பாரப்பா உப்பதனை யெடுத்து நீயும்
பரிவான வேகாத மூலிச் சாறும்
நேரப்பா விட்டதையும் உருக்கிப் பாரு
நிமிசத்தில் மணிபோலே திரண்டே நிற்கும்
சேரப்பா தாம்பரத்தை யுருக்கி மைந்தா
சிவசிவா முன்சொன்ன மணிகள் தன்னை
வீரப்பா வைத்திடுவாய் யுருகும் போது
வேகமுடன் தங்கமுந்தான் பத்தரையு மாமே// 31.

ஆமடா பத்தரையு முப்பத்தி ரண்டில்
அடக்கிவிட்டேன் ஆறுமுக வேலன் தானும்
ஓமடா பொரித்தமுட்டை மூன்று தன்னில்
ஒருமுட்டை யெல்லாம வருந்திக் கொண்டேன்
கோமடா கருவியெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
கதிரொளியாஞ் சுசிமுனையைக் காண வென்று
வாமடா முப்பத்தி ரெண்டுக் குள்ளே
வந்தவர்க்கும் என்னாளும் வருந்த முற்றே // 3௨.

குமர குருபரன் றுணை. வேலும் மயிலும் துணை.

---

௨3. ஹரிஓம் சுப்பிரமணியர் அகத்தியருக்குபதேசம் முப்பத்திரெண்டு - 3௨.

ஒளியான சுழிமுனையிலே ஒடுங்கி நல்ல
உத்திகளை வாசிசிவ யோகத் தேகி
வளியான துறையறிந்து மவுனங் கொண்டு
மகுத்தான அண்டவரை முடிமேலச் சென்று
தெளிவான ஓங்கார வடிவேல்க் கொண்டு
தெளிந்துமன திறிவதனால் தன்னைக் கண்டு
வெளியான பரவெளியே வாச மாகி
வேதாந்த சத்திசிவம் ஆதி காப்பு // 1.

ஆதியிலே பராபரத்தில் பிறந்த சத்தம்
அருஉருவாய் நின்றபர சிவனு மாகி
சோதியென்ற சிவனிடமாய்ச் சத்தி யாகித்
தொல்துல்கி லைகுவகையான் தோற்ற மாகி
நீதியென்ற அறிவதனால் தானாய் நின்று
நிறைந்தபரி பூரணமாய் நிற்களமு மாகி
சாதியென்ற சத்திசிவ னருள்தன் னாலே
சண்முகமாஞ் கணபதியுந் தானுண் டாச்சே // ௨.

அ. உண்டான சத்திசிவம் யோக மாகி
உளாங்கனிந்து பிறணவமாய் நிற்கும் போது
குண்டான மாங்கனியைக் கையில் வாங்கி
குமரனுடன் கணபதியைக் கூர்ந்து பார்த்து
நன்றாகக் கிறிவலமாய் முன்வந் தோர்க்கு
நல்லகனி தானியவோ மென்று சொன்னார்
பண்டான கனியருந்தக் குமரன் தானும்
பாய்ந்துமயா லேறிகிறி வலம்சென் றாரே// 3

சென்றபின்பு கணபதியும் ஆலோசித்து
தீர்க்கமுள்ள மெருகிறி னிர்தா னென்று
கண்டபின்பு சிவனுமையாள் பாதந் தன்னை
கருத்துடனே சுத்திவந்து கனியை வாங்கி
கொண்டுவந்து சிவனுமையைத் தியானம் பண்ணி
குறியறிந்து நெறியறிந்து குருவைப் போற்றி
தின்றுருசி கண்டறிந்து உண்ணும் போது
தீர்க்கமுள்ள கணபதியை வாவென் றாரே// 4.

௨4. வாவென்று யெடுத்தணைத்து அருள்பாலியந்து
மகத்தான ஐவருக்கும் பீடமாகி
ஆமென்று மூலமதுக் கற்சாய னின்று
அஞ்செழுத்துக் குயிராகி ஆதி யாகி
கூவென்று சத்தசித்த சுத்த மாகி
குவிந்தைகுந்த வாசிதிரு தேவி யாகி
பூவென்று ஆயரத்தெண் மலருக் குள்ளே
பொதிந்திமனே தரிவதனா லிருந்து வாளே// 5

வாருமென்று சொன்னவுடன் மயிலில் ஏறந்தான்
அ. மகத்தான சிவசக்தி பதமேல் கொண்டு
ஆனென்று மயிலேறிக் கயிலா சத்தை
ஆவலுடன் சுத்திவரும் போதி லேதான்
சூனென்று யமையகிரி வடபாகத்தில்
சுத்தசித்த மானதபோதனரைக் கண்டு
தானென்று வணக்கமாய் நிற்கும் போது
தபோதனரும் நிஷ்டிமுனியுந் தான்வந் தாரே // 7.

வந்தவரைத் தான் பார்த்து வணங்கி முன்னே
மகத்தான சற்குருவென் றடிப ணிந்து
யிந்தமலைச் சாரலில்வெகு நாளி ருந்து
இன்பமுடன் தபசிருந்தோ மிப்போ தையா
அந்தரமா யசுரர்கள்தான் கூடிக் கொண்டு
அடியளும்பு செய்யுகிறார் அகந்தை ரெம்ப
சுந்தரமாய் யருந்தபசு காரு மென்று
சுத்தசித்த மாய்த்தவத்தில் துடங்கி னாரே // 8

துடங்கிமன தடங்கிநிலை தன்னைக் காத்து
சுத்தமுடன் நின்றவிளை யாடும் போது
அடங்கிமன தடங்கிநிலை அசுரர் தானும்
அடியளும்பு செய்ததொரு அகந்தை பார்த்து
திடங்கவிந்து மயிலேறிச் சேவல் கொண்டு
சினந்துவரும் அசுரர்களை மான வென்று
படங்குவிந்து வேல்முனையைத் தியானம் பண்ணி
பாயவிட்டேன் அசுரர்களை பறந்து போச்சே // 9

௨5. பறந்துபோய் பலவிதமாய் ரூபங் கொண்டு
பந்திபந்தியசுரர் பாய்ந்து வந்தார்
சினந்துவந்த சேனைகளை நன்றாய் பார்த்து
தீர்க்கமுள்ள மயில்வீரன் தெளிந்து கொண்டு
அறந்தனைக்க வேணுமென்று தான சூட்சம்
அரூபமென்ற காரணமாய் ரூபங் கொண்டு
நிரந்தரமா யசுரர்கிளை வந்த தெல்லாம்
நிர்தாளி செய்துசெய்து செயம்நிலைகண் டாரே// 10

நிலைகண்டு நின்று செயங்கொண்ட சித்தை
நேர்மையுள்ள தவமுனியும் ரிசிக ளெல்லாம்
கலைகண்டு மனந்தெளிந்து மகிழ்ச்சி யாகி
கானமயில் வீரனடி கருதிப் போற்றி
தலைகொண்டு தான்பணிந்து அருள்க்கண் பெற்று
தபோதனரும் ரிசிமுனியும் சந்தோசித்து
சிலைகொண்டு நின்றவடி வேலர் தன்னை
தெரிசித்து அவரவர்கள் பதிசென் றாரே// 11

பதியறிந்து அவரவர்கள் செல்லும் போது
பத்தியுள்ள அகத்தியமா முனிதான் வந்து
விதியறிந்து அசுரர்கிளை மாள வென்று
வெத்தியுள்ள வடிவேலைத் தியானம் பண்ணி
கதியறிந்து தானுமுடன் சூட்ச மாகிக்
கிருபையுள்ள காரணமாய் ரூபங் கொண்டுத்
திதியறிந்து சங்காரஞ் செய்தீ ரையா
சண்முகமே யென்குருவே சரணந் தானே// 1௨.

அ. சரணமென்ற அகத்தியமா முனியைப் பார்த்து
சண்முகமாய் நின்றவடி வேலர் தானும்
திரணமதாயித் தானினைந்து நீயா றென்றார்
திருவடியைப் பூசைசெய்யுஞ் சேயனென்றார்
கரணமந்தக் கரணமதால் வந்த சேயை
கருணையுடன் வாருமென்று கடாட்சம் நல்கி
தருணமறிந்து தவ்வமே தருண மென்று
சாவ்கையுடன் வந்தவகை தான்சொல் வீரே //13.

சொல்லென்று மயில்வீரன் கேட்க்க அந்த
சோதிமய மான அகத் தீசர் சொல்வார்
சல்லென்று வந்ததொரு அசுரர் தன்னை
சண்முகமாய் நின்றவடி வேலுங் கொண்டு
செல்லென்று சங்காரஞ் செய்தீ ரையா
திருவுருவாய் நின்றகா ரணத்தைக் காட்டி
உல்லென்ற ஆதார அவ சூட்சம்
உண்மையென்ற காரணத்தை உரைசெய் வீரே //14.

உரைசெய்வீ றென்றுசொன்ன உறுதி கேட்டு
உண்மையாய் மயில்வீரன் உறுதி யாக
உ6. நிறைசெய்து யெக்கியங்கள் தானுண் டாக்கி
நேமமுடன் அகத்தியமா முனிவா வென்று
அறையறிந்து அருகிருந்தி யடி குண்டம்
அத்தியென்ற மந்திரத்தா லக்கினி யுண்டாக்கிப்
புரையறிந்து மந்திரங்கள் செபிக்கும் போது
பூரணமாங் கும்பகத்தில் தானுண் டாச்சே //15

உண்டான பூரணமாய் கும்பம் வாங்கி
உண்மையென்ற மாமுனிக்கு அபிசேகித்து
நன்றாக விபூதிதா னிதமே செய்து
நாட்டமுடன் தானிருந்து நயனாய் காட்டி
~~குன்றாக அனுக்கிரக வாசல் காண~~
~~குவிந்துமனை தறிவாளே~~
நின்றாமே நவக்கிரகம் ஒன்பதுக்கும்
நிலையான அனுக்கிரக நிலையுங் காட்டி
குன்றாக அனுக்கிரக வாசல் காண
குவிந்துமனை தறிவாளே விண்ணென் றானே // 16.

விண்ணென்று விசையுடனே மணிநா வுன்னி
மெய்யான தமர்வாசல் திறக்கும் போது
கண்ணென்று கபாடவெளிக் குள்ளே நின்று
கலையறிந்து வாசியினாலே கமலம் நோக்கி
உண்ணென்று மேலமதில் வங்கென் றாதி
உண்மையென்ற தமரதிலே சிங்கென்று நேசி
யெண்ணென்று யப்படியே கொண்டு நின்றால்
யேகமென தசதீட்சை உண்மை காணே // 17.

உண்மையுடன் சுழிமுனையாலே விண்ணென் றானி
உறுதியுட னாதார தீட்சை கேளு
அ. நன்மையுடன் ஓம்கிலீம் ஐங்கென்று
நாட்டமுடன் ஸ்ரீணாறு உருவே செய்தால்
தன்மையுள்ள கணபதியும் பிரகாசிப்பார்
தானமென்ற சுழிமுனையாலே தன்னைப் பார்த்து
நன்மையு~~டன்~~ ஓம்நமசிவாய மென்றால்
நோக்குமுன்னே பிரமனுட ~~தனி~~ சினைமமாமே // 18

ஆமப்பா மசிவயந சிவய நமவென்று
அதின்பிறகு வயநமசி யநமசிவ வென்று
நாமப்பா தலைகாலாய் மாறிக் கொண்டு
சாங்கையுடன் கால்தலையாய் மாறக் கேளு
ஆமப்பா வயநமநமசி சிவயநம வென்று
அதின்பிறகு மசிவயந வென்று தானும்
ஓமப்பா நமசிவய வென்று மாற
உண்மையென்ற ஆதாரஞ் சித்தியாமே // 19

சித்தமுட னஞ்செழுத்தை மைந்தா நீயும்
செம்மையுடன் தலைகாலாய் கால்தலையாய் மாற
சித்தமுட னாதார தேவதைகள் நின்று
சொன்னபடி யாகுதயத்தில் சுகமாய் நிற்பார்
பத்தமுட னிப்படியே தியானம் பண்ணி
பதிவாக விபூதி தானிதமே செய்து
நித்தமுநீ யிப்படியே தியானம் பண்ண
நிசமான தலசூட்சம் நினைக்கும் பாரே // ௨௦

பாரப்பா கலையறிந்து நிலையால் நின்று
பத்தியுட னாதார சூட்சங் கேளு
நேரப்பா ஓங்கிலியும் அங்கென் றோது
நிட்சயமாய் அங்கிலியும் நங்கென் றோது
காரப்பா நங்கிலியும் மங்கென் றோது
கருணையுடன் மங்கிலியுஞ் சிங்கென் றோது
சாரப்பா சிங்கிலியும் வங்கென் றோது
சாங்கையுடன் வங்கிலியும் யங்கென் றோதே //
௨௧.

௨௭. ஓதியபின் வங்கிலியும் உங்கென் றோது
உண்மையுடன் உங்கிலியும் அங்கென் றோது
நீதியுடன் அங்கிலியும் மங்கென் றோது
நிலையறிந்து மங்கிலியும் நங்கென் றோது
ஆதியுடன் நங்கிலியும் ஓமென் றோது
அப்பனே தலைகாலாய் மாறி யோது
சோதியுடன் சுழிமுனையிலே மனக்கண் சாத்தி -
சித்தமுள்ள வாசியைநீ தரித்துக் கொள்ளே / ௨௨

கொள்ளப்பா வாசியைநீ தரித்துக் கொண்டு
கூர்மையுடன் கால்தலையாய் மாறிக் கேளு
சொல்லப்பா ஓங்கிலியும் நங்கென் றோது
சுத்தமுடன் நங்கிலியும் மங்கென் றோது
விள்ளப்பா மங்கிலியும் அங்கென் றோது
விபரமுடன் அங்கிலியும் உங்கென் றோது
உள்ளப்பா உங்கிலியும் மங்கென் றோது
உரிமையுடன் யங்கிலியும் வங்கென் றோதே //
௨௩.

ஓதியபான் வங்கிலியும் சிங்கென் றோது
உத்தமனே சிங்கிலியும் மங்கென் றோது
நீதியுடன் மங்கிலியும் நங்கென் றோது
நிலையறிந்து நங்கிலியும் அங்கென் றோது
சோதியுடன் அங்கிலியும் ஓமென் றோது
சித்தமுனீ ராகு தலமுங் கிட்டி சார்ந்
சீதியென்ற ஆதாரம் மேலாதாரம்
விண்ணடங்கக் கண்ணடங்கி மேவி நில்லு //
௨௪.

அ. நில்லப்பா கண்ணடாங்கி விண்ணென் றாணி
நிலையறிந்து பிறணாயஞ் செய்தால் மைந்தா
கல்லப்பா தேகமதில் காலனேது
காலனென்ற வியாதியெல்லாம் காணாதோடும்
உல்லப்பா வாசியது உறுதி யாகும்
ஓதுகிற மந்திரமுஞ் சித்தி யாகும்
சொல்லப்பா தாலமுடன் சூட்சஞ் சொன்னோம்
துலங்குகின்ற காணத்தின் சுருக்கங் கேளே // ௯௫.

சுருக்கமுடன் ஆதார சூட்சங் கேளு
சொன்னபடி பிறணாயஞ் செய்து கொண்டு
உருக்கமுடன் சாரிணையாலே விண்ணென் றாணி
உறுதியுடன் தமர்வாசல் திறந்து கொண்டு
பெருக்கமுடன் தாணிருந்து தியானஞ் செய்தால்
பிரணவமாய் நின்றதொரு ஓங்காரந் தான்
நெருக்கியந்த அண்டவெளிக் குள்ளே சென்று
நேமமுடன் பிறணாயம் நினைவாய்ச் செய்யே // ௯௬

செய்யப்பா பிறணாயம் நினைவாய்ச் செய்ய
சிவசிவா குருமானஞ் செப்பக் கேளு
பொய்யப்பா போகாது பிராண வாய்வு
பொருந்திநின்று விளையாடும் புதுமை கேளு
வையப்பா சாரிணையாலே விண்ணென் றாணி
பதிவாக மூலமது வங்கென்று பூரி
செய்யப்பா சாரிணையாலே சிங்கென்று ரேசி
திருவான கண்டமதில் அங்கென்று கும்பி // ௯௭.

28. அங்கமுடன் கண்டமதில் கும்பித் தேதான்
அசையாது வாசிதிரு வாசி தானும்
செங்கமல மானதொரு சுழியண்டத் தேரும்
திரும்பியந்த பிண்டமதில் சென்று வாகும்
சங்கையுடன் தன்னகத்தில் தான்தா னாகி
தன்மையுடன் நின்றவினை யாகும் வாசி
மங்களமாய்ச் சுழிணையிலே விண்ணொன் றாணி
மார்க்கமுட னிகபரமாய் மகிழ்ந்து காணே // 28.

காணவே சத்தியுட தியானந் தன்னைக்
கருணையுடன் சொல்லுகிறேன் கருவாய்க் கேளு
பூணவே ஓம்றீம் அங்சிங் கென்று
புத்தியுடன் பதினொரு உருவே செய்து
தோணவே விபூதி தானிதமே செய்தால்
சுத்தமுள்ள பராசக்தி நிர்த்தஞ் செய்வாள்
ஊணவே யப்படியே தியானஞ் செய்தால்
உண்மையுடன் பிராணயம் உறுதி பாரே // 29.

உறுதியுள்ள அகத்தியமா முனியே நீதான்
உண்மையுள்ள சத்தியைத் தியானம் பண்ணி
பருதிமதி சுடரொளிபோல் பஞ்ச கர்த்தாள்
பதியறிய பிராணாயம் பதிவாய்ச் செய்து
சுருதி பொருளானதொரு பொதிகை மேவிச்
சுகசீவ பிராணகலை வாசி யேறிக்
கருதிமன தொன்றாகச் சுழிமே னின்று
கமலமலர் அமிர்தரச பானங் கொள்ளே // 30

பானமென்ற மதியமிர்த பானம் கொள்ளப்
பரப்பிரம மானசுழி வெளியுங் காட்டி
அ. தானமென்ற ஆதார மேலா தாரம்
தனையறியப் பிராணாயஞ் சூக்கை சொல்லி
ஞானமென்ற நிலைகாட்டி நாட்டங் காட்டி
நனையறிந்து நாதாந்த ஆறுமுக நிலையுங் காட்டி
மோனமென்ற வடிவேல்தன் முனையுங் காட்டி
முனையறிந்து கலையறிந்து முடிமேல் நில்லே // 31.

நில்லப்பா சதுரகிரி முடிமேல் சென்று
நிலையான பொதிகையாலே வாசமாகி
உள்ளப்பா தானாகி விண்ணென் றாணி
ஒன்மனதில் நினைத்தொரு மந்திரந் தன்னை
சொல்லப்பா தியானமுடன் செபிக்கும் போது
சுத்தமுடன் சித்திக்கும் சுகமாய் நின்று
சொல்லப்பா அஷ்டாங்க யோகத் தெளிச்
சிவாயவொரு பாதமதில் தெளிவாய் நில்லே // 32

தெளிவான தெளிவதனால் தன்னைப் பார்த்து
தீர்க்கமுட னிருந்துதவஞ் செய்வா யென்று
வளியான அனுக்கிரக வரமு மீய்ந்து
மார்க்கமுடன் மெய்வீரன் வடிவேல் கொண்டு
அளியாத அண்டவரை முடிமேற்சென்று
அஷ்டகிரி பருபதத்துக் காசமாகி
ஒளியாகி யண்டவெளி யெங்கு தானாய்
ஓங்கார வடிவேலா யுகந்தார் முன்னே // 33

ஸ்ரீவால தண்டாயுத பாணியார் பாதார விந்தமே
துணையாக வேண்டியது. வேலும் மயிலும் துணை.
வேலுஞ் சேவற் பதாகையன்.

ஹரிஓம் சுப்பிரமணிய சுவாமிகள் அருளிச் செய்தது - 16:

முந்தியே ஓங்காரச் சுடர்போன் றாலே
முனைதாண்டி முச்சந்தி நடுவே சென்று
சந்தியே சிறுவாசல்க் குள்ளே நின்று
சீவாத்மா பரமாத்மா ரண்டு மொன்றாய்
சாந்தியே நாற்பத்தி முக்கோண மேலில்
நடுவொருக்கின் குண்டலியின் நடனம் பெற்று
சந்தியானே முப்பழமும் அதிர்ந்த முண்ட
தந்திபதம் பணிந்துகெச் சாற்று வோமே // 1.

சாற்றுகிறேன் ராச ராசாங்க யோகம்
தன்மையுள்ள அகத்தியமா முனியே கேளு
மாத்திரையு மதிகமடா முப்பத்தி ரெண்டு
மௌனமெல்லாம் வெளியாக்கிப் பதினார் தன்னில்
தாற்றுகிறேன் சக்கரையடா மூல வீட்டில்
தருவமென்றுந் தரியாத் திதந் தன்னில்
கூத்திரையு மதிகமடா நடனங் காணும்
கோடிவரை யாருந்தானும் மௌனம் பாரே // 2.

அ. பாருநீ காகரத்தின் விந்துக் குள்ளே
பன்னிரண்டு முகமுள்ள வன்னி யாலே
கூறுநீ ரவி மதியுங் குண்டலியிற் பாயும்
குக்கலென்ற மாத்திரை கூர்மை யாலே
வீறுநீ மேதடாங்கி அதினுள் தாக்கி
வட்டகிணறு தொட்டகிணறு விதியைப் பார்த்து
சூறையிட்டு அசுரர்களை வதைத்த தாலே
சுப்பிரமணிய னென்று சொல்லி நமக்குப் பேரே //

வேலும் மயிலும் துணை. வெற்றிவே லுற்றதுணை.

1. ஹரிஹரம் சுப்பிரமணியர் சுத்த ஞானம் 100:

சீரப்பா ஆகாசப் பெருமை சொல்வேன்
செப்பார்கள் சித்தர்தனிலே சித்த ரையா
ஆரப்பா வென்னைப்போலே அறிந்து சொல்வார்
ஆதியந்த மிரண்டுமொன்றாய் யறியச் சொன்னேன்
பேரப்பா கஸ்தூப கலந்திடமே யாச்சு
பேராக வந்ததுவே நகார மாச்சு
சேரப்பா யதுவல்லோ யரண்டு மாச்சு
செப்பாமல் சித்தரெல்லாம் மறைத்திட் டாரே// 1

மறைத்திட்ட பொருளையெல்லாம் வெளியாய்ச் சொல்வேன்
மாசற்ற பூரணத்தின் மார்க்கங் கேளு
உரைத்திட்ட நிற்குணத்தின் வெளியா னாலே
உத்தமனே வாய்வாச்சு உறவு மாச்சு
நிறைத்திட்ட மாகின்ற அக்கினையா னல்லோ
சலமாச்சு மண்ணாச்சு செகமு மாச்சு
கறைத்திட்ட மாகின்ற வாருதியா னல்லோ
கண்காலி தோற்றமுமாய்க் கலந்த வாறே// ௨.

கலந்துநின்ற இருண்ட வெளி வான முட்டைக்
கயிலாய மென்பதுவே ஆன மாச்சு
மேற்றுநின்று மூலமது வட்டந் தானே
வளமான பிரமாவின் லோக மாச்சு
சேர்ந்திரண்ட அம்பதுவே செயாய் நின்று
திறமான விஷ்ணுவட லோக மாச்சு
குவிந்திரண்ட சக்கிலத்தால் மேன்மை லோகம்
குறியாகச் சொல்லிவிட்டேன் குவித்துப் பாரே// 3.

அ. பாரப்ப யந்தவட்டம் ஒன்று விட்டில்
பண்பாகச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
நேரப்பா மும்மூர்த்தி பிறந்தி ருந்தார்
நீதியுடன் பெரியோர்கள் பிறந்திருந்தார்
சீரப்பா தேவதைகள் பிறந்திருந்தார்
மேதினியில் மனுமாந்தர் பிறந்திருந்தார்
சேரப்பா ஆணைமுக லெழும்பு அந்தம்
செகமெல்லாம் முளைத்தெழுந்து திரண்ட வாறே // 4

வாரான வுலகத்தில் மனுக்க ளெல்லாம்
வரிசையுட னுண்டிருந்து மயக்கஞ் செய்வார்
மாறான பாவங்க ழுந்திதஞ் செய்வார்
வுண்மையுட னெட்டெழுத்தின் கூற்றைக் காணார்
பேரான சிவயோகப் பெருமை காணார்
பேருலகில் மனுவென்றும் பெருமை சொல்வார்
கூறான வோரெழுத்தின் கூற்றைக் காணார்
கிரியாகச் செபஞ்செய்வார் குருட்டு மாடே // 5

இ. மாடென்றா லோரறிவா யிருக்கும் மப்பா
மனுசருக்கு பலபுத்தி மாயிணைக்க யுண்டு
வீடென்றால் துணையிருக்கும் சுவரான மானால்
வீட்டிடு யாருள்கண்டால் இளைச்சுக் கொள்ளும்
காடென்றால் வெகுவுயிர்க்கு உதவி யுண்டு
கானிலே போனவர்க்கு நிழலு முண்டு
மேடென்றால் வெகுதூரம் தோணச் செய்யும்
மெய்யுள்ளா னிவ்வளவும் விரும்பிப் பாரே // 6

விரும்பவென்றால் விட்டகுறை தடுக்க வேணும்
வேதாந்த பெரியோர்க ளிரக்கம் வேணும்
கரும்பென்ன யினிக்குமோதான் கருத்துள் ளோனே
கரும்புதின்றால் மதுருசை யன்பாய் காணும்
பெரும்பாதை யறியவென்றால் விண்ணைப் பாரு
பேரறிவாளர் பெரியோர்கள் பதனஞ் செய்வார்
அரும்பாராய் குழல்மொழியார் சிவனாய் கூட
அகத்தியமுனி சொன்னதில்லை யறிந்து பாரே // 7.

பாரப்பா யான்செய்த படியே சொல்வேன்
பார்பிசும்பின் பெரியோர்கள் பகரக் கேளு
தேற்ப்ப உச்சியென்ற வட்ட மீதில்
தெளிவாக ஓங்கார மிட்டு நின்றாய்
வாரப்பா அகாரமென்ற எழுத்தை யூணி
வாவாவா வென்றுசொல்லி மனத்தி னுள்ளே
கூறப்பா யிதையறிந்து பூசை செய்தேன்
குருபரன்தா னென்றனுக்குபதேசித் தாரே // 8

அ. உபதேசு மனமாச்சு அறிவு மாச்சு
உத்திணர்ந்து பார்த்ததினால் வெளியு மாச்சு
தபதேச முச்சிறிலை மார்க்கஞ் சொல்ல
சதாசிவனு முன்பின்னாய்த் தயங்கி நின்றார்
சிவதேசாய் கங்குல்ப கற்றி உடத்தே சொன்னேன்
சிறதையுணர் தெளிந்துமனம் செப்ப லுற்றேன்
அபதேச மார்த்தரெல்லாம் பொய்ப்பூசை செய்து
அலைந்தார்கள் ஞானரகில் வருந்து வாரே // 9

அழுத்தமுள்ள யோனிக்குள் ளழுந்திக் கொண்டு
அரும்புமிகச் செய்வார்கள் மகத்தை யாக
வெறுத்தவெள்ளை பொய்யென்று காவா கவிகட்டி
மிஞ்சர்களோ சொல்லுகிறேன் விரும்பிக் கேளு
பழுத்தபழம் கொம்பிருக்கப் பருவ மேது
பராபரனை யறியாத பாவி மாரே
கழுத்ததனில் மேலாறுக் கப்பால் நின்ற
கயிலாச வெளியதனைக் கண்டு தேறே // 10

கண்டுடனே நேர்ந்தேறும் காட்சி காணும்
கயிலாசந் தனதாகும் காணி யாகும்
3. வண்டுடனே உசுறுமந்தத் தேனுஞ் சிந்தி
மாசற்ற விஷ்ணுவுட காந்தி காணும்
தெண்டுடனே நின்றதொரு வெழுத்தும் காணும்
சிவசிவா பூரணத்தின் நிறமாங் காணும்
பண்டுடனே அன்னத்தே சேர்ந்து தானால்
பராபரனை நீயறிவாய் பரந்து பாரே // 11

பரிந்துநின்ற கேசரியின் மையமாங் காண
பண்புடனே புருவமத்தி பாரு பாரு
விரிந்துநின்ற அருத்திதன்னை யூதும் போது
மேல்நோக்கி வாயுவது வெளியாய்ச் சேரும்
அறிந்துகொண்டு யிந்தமுறை செய்வாயானால்
அரணருளை நீயறிவாய் யறிவுள் ளோனே
தெரிந்தபடி யான்சொன்னேன் செகத்திலோரே
தோட்டா வொன்றுமில்லை தெளிந்து பாரே //
12.

தெளிந்துநின்ற மேலாறின் வகையைக் கேளு
திறமான நாசிநுனி நடுவே பாரு
சுளிந்துநுனி தீபமது போலே காணும்
துடியிடையாள் ஞானசக்தி உச்சி மேலே
மௌனிந்துநின்ற திசைநாதம் பத்துவிதங் கேட்கும்
முன்னணையால் ரவிகோடி காந்தி காணும்
பிழிந்தரசம் போலமுதி யமிர்த முண்டு
புகழ்ந்துள்ள வெட்டவெளி காணுந் தானே // 13.

அ. காணப்பா அதின்மேலே பதிமூன் றாம்வீடு
கம்குல்ப கற்றவிடம் காலன் வீடு
ஆணப்பா யதிலுள்ளே மனத்தைப் பூண
உத்தமனே யொன்றுமில்லை வெளியு மாச்சு
பூணப்பா ஒரெழுத்து மதுவே யாச்சு
புகழ்ந்த கோரெழுத்து மதுவே யாச்சு
வீணப்பா மனம்போச்சு வினம் போச்சு
மெய்ஞான கூடத்தில் மேவும் போதே // 14.

மேவவதோர் மனத்தாலே தபமு மாச்சு
வேதாந்த நாதாந்தம் இரண்டு மாச்சு
கூவவதோர் கொல்லையடைந்த யடமு மாச்சு
குண்டலியாள் ஞானசக்தி மனையு மாச்சு
பூவவதோர் வாசியென்ற மனமு மாச்சு
புருவமையம் நின்றசுழி கதவ யாச்சு
நாவவதோர் கலைக்கணம் சாந்தம் சாத்திரம்
நால்வேத மெறாறால் மதுவே யாச்சே // 15

ஆச்சப்பா பேச்சற்று முனையு மற்று
அழுமையு மிரண்டற்று அகில மற்று
வாச்சப்பா அல்லற்று பகலு மற்று
வன்மையுள்ள வானற்று வெளியு மற்றும்
பேச்சப்பா யிருளற்றுப் பேதமையு மற்று
பெண்ணற்று ஆணற்றும் பிலமு மற்று
பூச்சப்பா யென்றதொரு புதுமை யில்லை
புலனில்லை புகழில்லை புவியா னோரே // 16

புவியோரே யிவ்வளவு மற்று நின்றால்
புண்ணியவா னவரென்பார் நந்தி யீசர்
கவியோரே வகைவகையாய்த் தமிழே கட்டுக்
காரணத்தைக் கண்டவர்போல் கருதிக் கொள்வீர்
குவியாத மனத்தாலே தவமே யில்லை
குவிந்திருந்தால் ஒருவாறாய் குளியு முண்டு
தவியாத மனத்தானே தயங்கி நின்று
சற்குருவின் பாதத்தை வணங்கி நில்லே // 17

வணங்கிநின்றா லுபதேச முன்னே சொல்லி
வலமடா யேறுகிற பாதை காட்டி
யணங்கிநின்ற குருபதத்தின் மையமாய் காட்டி
யெல்லாரு மொடுங்குகின்ற பாதை காட்டி
புணங்கிநில்லா நிர்க்குணத்தின் பூசை காட்டிப்
புகழ்பெரியோர் வேதாந்த சாரங் காட்டி
இணங்கிநின்று வாடாமல் அறிவா லேற்றக்
கூசாம உபதேசம் செய்பு வாரே //
18.

செப்புவதோ ரறிவாலே மனமே தேறி
சிறுபிள்ளாய் ஞானத்தின் தெற்ப மேறி
உப்புபடி யொன்றுசிலம் படிதா னொன்று
உண்மையுடன் கலந்திருந்தா லொன்று மாச்சு
அப்புவுடன் மண்கலந்த வயிரம் போலே
அகண்டத்தில் மனஞ்சென்றால் வெளியு மாச்சு
தப்புமேல்க் கோலடித்த தொனியைப் போல
தாசர்களோ யக்கருவை விண்ட பேரே // 19

விண்டவுடன் சொரூபமில்லை
வேதாந்த நாதாந்தம் இரண்டு மில்லை
கண்டவுடன் காட்சியுண்டு கருவி யல்லை
கசடற்ற யடம்பா கண்டு பாரு
அண்டர்கோ னனைப்போலே யருந்தா ரையயா
யறியாத குருமூர்த்தி யென்றுர் ளோனே
வெண்டாறால் குழதுமையா னென்மனதே யாகி
வடிவங்கி வீற்றிருந்த வண்மை கேளோ // ௨௦

வண்மையாகும் மிச்சமப்பா யென்தாய் பேச்சு
வளமாகச் சொல்லுகிறேன் வரிசை யாகத்
தண்மையாகும் மிச்சமப்பா தயவு முள்ளான்
சாரமான வாசியதா யிருந்தா னாத்தான்
பெண்மையாகும் ரூபமிது பெருகச் சொல்வேன்
பெயரே யாதுவரிந்து பேணிக் கூடு
வெண்மையாகுந் தலமென்ற ரூபந் தன்னை
வளமாகச் சத்தியென்றும் வசனிப் பாரே //
௨௧.

௫. ~~ச்சி~~ வசனிப்பா ராதியந்த மில்லா மற்றான்
விளக்குரைக்கும் ஐப்பதரே வரிசை கேளு
நிசனிப்பா ராகாசம் வாயு தானே
நிர்மலமாய் நின்மயமாய் நிற்குணமாய் நேரே
விசனிப்பா அவமதை விரும்பிக் கொண்டு
வீணர்களா யநுநரகில் மூழ்கி நின்று
கசனிப்பா ரோணிதன்னை மான மென்று
கட்டுமிகச் செய்துநன்றாய்க் காப்பார் தானே // ௨௨

காப்பார்கள் வாசலிலே அதனை வைத்து
கருவான நரகமதை நாடு வார்கள்
சேர்ப்பார்கள் திரவியத்தை யனேக மாகச்
சேட்டைமிகச் செய்வார்கள் செகத்தி னோர்கள்
யேற்பார்கள் குடித்தனமே நிசமே யென்று
இறங்குவார் நாற்றமென்ற குழியை நம்பி
பார்ப்பார்கள் மோகமென்று முகமுந்தன்னியம்
பசுப்பென்ற உடலதனையே பற்று வாரே // ௨௩

பற்றுவார் மனமயங்கி மயக்கல் கொண்டு
பலநூலின் சாஸ்திரமும் பார்த்திருந்தும்
சுத்துவார் அணங்குகளைப்போல் பிலுக்கிக் கொண்டு
சுருக்கொடு போகமட்டும் தொடர்ந்து போவார்
௮. கத்துவார் கழுதையைப்போல் பெண்டு செத்தால்
கருவறியா மாணிடர்க்குக் கருணை யேது
யேத்துவார் தத்துவங்கள் மிகவே பேசி
யேற்றினையை மெய்க்குற்று யறுப்பார்
தானே // ௨௪

பொய்ஞானி:

இருப்பார்கள் மோகம்விட் டொழிந்தே னென்று
யாகத்திலே சித்தர்செய்ய மிகத்தரா மூலிகேள
பருப்பார்கள் பொசிப்புமிக யசனம் பண்ணி
பாருலகில் சடைகட்டி வேடம் பூண்டு
யருப்பார்கள் மங்கையைத்தான் கழுத்தைக் கட்டி
யானாங்குவோ ணாற்றமென்ற திசையை நம்பி
வெருப்பார்கள் ஞானமதைக் கசப்பா யெண்ணி
விரும்புவான் மாயமென்ற பிரபஞ் சத்தே// 25

வாதிகள்:

பிரபஞ்ச வாதிகளை சொல்லக் கேளு
பேருலகில் நாதவிந்து உப்பு வித்தை
திராவஞ்சி ஓங்காரி யென்ற வித்து
திரிகோண வனத்தில் பிறந்த உப்பு
பாவஞ்சி உப்பைவிட்டால் வாத மில்லை
பலவிதமாய்ச் சரக்கென்றும் பகர்வார் மட்டோ
வாவஞ்சி வேதாந்த வழலை பூசை
மறைவிதமாய்ச் செய்துகொண்டு வருந்திப் பாரே// 26

6- புரட்டுவாதிகள் சொல்:

வருந்தாமல் ரசமென்றும் கெந்தி யென்றும்
வழமான சவுக்கார சார மென்றும்
திருந்தாமல் நின்றதொரு லிங்க மென்றும்
திறமுள்ள பாசாணத் துருசி யென்றும்
பொருந்தாமல் நின்றதொரு துத்த நாகம்
புகழுள்ள பவழக்காளி மனோசிலைதா னென்று
மருந்தாகும் இந்துப்பு வெடியுப் பென்றும்
மகத்தான பொட்டிலுப்பு வளையலுப் பென்பாரே// 27

வயாத்தியருக்கு:

வழமான வயித்தியங்கள் செய்யும் பேரே
வண்மையுடன் மருந்துவகைச் சொல்லக் கேளு
பழமாகத் திண்ணதொரு மெய்யா னுள்ளே
பருங்குளிக் கெந்தகந்தா னிருந்து தப்பா
களவாக யிந்தவகை மருந்து கொண்டு
கருவான நோய்களெல்லாந் தீரும் தீரும்
உடலங்கண்ட படிசொன்னே னுலகத் தோர்க்கு
உத்தமனே யிந்தமுறை யுணர்ந்துப் பாரே // 27.

அ. கற்பதாரிகளுக்கு சமாதி:

உறைத்துநின்ற தேகங்கள் காயசித்தி யாக
உத்தமனே சொல்லுகிறேன் கற்ப மார்க்கம்
மறைத்துவைத்த வழலைதனைத் திறந்து விட்டேன்
மதியமிர்த மானகற்ப மன்னி யுண்ணு
திறத்துடனே நின்றதொரு தேகஞ் சித்தி
செகமறிய யோகசித்தி வாதஞ் சித்தி
விரைத்துவிட்டேன் முத்ததை அள்ளி யள்ளி
மெஞ்ஞான கற்பமிது மேவிப் பாரே // 29.

மேவியதோர் சமாதிதனைப் பாடிப் போட்டார்
மேதினியில் மனுப்பதர்கள் சமாதி செய்வார்
கூவியதோர் சொல்லடைந்த யடத்தின் மேலே
கூத்திநின்ற ஆசனத்துக் கப்பா லேகி
தாவியதோர் னாலைகுத்து மோரைகுத்து யாகிச்
சக்கரம்போ லாங்கார வட்டத் துள்ளே
யேவியதோர் வாசியனிற் கலந்தி ருந்தால்
யெண்ணாது சமாதியது நிலைத்துப் பாரே //

30

அஷ்ட கர்மம்:

7. நிலைத்துநின்று அஷ்டாங்க மடஞ்சொல்வேன்
நீதியுள்ள ஓரெழுத்தை அறிந்துணர்ந்தால்
மலைத்துநின்ற கருமமெட்டும் வாய்ப்பேச்சி லாகுமே
மைந்தனே யாத்தமறை வணங்கிப் பாரு
களைத்துநின்ற மனம்கெட்டு யுறுதி யாகும்
கயிலாயங் காணியுமாம் கண்டு தேறு
யலைத்துநின்ற தேகமது சொர்ண மாச்சு
யப்பனே யாதுவல்ல ஞான மாச்சே // 31

ஆச்சென்ற வேதமதைச் சொல்லக் கேளு
அபானவெளி தான்கடந்தால் லப்புவெளி யாச்சு
காச்சென்ற தேயுவெளி மேலே யப்பா
கருவான வாயுவெளி யாகாசவெளிமே லப்பா
பாச்சென்ற ஞானக்கண் அகாரவெளி யாச்சு
பண்பான ஓங்காரவெளி சிகைமே லேறி
வாச்சென்ற ஞானமென்ற சுழுனை வீட்டில்
வரையற்ற தொன்றுமில்லை வெளியும் பாரே // 32

௮. பாரப்பா யாதுவல்லோ தெய்வ மாச்சு
பார்தனிலே பெரியோர்கள் மறைத்துச் சொன்னார்
நேரப்பா யாத்திமறை வணங்கிப் பாரு
நேர்மையுள்ள வெட்டவெளி காண லாகும்
ஆரப்பா வென்னைப்போலே சொன்னா ரில்லை
ஆதியற்ற பிரண்டமொன்றாய் யறிந்துசொன்னேன்
காரப்பா உச்சிநின்ற வாலை தன்னைக்
காண்பிப்பா னெட்டாந்தான் வெளியைத்
தானே // 33

வெளியாகி நீதானே யாருந்த காலம்
மேதினியா துயாறைல்லாம் நீயே யாச்சு
வெளிதானே உயிராகி உடலுமாகி
வேதமது சாத்திரமுந் தானே யாகி
வெளிதானே நாதமது விந்துவாகி
சிம்மூல அட்சரமு மூலமொன்றாய்
சுளிதானே மாலாகி அயனுமாகிச்
சுந்தரியாள் நின்றபடி சொல்லொண்ணாதே // 34

8 மெய்ப்பொருள்!

சொல்லொண்ணா மந்திரத்தை சொல்லலாமோ
துறந்துவிட்டால் தொல்புவியால் துயராம் பாவி
நில்லொண்ணாப் பேயருக்கு உரைக்கொண்ணாது
நீதியுள்ள பெரியோருக்கு உரைக்க வேணும்
கல்லொண்ணா மையருக்குங் காட்டொண்ணாது
கருத்தில்லாச் சீலருக்கும் விள்ளொண்ணாது
சொல்லொண்ணா மனுபபதர்கள் ஞானம் பேசிச்
செகத்திலே நாயிபோலே திரிவான் பாரே // 35

வேடிக்கை ஞானி:

9. திரிகின்ற வாயி ஞானத் திருட ணப்பா
சகத்திலே பெண்கள்தனை மயக்கி வார்கள்.
பரியென்ற குதிரையைப் போல் நடந்து கொண்டு
பாரகத்தில் வந்தேனென்று பசப்புவார்கள்
குரியென்ற கொஸ்காணார் கோவில் காணார்
குருக்களென்று பெரிட்டுக் குறிபோல் சொல்வார்
அரியென்ற யெழுத்துமுதல் யெழுத்தும் காணார்
அனுஷ்டானம் பூசைசெய்து அலைந்தார் பாரே // 36

வேதபேத சரித்திரம்:

அலைந்தலைந்து பூவெடுத்து நேமஞ் செய்து
ஆற்றினிலே மணற்பரவிப் பலகை மீதில்
விலையென்ற வஸ்த்திரத்தை மடித்து வைத்து
மேதினியால் வண்டினுட பட்டைச் சாற்றி
9. சிலையென்ற கல்லதனை லிங்கம் பண்ணிச்
சிலையின்மேல் வைத்துமிகச் செபங்கள் செய்வார்
இலையென்ற புட்பமதைக் கொண்டு நிதயம்
கொடிதாகப் பூசிப்பார் குருடர் காணே // 37.

குருடன்தா னானாலும் புத்தி யுத்தி
குறித்தந்த நினைவாலே கூடிப் போவான்
திருடன்தா னானாலுங் கன்னக்கோல் கொண்டு
திறமுள்ள மனைசென்று களவு செய்வான்
கெருடன்தா னானாலு மிரையைப் பற்றி
கெதியுள்ள மாதுக்கு வாகனமா மச்சு
நெருடன்தா னானாலும் பாட்டைக் கிறுபான்
நேர்மையுள்ள ஞானமதைக் காணார் தானே // 38.

சாங்கமறென்பவர்:

காணாதே யுலகத்தோ ரலைந்து கெட்டுக்
கண்மூடி யிருப்போர்கள் பெரியோர் போலே
கோணாதே சிவவதை செய்து மெத்தக்
குலதெய்வங் கும்பிடுவோ மென்பார் பாவி
தோணாத சாஸ்த்திரத்தை நிசமே யென்று
தொல்புவியில் அலைவார்கள் தோசிமண்பர்
ஆணாத பணியெல்லாந் தரித்துக் கொண்டு
புண்ணியவான் போலுமிகப் புலம்பு வானே //
39.

புலம்புகின்ற சங்கமரே லிங்கம் கட்டிப்
புலித்தோலின் மேலிருந்து வசனஞ் சொல்வீர்
சிலம்புகளை விருதென்று காலிற் கட்டி
சிகையதனைச் சடைக்கட்டித்தா வடமும் பூண்டு
பலம்பெறவே காவிகட்டி யோக தண்டப்
பட்டையது மேற்போட்டு நடக்கி றாரே
அலம்புகின்ற அரைக்குடமே யலைந்து கெட்டாய்
அருமையுள்ள ஞானமதை யறியாய் தானே // 40

யோகியாண்டி

சரியாத மடையர்களே யோகி யாண்டி
அகத்தையாங் கல்லதனைப் பூசை செய்வீர்
குறியாத வேதங்கள் மிகவே பூண்டுக்
கூசாமற் பரதேசி யென்பார் பாவி
தெரியாத வண்ணதனைப் பார்த்தா யில்லை
திருடர்களே யுங்களுக்குத் திறங்க ளேது
பிரியாத மனமறிந்தால் தெய்வங் காணும்
பேதையரே யதைவிட்டுப் பிழைக்கின் றீரே // 41

சைவர்கள்

பிணக்கின்ற சைவர்களே சொல்லக் கேளு
பேருலகில் சிவபூசை தானஞ் செய்வீர்
கணக்கின்ற உருவையாரை யமர்த்திவைத்து
கைதனிலே மணியெடுத்து அசைப்பார் பாவி
தணக்கின்ற உன்குலமே அழிந்து போகும்
தம்பிரான் மாருகளே சலங்கள் மாடே
துணக்கின்ற தும்பியைப் போலலைந்தா யானால்
தொல்புவியில் முத்தியுண்டு தெரிந்து பாரே //
42

வைணவர்

தோய்ந்தறியாத சாதர்களே ஐயா கேளு
சொன்னமொழி மறவாத நாமத் தோரே
யெய்ந்துநின்ற நாமத்தின் விபரங் காணீர்
இருதயமாய் நின்றதொரு உயாரைக் காணீர்
காய்ந்துநின்ற ஞானக்கண் விபர காணீர்
கரும்பாசி பூண்டுமிகக் கத்தும் நாயே
தேய்ந்துகெட்டுப் போவதற்குப் பாவாடஞ் செய்வீர்
தெளிவான உண்மைதைத் தோராய் தானே // 43

தேறாத வயாராவி கத்திக் கொண்டு
செயங்கொள்ளப் போவார்போல் திரிவார் மட்டி
கூறாத பேச்சையெல்லாம் கூறிக் கொண்டு
குடியானவன் வாசலிலே காசு கேட்பான்
பாறாத அபிமானந் தெரியச் செய்து
பல்விதமாய்க் கோவணங்கள் பண்ணிக் கட்டி
சேராத பெண்கள்தன்னை சேர்ந்து நித்தியம்
சேட்டைமிகச் செய்வார்கள் செத்தவர் தானே // 44

அந்தணர்:

செத்தவை மந்தணரே செப்பக் கேளு
செகத்திலே உன்னையறிந்தோன் னரிதே யென்பீர்
கற்றவன்போல் மிகப்படித்துக் கலைவேதக்
காசினியா னாதனிலே தானம் பண்ணி
சித்தமதை யறியாமல் பூசை செய்வீர்
திருடர்களே உங்களுக்குச் செபந்தானேது
பித்தர்களே சாதியனில் பெரியோர் யென்பீர்
பத்தவுடன் விண்ணாமோ பேணிப் பாரே // 45

துலுக்கர் தொழுகை

பேணிநில்லாச் சாய்வுகளே அத்தா கேளு
பெருவகில் நீங்களெல்லாம் வேதஞ் சொல்வீர்
காணியென்ற பூமியல்கால் மடித்து முட்டிக்
கைநீட்டிக் கூப்பிட்டுக் கத்தும் பேரை
பாணியென்ற தெய்வமதைக் கண்டதுண்டோ
பகருகின்ற சொல்லுண்டோ பச்சமுண்டோ
கேணியென்ற யோனிதனில் மயங்கி நின்றீர்
கதியான அறிவுதனைக் கேளீர் தானே // 46

கிறிஸ்தவர்

கோணாத யேசுகிறிஸ்த்து வேதத் தோரே
கேள்வியினால் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பாழான நெத்திதனைப் பெரும்பாழ் பண்ணி
பரிசுகெட்ட முகத்தோரா பாவிமாரே
கோணான வேதமதை நிசமே யென்று
கூறுகிறீர் வேதமெல்லாம் வந்தாப் போலே
மாளாத உயாரலே அபயம் போட்டு
மாறுகிறீர் வைகுந்தம் கேட்கத் தானே // 47

கேளப்பா அஞ்செழுத்தும் நீயே யாச்சு
கேசரத்தின் மேல்நின்ற வெளிநீ யாச்சு
பாளப்பா மற்றதெல்லாம் ஒன்று மில்லை
பண்புடனே சொல்லுகிறேன் பாரினோரே
வாழப்பா மனமென்ற சஞ்சலத்தி னாலே
மயங்கிநின்று போகாதே மக்காள் மக்காள்
கோளப்பா சாஸ்த்திரத்தைப் பார்க்க வேண்டாம்
குறியான வேதமதைப் பாருந் தானே // 48

அ. பாருநீ யென்னப்பா புத்தியுள் ளோனே
பரனாதி பறையந்தம் றெண்டுமே காணும்
பூணுநீ வாசியென்ற குதிரைக் குள்ளே
பூலோகம் சிவயோகம் றெண்டுமே காட்டும்
பேருநீ பேறுபெற்றா யய்யா கேளு
பேருலகில் முனப்பதற்க ளுனக்கீ டில்லை
சேருநீ மவுனத்தைத் தெளிந்து பாரு
செகமெல்லாம் நீயாயத் தெளிந்து காணே // 49

காணப்பா கோவிலென்றுந் தீர்த்த மென்றுங்
காசினியில் மாவிளக்கு நெய்வேத்திய மென்று
தோணப்பா திதியென்றும் விரத மென்றும்
தோணாமல் மாட்டுகின்ற விபாக மென்று
13. நாணப்பா கலைக்கட்டு மான மென்றும்
நல்லநிதி மண்ணென்றும் பொய்யே யப்பா
பூணப்பா ஆபரணம் ஆடு மாடும்
புத்திரரும் பொய்யப்பா பொருந்திப் பாரே // 50

பொருந்திநிற்கும் மடிவயத்தில் நகாரம் நிற்கும்
பேரான தொப்பிளின்மேல் மகாரம் நிற்கும்
வருந்திநின்ற நெஞ்சதனிற் சிகாரம் நிற்கும்
வண்மையுள்ள கண்டத்தில் வகாரம் நிற்கும்
திருந்திநின்ற சிரசதனில் யகாரம் நிற்கும்
திருவெட்டுமே கண்ணென்றுந் தெளிந்து பாரு
குருந்தியென்ற உச்சியின்மேல் வெளியாம் வீட்டில்க்
சாட்சியுமே வீற்றிருந்த குணத்தைப் பாரே // 51

குணமென்ற ஆகாசந் தலையு மாகிக்
குறியுள்ள பூமியதே காது மாகி
மனமென்ற மோகதுவே முதுவே யாகி
வளமான நாள்த்தியானம் பண்ணி
நன்றிருக்கும் வாயு அக்கினியும் கூட
நலமான ஆகாசம் மூன்றும் கூட
மன்றில் நிற்கும் விந்துவது தானும் கூடி
வழமான தொண்ணூத்தோர் நாளில் பாய்ந்து
என்றிருக்கு மண்ணப்பு ரெண்டும் கூடி
யேகமது மனந்தானே ஆச்சுத் தானே // 56

ஆச்சப்பா கண்ணோடு செவியு மூக்கு
அண்டபிண்டம் ரெண்டாலே கோடசமும்
வாச்சப்பா அஞ்செழுத்தும் தான தாக்கி மாச்சு
வளமான விட்டமஞ்சு மேலே போட்டு
பாச்சப்பா நரம்பெல்லாம் கையிக மாகிப்
பசப்புள்ள ரத்தமதே ஆணி யாகி
பேச்சப்பா யென்றதொரு தோலே தான்வாய்
பெருமையுள்ள வீட்டுக்குள் பிரபலத்தைக் கேளோ // 57

15 கேளப்பா சிறுகுடலும் பெருங்குடலு முண்டு
கெதியுள்ள கொழுப்புகளு மீரல்களு முண்டு
வாழப்பா பதினாறு வாசல் ஆண்டு
மெத்தான விளக்கேட்டின் வகையு முண்டு
வேளப்பா அஞ்சுகட்டு அரமனையு முண்டு
மெய்யுள்ள அஞ்சுசிவம் அஞ்சு கன்னி யுண்டு
தாளப்ப எழுமலமும் தானே யுண்டு
தரமுள்ள ரோமமது முளைக்குந் தானே // 58

முளைக்கின்ற தேகமது தாய்வயத்தில் நின்று
முந்நூறு நாளிருந்து பிறக்கும் போது
பொளைக்கின்ற கீழேகால் மேலே யாகிப்
பொருமையுள்ள யோனிவழி பிறந்து தப்பா
கிளைக்கின்ற விருட்சமது போலே தானாய்க்
கெதியுடனே வளர்ந்திருந்து கேள்வி சொல்லும்
தளைக்கின்ற செல்வமுட னிருந்தவனு மீசன்
தரித்திரிய வான்போலே யிருந்தான் தானே // 59.

அ. இருந்திருந்த தேகமெல்லாம்
பிறந்தபின் சிவமே ஆச்சு
இருந்திட யிருந்த நந்தி
திரும்பியும் பிறப்பா னப்பா
பொருந்திடுவி காயத் தோர்கள்
போனவர் யாரப்பா ரென்பார்
மறந்திடும் மறிவ வித்தை
மெய்யத்தைக் காணார் தானே // 60

மாயத்தைக் கண்ட சித்தர்
மதியதைப் பெருக்கிக் கொண்டு
காயத்தி லிருக்கும் போது
காத்தனைக் கலந்து கொள்வார்
நேயத்தை விட்ட போது
நேர்சிவன் தன்னிற் சேரார்
மாயத்தைக் கொண்டு வாசி
சூட்சத்தில் வாழ்ந்து வாரே // 61

வாழ்வதோ ரறிவாலே யரவிச் சந்திரன்
வெண்மையுடன் பிறந்திருந்த வகையைக் கேளு
16. கேளுவதோர் மனத்தாலே ஆண்பெண் ணாகிக்
கெதியுள்ள சத்திசிவ மிரண்டு மானார்
கோளுவதோர் தாலத்தா லிறந்து போச்சு
குறியாகச் சொல்லுகிறேன் கார்ந்து கேளு
நாளுவதோ ரனாதியாலே யொன்று மில்லை
நானென்றுந் தெய்வமென்றும் ரவியா லாச்சே //
62

~~யென்னாலே சொல்லவண்டு அறிவா~~
ஆச்சப்பா மூச்சதிலே அக்கினியே பிறந்து
யதிற்பிறப்புச் சிவமாகி விந்து வாகி
காச்சப்பா விந்துவது கருவுஞ் சேர்ந்து
காரணமாய்ப் பூரணமாய்க் கலந்து நின்று
வாச்சப்பா சமுத்திரமாந் தெய்வ மாச்சு
வழமான வாயுவதாய் மகிழ்ந்து நின்று
பேச்சப்பா வெளியாலே பிறந்தி ருந்த
பெருமைதனை யென்னாலே சொல்லொண் ணாதே //
63.

யென்னாலே சொல்லவண்டு அறிவா றில்லை
யியம்புகிறேன் ஞானமென நீதி தன்னை
பொன்னாலே மினுக்கின்ற வொளியு மல்ல
அ. பொய்யல்ல மெய்யல்லப் புகழு மல்ல
தன்னாலே பிறந்திருந்த உடு மல்லச்
சகலகலை உயிரெடுத்த பாய்வு மல்ல
சொன்னாலே யறிவுவருஞ் சந்திதிக் கப்பால்
தோற்றமங்கே மெஞ்ஞானந் தோற்றந் தானே //
64

வெளியாகி நின்றதுவே வெளிவிட் டேன்பார்
விளைவுள்ள புத்தியினால் மெய்யைப் பாரு
அழியாத பாதமதை அய்யா கேளு
அபத்தமாய்ப் போகாதே அறிவுள் ளோனே
தெளிவாகச் சொல்லுகிறேன் னறிவு மார்க்கம்
சிரசின்மேல் நின்றதப்பா ~~அறிவு~~ தெளிந்து பாரு
வளியாதுதான் பெரும்பாதை யறிந்தா யானால்
மக்களே உங்களுக்கு முத்தி யாமே // 65

முத்திக்கு வித்தாகும் விரைய மாகு
மும்மல அ[illegible]ரமும் நீயே யானாய்
பத்திக்கும் உன்னைப்போல் சித்த நில்லை
பராபரனும் பராபரியும் பக்ஷம் வைப்பார்
17. வெத்திக்கும் பார்த்தாலும் நீயாய்க் காணும்
வெல்லோரில் மிச்சமப்பா நீயே நாதி
வத்திக்கு முன்னறிவென் றென்றும் நின்று
மகத்தான பூரணமாய் மகிழ்ந்தாய் தானே // 66

மகிழ்ந்துநின்று சிருஷ்டிப்பாய் சம்காரஞ் செய்வாய்
மாசற்ற தெய்வமதின் வடிவுங் காண்பாய்
மிகுந்தநின்ற முறையதுதா னத்துப் பாரு
விருப்பமுடன் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
நெகிழ்ந்துநீ போகாதே சொல்லக் கேளு
நேர்மையுள்ள முறையதுதா னிலைத்துச் சொன்னேன்
முகிழ்ந்துநின்ற அறிவாலே சொன்ன வேத
முறையதனை யறிவாலே குவித்துப் பாரே // 67

குவித்தறிவு வெளிதானே ஆண்பெண் ணாகி
கூடியபின் செய்பிறந்த விபரங் கேளு
செவித்தசலம் வழுவையதாம் நாத விந்து
செயமாக கலந்திருந்தால் பிண்ட மாச்சு
புவிதலத்தில் மண்பிறந்தான் சூத்திரனே ஆதி
பிறகல்லோ அனந்தமுயர் பிறந்து தப்பா
தவித்தமுறைச் சாத்திரத்தில் நிசஞ்சொல்லாது
தப்பாது மென்வேதம் சாற்று னேனே // 68

சாத்தினதோர் செனனங்க ளெடுக்கு முன்னே
சகலவுயி றெடுக்குமுன்னே வெழவே யாச்சு
தோத்தினதோர் தேகங்கள் பிறந்திருந்து
தேனைவிட்டுப் போறவுயிர் வெளியிர் சேரும்
மாத்தினதோர் நுயிரெல்லாம் வான்பிறப்பே யாகி
வெளியுடனே வழுந்த உவிண்ணின் வரிசை கேளு
யேத்தினதோர் சாதிகளை யகற்ந்த பேரும்
யெல்லோருக்கு · சரியப்பா யேகந் தானே // 69

18. யேகமது பிறக்கையாலே யாரவி தானும்
யாகத்திலே பிரகாச மாக வேணும்
பாகமென்ற சோமனது வளர்பிறையாய் நின்றால்
பண்பாக ஆவைய திருப்பா ரப்பா
தாகமென்ற சூரியனு முதியா விட்டால்
தருவான சந்திரனுந் தேய்பிறையாய் நின்றால்
போகவுயிர் வழிபார்க்கும் வயசோ கொஞ்சம்
பொறுமையுடன் சொல்லுகிறேன் பொருந்திப்
பாரே // 70.

பொருந்திநின்ற பெண்ணதுதான் ருதுவாகுங் காலம்
புடவையிலே ஒருதுளிதான் பட்டு தானால்
திருந்திநின்ற வாழ்வுமிகச் செல்வ முண்டாம்
மைந்தனையும் பெற்றெடுப்பாள் தாலிவலு அன்று
வருந்திநின்ற புடவையிலே மூன்றுதுளி பட்டால்
வண்மையுட னறுத்திருப்பாள் வரிசை கேளு
பொருந்திட்ட மொய்கையினால் விபசாரஞ் செய்து
மாண்டுதப்பா அந்தவுடல் வணங்கிப் பாரே // 71.

அ. வணங்குதற்கு ஆதியந்த மானிந்தா னானால்
மகத்தான கருவியெல்லாம் தானே தோற்றும்
யிணங்குதற்கு வேதாந்தக் கருவை நோக்கி
யேகாந்த நந்தியென நம்பி நின்றால்
இணங்குகின்ற மனக்குரங்கு அத்த னாகி
கூட்டைவிட்டு மெஞ்ஞான வெளியாய்ப் போவாய்
சிணங்குகின்ற நாயதுபோ விடங்கள் தோறும்
அத்துவான் அறிவில்லா மூடன் றானே / 72.

மோடனென்ற குருவைப்பா ஆசா னென்று
மூட்டோடே வந்தவன்போல் பேசிக் கொள்வான்
பாடனென்ற பேரைப்போல் படித்துக் கொள்வான்
பாவோடே சொல்லாமல் பகர்வான் மட்டை
மூடனென்ற யெடுகற்ற பெயர்க ளெல்லாம்
கெதியாக நம்புவர்கள் கேள்வி கேட்டு
நாடவென்ற சிவஞ்ஞானம் வந்தாற் போலே
நலமாகத் தீர்கித்து நடப்பான் றானே / 73.

19. நடப்பார்க ளறிவுநின்ற நிலைமை காணார்
நாட்டிலே யவர்பெரிது யாவர்பெரிதே யென்பார்
கடப்பார்கள் குறுமிட்டு உலக மீதில்
கனியென்ற ருசியதுபோல்க் கருதிக் கொள்வார்
சேடப்பா ர்வைத்துரிய உயதனை நம்பிக்கொண்டு
ஜெகத்திலே யலைவார்கள் திருட்டுவாமி
கிடப்பான ஞானக்கண் விபரங் காணார்
சிந்தையுள்ளே நின்றறிவைத் தெளியார் தானே // 74

தெளிந்தவர்கள் பதினெண்பேர் சித்த ரையா
செகத்திலே தெளிந்தவர்கள் செப்பக் கேளு
புளிந்தரசம் பத்திரகிரி பட்டணத்துப் பிள்ளை
புகழுள்ள அருணகிரி முத்தா னந்தர்
நளிந்தமுக யகப்பைசித்தர் பாம்பாட்டிச் சித்தர்
நலமான குதம்பைச் சித்தர் அழுகண்ணிச் சித்தர்
அ. மௌனிந்தவண்ணர் சிவவாக்கியர் கருவூரிச் சித்தர்
முறையுள்ள இருநமசி இசைநமசி தானே // 75

தானென்ற தத்துவத்தை அறிந்த சித்தர்
சந்திர சேகர குருவு மைந்த னான
வானென்ற அறிவெழுத்தின் விபரஞ் சொன்ன
வண்மையுள்ள சுப்பிரமணிய நயினார் மேறி
வானென்ற அப்பரோடு சுந்தரர் மாணிக்கர்
பண்புடனே பதினெட்டு நாமஞ் சொன்னேன்
கோனென்ற பெரியோர்கள் இவரே அய்யா
கோடிமறை வேதத்தைப் பாடச் செய்வார் //

76

பாடலென்ற தணக்கையெல்லா முகபாடம் பண்ணி
பசப்பியே ஆண்டியர்கள் படித்துக்கொள்வாரே
ஆடலென்ற ஆட்டமெல்லா மாடிக் கொண்டு
அருக்குறுக்க மாட்டாமல் அலைந்தார் பாவி
உ௦. நாடலென்ற அவர்களுக்குஞ் சொல்ல மாட்டார்
நான்பெரியோ றென்றுமைந்த நாட்டுஞ் செய்வான்
தேடலென்ற அறிவுவந்தால் சுயமே சொல்வான்
தெரியாத மூடன்றான் குருவென் பானே// 77

குருவென்று சொன்னசொல் லாருக்காச்சு
குருபரனை அறிந்தவர்க்குச் சொல்ல லாகும்
திருவென்றுஞ் சொன்னசொல் லாருக்காச்சு
சிந்தனை யறிந்தவர்க்குச் சொல்ல லாகும்
தருவென்றுஞ் சொன்னசொல் லாருக்காச்சு
தயாபரியாம் வாலைதனை யறிந்தோர்க்காச்சு
கருவென்றுஞ் சொன்னசொல் லாருக்காச்சு
கர்த்தனென்ற சதாசிவனுக் காகுமந் தானே// 78.

ஆகுமென்ற வெளிதனிலே தேவாள் சென்று
ஆணென்றும் பெண்ணென்று மிரண்டு மாகி
போகுமந்த மனமறியார் மயக்கத்தாலே
பெண்பெரிது ஆண்பெரிது மென்பார் மட்டி
வேகுமந்த மண்ணதனைப் பெரிதே யென்று
விளம்புவார் வேதாந்த சாரந் தன்னில்
ஆகுமந்த ஆண்பெரிதே வெளியாய் நின்று
ஆதியந்தத் தானாகி யிருக்கும் பாரே//
79.

௮. இருக்கின்ற வெளிதானே சிவமதாகி
இயல்புள்ள வாய்வுஅதே சத்தியாகி
சுருக்கின்ற ரவியதுவே ருத்திரனுமாகிச்
சுகமுள்ள அப்பதுவே மாலுமாகி
குருக்கின்ற பிருதிவியே பிரமாவாகிக்
கொடுமறை வேதமாய் பிறந்த நாதன்
பெருக்கின்ற உலகமெல்லாந் தானே தானாய்ப்
பிரமாவாய் நின்றபடி பேணிக் காணே // ௮௰

பேணியதோர் நடுவயிற்றைப் பார்வை செய்வார்
பரிலமென்ன மேல்வயிற்றைத் தியானஞ் செய்வார்
பாணியதோர் நெஞ்சதனைத் தியானஞ் செய்வார்
பகருகின்ற கண்டத்தை நிசமே யென்பார்
காணியதோர் கபாலத்தை நிலவரமே யென்பார்
கருத்துள்ள நெற்றிக்கண் காணச் சொல்வார்
ஆணியதோர் மூக்குமுனை யதீத மென்று
மாறுள்ள இருகண்ணின் பார்வை யென்பாரே // ௮௧

௨. பார்வையென்ற யிறதுமுனை யதீதம் மென்பார்
பண்டில்லார் மூடாப்பா நியாசஞ் செய்வார்
சேர்வையென்ற குருச்சீசன் றண்டுலஸ் கெட்டான்
செடற்றனிலே நோயிறந்து யுழன்று போவான்
கோர்வையென்ற ஐம்பூதம் உபலக்ஷண மாகி
கொடிதான அயர்த்தால் மாண்டு போவார்
யேர்வையென்ற ஞானம்வந்தால் லென்ன செய்யும்
யெட்டெண்டுழு் மறியாத மோட்டுக்குத்
தானே / ௮௨

மோடர்களே யிதுவெல்லா மேபத்த மப்பா
மூலமென்ற உச்சியின்மேல் பார்வை யாகும்
கேடர்களே யிதுநிசமே பொய்யோ யில்லைக்
கெதியுள்ள புத்தியினால் தோணி யேறு
தேடர்களே யிது தெட்டு ஞான மாகும்
செகச்சால வித்தையாலே வீழ்க வேண்டாம்
நாடர்களே யிக்கருவை நாட்டிப் பார்த்தால்
நலமான சிவயோகம் வருகுந் தானே // 83.

அ. வருவதற்கு அடையாளஞ் சொல்லக் கேளு
வரையற்ற விசும்புதனி லேணி சாத்தி
யருபத்தோ ராயிரத்தின் னருநா ளாலே
யேணியென்ற பருவதுவாய்ச் சேர்த்திக் கொண்டு
திருபாத்தி னருளாலே யறிவை யேற்றிக்
கூசாமல் மனமுனைத்து வெளியில் சேர்ந்து
பருவநல மிதுவென்று வெனத் துள்ளே
பண்பாகப் பெரியோர்கள் பலன்பெற் றாரே/ 84.

பலன்பெற்ற தேத்தாலே பிராணன் றானும்
பண்பான அபானனது கேசரியா லேறி
செலமென்ற வள்ளையதைப் பானம் பண்ணி
செங்கதிரோன் சந்திரனில் சேர்ந்து நின்று
தலமென்று ஆறாருக் கப்பால் நின்று
சச்சுதா னந்தமென்ற அறிவி லேறி
நலமென்று பேர்பெற்ற வழி யதுதா னப்பா
நன்மையுடன் சொல்லுகிறேன் னாட்டிப்
பாரே // 85.

ஓஉ. நாட்டியதோர் திசைக்கம்பர் தன்னைக் காணார்
நாட்டிலே குருவென்று உபதேசஞ் செய்வார்
யேட்டிலே யெழுதிவைத்த மந்திரத்தை யெல்லா
மியம்புவான் மட்டி சொன்ன யாத்தைக் கேளு
போட்டியதோ ரரியென்றும் அகார மென்றும்
பொருமையுள்ள உவ்வென்று, மகார மென்றும்
பூட்டிநின்ற ஓமென்றும் நகார மென்றும்
பூலோக மாலையுத்து மறியென் பாரே // 86.

யெழுத்தற்ற வெளியதுவே வெளியு மாகி
யகமெல்லா முணர்த்தெழுந்த யேக மோனம்
வழுத்துமுன்ன சித்தர்களே ஷரிசை கேளு
வன்கையுடனே மறுபிறப்பும் பிறந்தி யானால்
அழுத்தமுள்ள யோனியால் பிறப்பு மில்லை
அரனுடனே சேர்வதில்லை அய்யா கேளு
பழுத்தபழம் வித்துவிண்ணில் சேர்த்தி யானால்
பார்மீதில்ப் பிறவியில்லா திருக்கின் றாயே // 87.

அ. யிருக்கின்ற அறிவதுவே பரமா யெண்ணி
யிருதயத்தின் நினைப்பாலே வெளியே சென்று
பருக்கின்ற தேகமதைப் பொய்யென் றெண்ணிப்
பரலோக ஞானமதில்ப் பாய்ந்து யேறி
சுருக்கின்ற ஐம்பூத மொன்றோ யாகுந்
சூடில்லை மதியில்லைத் தோற்ற மில்லை
சுருக்கின்ற சுழலதுவாம் ஞான வீட்டில்
சுகமாகப் பெரியோர்க ளிருந்திட் டாரே // 88

திட்டமென்ன யீரேழு லோக மல்லத்
திரையுக்குள் நின்றிலங்கும் ரவியு மல்ல
வெட்டமாய் நின்றதொரு மதியு மல்ல
வளர்கின்ற வன்னியதாய் நின்ற தல்ல
பொட்டலாய் நின்றதொரு வெளியு மல்லப்
பூதலத்தி லுயிரெல்லாந் தானு மல்ல
கட்டான கருவியல்ல கால்தா னல்ல
கருவான தலையுமல்லக் கருத்தாய் நின்றார் // 89.

23. கருத்தென்ற அறிவதுவே தால மண்ணை
கருவான சூட்சமண்ணை துய்த்துப் போகும்
திருத்தென்ற காரணமாம் சோமன் மேலே
நிச்சயான மகார காரண மண்ணாதி
இருந்தென்ற இம்மண்ணிற் பெரியோர் யெல்லாம்
நிலையாக வாழ்ந்திருந்த நிலமை சொன்னேன்
பொருந்தென்ற மண்ணதனை நிசமே யென்று
புலம்புகின்ற வாய்ஞானி பேயன் றானே // 90.

பெயரே பட்டணத்தின் பெருமை சொல்வேன்
பேரான கேசரிமேல் பிலத்தைக் கேளு
வெய்யரே மூலமென்ற நாசைதனு மாகி
வள்ளமான யருகாலே பூமி யாகி
நெயரே மானமது தலையு மாகி
நிலைக்கின்ற னாமிகைதானு மாகி
வாயரே தென்பட்டு யருகையு மாகி
வடிவான மேற்கதுவே முதுகாய் நின்றாரே //
91

அ. நின்றதொரு கிழக்கதுவே முகமு மாகி
நிலையான கதிர்மதியே கண்ணு மாகி
சென்றதொரு வன்னியதே நெற்றிக்கண் ணாகி
திறமுள்ள பூமிக்குள் பூமி யுண்டு
நின்றதொரு மலையெல்லாம் தன்னியமு மாகி
நிலையுள்ள கடலெல்லாம் புடவை யாகி
தென்றதோர் வாயுவதே கரமு மாகி
செயமுள்ள வெளியெல்லாம் அறிவாய் நின்றாரே //
92.

அறிவான பிறப்பற்றுப் பரத்திற் சேர்ந்தால்
அரனாரே தானவரா ரென்பார் கோடி
குறியாயிற் விபரஞ்சேர்ந் தாரா னால்
கூட்டோடே பிறந்திருவா னென்பார் கோடி
பரிவான ரெண்டுபெர மேது சொல்லு
பசாசர்களோ யிப்படியே பகரப் போமோ
நெறியான மறுபிறப்பின் விபரஞ் சொல்லு
நிலையறியா மோடர்களா பரம் ரெண்டாமோ //
93

94. பரத்தோடே சேர்ந்தவர்கள் பரமே யாவார்
பரமப்பா பிறவியதா யெங்குந் தோன்றும்
வரத்தோடே யருள்பெற்று மனமற்றே தேறி
வாசியென்ற குதிரையானால் வீடு கட்டி
சரத்தோடே மனையதினி லறிவிற் சேர்ந்தால்
தயவான மறுபிறப்பு யாதுதா னப்பா
திறத்தோடே யருந்தவகை யறிந்தா யானால்
சிவத்தோடே சேர்ந்தவர்கள் திறம்பெற்
றாரே // 94

செயமென்ற ஞானமது தானுஞ் சொன்னேன்
சிகத்தினைப் படித்தவர்கள் பெரியோ ராவார்
நயமுடனே யென்னூலின் விபரங் கண்டால்
நானென்ற பிறவியற்றுத் தெய்வ மாவாய்
மயமுடனே படித்தோர்கள் பெருவயிறு மாவார்
வானரங்கள் பன்றியதாய்ப் பிறப்பான் மட்டை
சயமென்ற நோய்பிறந்து யிறந்து போவான்
தப்பாது யென்வாக்குச் சாற்றி னேனே / 95

சாற்றினதோர் வாக்கதனைப் பொய்யென் றெண்ணி
தலைதெறித்துப் போகாதே சண்டி மாடே
சேற்றுமத்தி லீப்போலே தியங்கிப் போவாய்
செகச்சால நரகத்தி லழுந்தி வீழ்வாய்
ஆத்துக்குள் துரும்பதுபோ லலைந்து போவாய்
அகத்தியர்கள் சொல்லாதே யிந்த நூலை
நாத்திவிட்ட களம்போலே வங்கிசங்கள் போகும்
அயவாக்குத் தப்பாது சூட்டி னேனே / 96.

சூட்டினதோர் இலந்தனிலே பெரியோ ரானால்ச்
சுக்கிலத்தின் வழியாகுபத் தென்றும் முத்தி
கூட்டினதோர் சுரோணிதத்தின் வழியாகுபத் தென்றும்
குறியாக மோக்ஷ முத்தி பெறுவா யப்பா
25. நாட்டினதோர் சீசர்களும் முத்தி பெற்றார்
நலமான பாதையாது அப்பா கேளு
பூட்டினதோர் ரடையாளம் பூரணமே யாகும்
பூட்டதனைத் திறந்துகொள்வர் பொன்மனத்தி
னாலே / 97.

பொன்வெள்ளி பண்ணுமவன் பெரியோ னல்ல
புகழான அஷ்டசித்தின் பெரியோ னல்ல
முன்னின்ற வயித்தியனும் பெரியோ னல்ல
மூச்சடக்கி யெழும்புமவன் பெரியோ னல்ல
சின்னமுள்ள குகையடுப்போன் பெரியோ னல்ல
திறமுள்ள கெவனமிட்டோன் பெரியோ னல்ல
தன்னையே அறிந்தவனே பெரியோ னாய்யா
தெரியாட்டா லொன்றுமில்லைச் சண்டி மாடே //
98.

சண்டியென்ற மாட்டப்பா தனைக் கற்றுச்
சகலகலை வல்லவன் போல் பேசிக் கொள்வான்
கொண்டியென்ற களவுமிகச் செய்து கொண்டு
அ. குலைகுலைக்கும் மஞ்சார்க்கும் ஞான மென்ன
தெண்டனை செய்கின்றோர்கள் வேதம் பார்த்து
சித்ததிலே பெரியவன்போல் புலம்பிக் கொள்வான்
வண்டிணங்கள் கற்றாப்போல் கற்றும் பேறே
மடையர்களே உங்களுக்கு நரகந் தானே //
99.

நரகமென்ற முப்பதரே பண்ணாகம் பொய்யே
நூறிசையுள்ள பரிபொய்யே மதகரியும் பொய்யே
கிரகமென்ற மனைபொய்யே கிளையும் பொய்யே
கெதியுள்ள சதுரங்க சேனைகளும் பொய்யே
கரகமென்ற சரீரமுந்தான் பொய்யே யாகும்
கருவான பெண்டுபிள்ளை பொய்யே யாகும்
துரகமென்ற யாதுமெல்லா நிசமே யென்று
தூலத்தில் மகிழ்ந்திருந்தா யறியாமல் தானே //
100

26. அரியெழுத்தின் விபரமதை யறிய மாட்டா
னவனிதனி லென்னூலுக்குச் சரிநூ லில்லைப்
பரியென்ற வாசியினா லீராறுங் கடந்து
பரமதிலே கடந்தவர்க்குப் பயனும் விள்ளும்
வெறிகொண்ட மோடருக்குத் தெரியா தப்பா
விரைந்தோடிக் கடிநாய்போல் வெக்கஞ் செய்வான்
குறியென்ற ஞானமிது ஜாத்தொன்றி லுள்ளே
குருச்சொன்ன விபரமெல்லாங் கூறினேனே // 101

சுப்பிரமணிய சுவாமி பாடல் சுத்தக் காண்டம்
முதல்க் காண்டம் முற்றும்மே முற்றிற்று.
வேலும் மயிலும் துணை.

ஹரி ஓம் நன்றாக. சுப்பிரமணியர் அகத்தியருக்கு
உபதேசம் 200. முருகர் துணை. வேலும் மயிலும்
துணை.

27.

௨௭. ஹரி ஓம் நன்றாக சுப்பிரமணியர் அகத்தியருக்கு உபதேசம் ௨௦௦. முருகர் துணை. வேலும் மயிலும் துணை.

அண்டபராபரமான பரையின் பாதம்
ஐயரெங்க ளாதிவைத்து பதமும் போற்றி
தொண்டர்கள் மெஞ்ஞானியர்தம் பதமும் போற்றி
சொல்லுகிறே னுபதேச மிருநூர் தன்னை
மண்டலிகா மகாயோகி மதிக்க வென்று
மருவில்லா ஞானமதை மாட்டு வென்யான்
கண்டவர்கள் கண்டகோடி யாகக்
கண்கான ஞானமதைக் காட்டு வோமே // 1.

காட்டுவோம் பூரணமே வெளிய தாகக்
கலங்காமல் வெளியுட பதமும் போற்றி
பூட்டுகிறேன் ரவிமதியைக் கண்ப தற்குப்
புகழ்பெரிய நாதாக்கள் பாதம் போற்றி
நாட்டுகிறோம் மெஞ்ஞானம் வெளிய தாக
நல்வினையுந் தீவினையும் மாண்டு போக
பூட்டுகிறோம் திறவுகோல் திறந்து தானும்
புத்தியுள்ள பிள்ளாயிநீ பேணிக் கேளே // 2.

கேளடா அகத்தியனே கிருபை யாகக்
கெடியான பராபரமே ஒன்றே தெய்வம்
ஆளடா அதுநிலையை அறிய வேணும்
அண்டசரா சரங்களெல்லாம் தெரிய வேணும்
நாளடா பூரகத்தி லேற வேணும்
நல்வினை தீவினையாரண்டும் அறுக்க வேணும்
கோளடா கருவிகளைக் கொல்ல வேணும்
காலனையுங் கட்டறுத்துக் கொள்ளு வாயே // 3

கொள்ளுவாய் வாசியொன்றே முத்தி யாகும்
கொடியதொரு மத்ததவ் முத்தி யல்லை
அ. அன்றுவாய் வாசிதனை அருந்து மைந்தா
ஆதிவஸ்த்தை யனுதினமும் நெஞ்சில் வைத்து
மெள்ள — விழிமெழுட்டி யோகம் பாரு
மேன்மையுள்ள ஞானமதை மேவிக் கொள்ளு
வள்ளா — வல்லவனாய்க் கண்டா யானால்
வஸ்த்தான வஸ்த்ததுவும் வாய்க்குந் தானே // 4.

தானடா வாசியென்ற குதிரை யேறித்
தத்துவங்கள் தொண்ணூற்றாறு தனைய றுத்து
ஓநடா ஓங்காரத் துள்ளொளா டுங்கி
ஓம்நம சிவாயமென்று மனதில் தாங்கி
நானடா நமனுடைய நகருந் தாண்டி
நாதாந்தச் சுடரதிலே நாடிச் சென்று
வானடா வாமகதைக் கண்டு போற்றி
வாலையெனும் பராபரையை மனதில் தாங்கே // 5.

தாங்கியே மனதினிலே அறிவாய்த் தாங்கி
தமர்திறக்கும் வாசலுட கெவுங் கண்டு
ஆங்கியே ஆறுதலும் அருத்து யேறி
ஆதிவஸ்த்தை அனுதினமும் உண்டு கொள்ளு
யேங்கியே யீறாறு தலமுந் தாண்டி
யிடகலையும் வடகலைய மீடரியச் செய்து
பாங்கியே பரமான னதியுந் தாண்டி
பச்சைமயி லேறியுந்தான் பாடுவாயே // 6

பாடவே கின்னரியின் ரகியின் கீட்டில்
பகவத்தி யனேகமுதல்ப் பாயிந்தே தோணும்
ஆடவே அருசைமுத்து மதிலே தோணும்
அப்பரமுஞ் சங்குத்தொனி அரிவாய்க் கேர்க்கும்
30. நாடவே நமிர்திறக்கும் வாசல் தோணும்
நந்தியுட தீத்திருப்பும் நடப்புந் தோணும்
வாடவே வச்சிரமணி விழுக்குந் தோணும்
வாலையுட சிலம்பொலியும் வாய்க்குந் தானே // 7.

வாய்க்குமடா மனத்துழுக்கை யறுக்க வேணும்
வஞ்சமைன்ற புத்தியதை மறக்க வேணும்
யேய்க்குமடா யேய்ப்பான பேச்சை யுந்தான்
யீடழிய வொன்றுமுதை விடுத்த வேணும்
நாய்க்குமடா நாய்போலே திரிய வேணும்
நல்லோரைக் கண்டாக்கால் வணக்கம் வேணும்.
பேய்க்குமடா பிராணனைத்தான் போற்ற வேணும்
பிறபலங்கள் பண்ணாமல் பிலத்து நில்லே // 8

நில்லடா ஒருமனதாய் நிலையால் நின்று
நித்த நித்தம் பிராணாயம் நினைவாய்க் கட்டு
அல்லடா கிர்பமதை யறிந்தே யுண்ணு
ஆறுவரை யூருவி யடுத்தே யேறு
வல்லடா வாசியைத்தான் மேலே நோக்கு
வியாரமங்கே யிருக்கிற வகையுங் காணும்
அல்லடா யப்படியே யறிந்து கொண்டு
ஆதிவஸ்த்தை அனுதினமும் மறிவாய்ப் போற்றே
9. //

போற்றடா கிற்பமுண்டா லென்னைப்போ லாவாய்
பூறிவத்து ஞானமெல்லாம் பொருந்தத் தோணும்
யேற்றடா சிலுகுவைத்தான் பிடித்து மைந்தா
யென்மகனே நித்தமுந்தான் வீசம் கூட்டி
வாத்தடா பதிமென்று வருசந் தானும்
மைந்தனே கிற்பமதை மேதிக் கொள்ளு
சாத்தடா சரவணையு முனக்குத் தோணும்
சண்முகந்தா னென்றுசொல்லி சாற்ற லாமே // 10

அ. சாற்றலாம் வேல்முனையும் உனக்குச் சித்தி
தவப்பொருளு முந்தனுக்குச் சன்னிக் கிட்டும்
மேற்றலாம் நமன்கயத்தை யறுத்துப் போடும்
மீறாது தலந்தாண்டி யருக்க லாகும்
வாற்றலாம் வச்சிரம்போல் தேக மாகும்
வருக்கான குருவிகளு மரண்டு போகும்
போற்றலாம் பூறிவத்து வினைகள் போகும்
பொல்லாப்பு ஆனதெல்லாம் போகுந் தானே // 11

தானென்று யென்குருவே யிப்படியே சொன்னீர்
சடாச்சரனே சண்முகனே இப்போ நீயும்
நானென்ற நல்கருணை விட்டுச் சொல்லும்
நலமான கிற்பவகை நடப்புஞ் சொல்லும்
உடனென்ற வாசியுட னொடுக்கஞ் சொல்லும்
உன்முனையைக் காணுகிற தெளிவுஞ் சொல்லும்
வானென்ற வானவர்க்கு வலிய நாதர்
வடிவேலர் அந்தவகை மாட்டு வீரே // 12

மாட்டுகிறோ மென்மகனே மாணா கேளு
மகத்தான கற்பவள்ளி வகையைச் சொல்வேன்
பூட்டுகிறேன் சிகாரமென்ற நெல்லி சேரு
புதுமையுள்ள மகாரமென்ற நீறு சேரு
ஆட்டுகின்ற ஆதிவஸ்த்தை அதிலே சேரு
அடங்காத யென்தாயாள் வஸ்த்துஞ் சேரு
நாட்டுகின்ற நாலையுந்தா னொன்றா தாக
நலமான தேவியைத்தா னாட்டு வாயே // 13

நாட்டடா விந்துவட்ட முன்னே யிட்டு
நலமாக நாற்கோண மிருகோண மிட்டு
பூட்டடா முக்கோண மதின்மே லிட்டுப்
புகழான அறுகோண வட்டம் போட்டு
மாட்டடா யென்தாயாள் முகந்தான் வைத்து
மதிக்கவே ஆறெழுத்தை அதிலே சாத்தி
வாட்டடா கற்பமதை யதின்மேல் வைத்து
வாலைதனை பூசைசெய்து வணங்கிக் கொள்ளே // 14

31. கொள்ளவே நாதாக்கள் சாபந் தீரும்
கொடியதொரு வஞ்சகங்கள் குதித்தே யோடும்
அள்ளவே ஆறுதல மடுக்கத் தானும்
ஆயபட பரிமது அறிவாய் வாய்க்கும்
மெள்ளவே வாசியைத்தான் வாங்கி மைந்தா
மேன்மைபெற வேறுமென்று னதில் தாங்கி
மள்ளலென வஞ்சகத்தை கட்ட றுத்து
வழக்கான கற்பமதை வணங்கிக் கொள்ளே / 15

கொன்னென்ற யிம்மேலாம் கொண்ட தாலே
குமரனென்று யெற்றனுக்குப் பேருண் டாச்சு
அன்னவே ஆயிரத்தெட் டிதழும் கண்டேன்
அருபமாய முமூர்த்தமுந்தா னைக்கிக் கொண்டேன்
வன்னென்ற வயிரத்திரு விளக்கைக் கண்டேன்
வாலையுட சிலம்பொலியு மதிக்கப் பெற்றேன்
நன்னென்ற வேதாந்தச் சுடரில் சொக்கி
நாலைந்து வாசலையு மடைத்திட் டேனே // 16

அடைத்திடவே சிலம்பொலியும் கேட்டே யானும்
அய்யயாகா திரண்டு மடைத்துப் போச்சு
படைத்திடவே ரோசமென்ற வெக்கம் போச்சு
பரியான மயில்மீதில் பாய்ந்து சென்றேன்
அ. மடைத்திடவே வாசியின்மேல் சொக்கிக் கொண்டேன்
வயிரமதே யிருக்கிற வகையும் கண்டேன்
முடைத்திடவே மும்மேலம் கொண்ட தாலே
முருகனென்று யெற்றனுக்குப் பேரு மாச்சே // 17

பேராகி உருவாகி பெரிது மானேன்
பேசாத வஸ்த்தென்று பேரும் கொண்டேன்
ஆறாகி அச்சுருப வெளியு மானேன்
அறியாத வஸ்த்துவென்று அருமைப் பெற்றேன்
நேராகி நின்மலமா மதியு மாகி
நீங்காத பொருளாகி நிறைந்து நின்றேன்
பாராகிப் பருமலையாய் படர்ந்தே யானும்
பச்சமால் மருகனென்று பகர்ந்திட் டாரே // 18

பகர்ந்திட்டார் பரமான சோதி யாகும்
பரிவான மெய்ஞ்ஞானம் பகர்ந்தே செய்தார்
அகர்ந்திட்டார் மும்மூல உபதேசஞ் சொன்னார்
ஆறுவரை யுருக்கி யறியச் சொன்னார்
நிகர்ந்திட்ட மீறாத நவமும் சொன்னார்
மீர்த்திரமதிச் சோலையிலே யிருக்கச் சொன்னார்
தகர்ந்திட்ட விந்துவையும் கட்டச் சொன்னார்
சண்முகத்தா னென்றுசொல்லிச் சாற்றினாரே// 19

சாற்றினார் மும்மூலத் தனுவுஞ் சொன்னார்
சராசரங்கள் நின்றதெல்லாம் சார்ந்தே நின்றோன்
யேற்றினார் யெம்பிரா னெனக்கு மைந்தா
யெல்லையில்லா பேரொளியை அறியச் சொன்னார்
வார்த்தினார் வஞ்சகரோடே வர்த்தாகி நிக்க
வாசியென்ற வடிவேலை வருந்தி யீந்தார்
நாற்றினா ரரூப மானதி லொன்றாகி
அடங்கியே அனுதினமும் வாழ்ந்திட்டேனே// 20

32. வாழ்ந்திட்டேன் புருவமத்தி மையம் சென்றேன்
வாசியென்ற வடிவேலை வாங்கிக் கொண்டேன்
வீழ்ந்திட்டேன் யருவிழியை அடக்கிச் சென்றேன்
யியல்வான நதிதனிலே யிறங்கி வாழ்ந்தேன்
சாற்றிட்டேன் சங்கற்ப உபதேசஞ் சொன்னேன்
தாயான வஸ்துவையும் தாங்கி யுண்டேன்
ஆழ்ந்திட்டேன் அறிவத்தைக் கண்டு கொண்டேன்
அதினாலே ஆறுமுக மென்றும் பேரே/ 21

பெற்றபோ தொருவர் சொல்லப் போமோ
பேதையென்று மனதிலையும் வைக்கப் போமோ
அற்றபோ அளிதுழியில் விளுகப் போமோ
ஆருயாரும் வேறென்று நினைக்கப் போமோ
சீற்றபோ தீவினைகள் செய்யப் போமோ
திருவீதி யெங்கிந்தா னறியப் போமோ
ஏற்றபோ அருபமது தன்னைப் போற்றி
அழகான சுடாறிலையுஞ் சொக்கி யேறே // ௨௨.

யேறடா பதிமேன்று வருசம் மைந்தா
யென்மகனே மும்மல மெண்ணிக் கொண்டு
காறடா கருவிகளைக் கொன்று தானும்
கருந்தாரை றெண்டைமதற் கடத்தி நீயும்
சேறடா சிங்குவென்ற மவுனம் பூட்டி
திரிபுரையை அனுதினமும் நெஞ்சில் வைத்து
நேறடா நித்தமுந்தான் வீசங் கூட்டி
நித்தமுந்தான் பரகதியால் நீஞ்சு வாயே // ௨௩

நீஞ்சுவாய் நிறமதியைப் பெற்று நீயும்
நிலையான பொருளதனை நினைத்துக் கொண்டு
பாஞ்சுபார் வாசியென்ற பதியை வேறி
பராபரத்தை யனுதினமும் மனத்துள் வைத்து
~~ஆஞ்சுபார் வாசியென்ற பதியை வேறி~~
~~பராபரத்தை~~
ஆஞ்சுபார் அஞ்செழுத்தை அறிவில் சேர்த்து
அனுதினமும் மும்மல மறிவாய்க் கொண்டு
வோஞ்சுபார் வாசியைத்தா நாட்டஞ் செய்து
வழக்கான பெண்ணாசை மறந்தி தள்ளே // ௨௪.

தள்ளடா படுகுளியில் விளுகா தப்பா
நாயான சிற்பறையை மறக்கா தப்பா
அள்ளடா பதிமூனு வருச மட்டும்
அழகான போகமுந்தா னில்லந் தள்ளி
மெள்ளடா கடுகுநல் லெண்ணெய் யாக
விட்டதனைத் தள்ளடா விரைந்து சொன்னேன்
நள்ளடா பதிமூன்று வறண்டு சென்றால்
நலமான விந்துமதற் கட்டிப் பாரே // ௨௫

பாறைன்று பராபரனை பகர்ந்து சொன்னீர்
பறிவாக முடிமேலப் போக்கைச் சொன்னீர்
றாறென்ற தத்துவத்தை அடக்கச் சென்னீர்
றாயினையார் போகமதை மறக்கச் சொன்னீர்
நாறென்ற வாசியுட நாட்டஞ் சொன்னீர்
நாதாந்தப் பேரொளியின் னடம்புஞ் சொன்னீர்
கூறென்ற யோகத்தைக் கலந்து சொல்லும்
கருவொமந் திரத்தைக் காட்டு வீரே // ௨௬

காட்டுகிறே னென்மகனே மாணா கேளு
கருவாகப் பதிமூன்று சென்ற பின்பு
ஆட்டுகிறேன் அம்மென்ற மௌனம் பூட்டி
ஆதிவஸ்த்தை அநுதினமும் அறிவாய்க் கொண்டு
நாட்டுகிறேன் பதினெட்டு மாசம் மைந்தா
நலமாக உயிர்திதில் நாடி நின்று
கூட்டுகிற குருபதத்தில் கூக்க விட்டுக்
கூசாமல் மௌனத்தைக் கொள்ளு வாயே //
௨௭

கொள்ளவே பாசிப்பய றரைக்கால் படி
இருனவை யென்று பச்சரிசி யரைக்கால் படி
மெள்ளவே ஆவின்பால் தன்னிற் பொங்கி
மெய்ஞானம் வேணுமென்று விரும்பி நீயும்
தள்ளவே நேரமொன்று நித்தம் கொண்டால்
தற்பரமாய்ப் பசிதாகம் தான்று போகும்
விள்ளவே யோகமதை விரும்பிப் பாரு
மெய்ஞானி யென்றுவெளி யேறலாமே // 28

யேறலா மாயிரத்தெட் டிதழுந் தோணும்
யென்மகனே அமுர்தமுந்தா னெண்ணிப் பாயும்
மாறலாம் விந்துவது கட்டிப் போகும்
மசையாத மணிபூரம் மடங்கிப் போகும்
பாறலாம் பரகதியு வுயர்த்துப் போகும்
பச்சைமயா னொற்றதுக்குப் பகர்ந்து மெய்வார்
நேரலாம் பரகதியு முனக்குக் கிட்டும்
நித்தமுந்தா னமுர்தமது உண்ணலாகும் // 29

உண்ணலா மிதைவிட்டால் கற்ப மில்லை
ஒருமணியாய்த் திரட்டியைக்கு மருந்தி யாகும்
திண்ணலா மிதுவல்லோ கற்பம் கற்பம்
தீவினைகள் தான்கற்ற திடமாய்ச் சொன்னேன்
நண்ணலா மூசிறும் சுத்தி போதும்
நாலஞ்சு வாசனையு மைத்துக் கொள்ளும்
கண்ணலாம் கருமணியுஞ் சொருகிப் போகும்
காரணசற் குருவென்று கருது வாரே // 30

கருதவே கடவுள்ரே கடவு சொன்னீர்
காரியமாம் வாசியைத்தான் அடக்கச் சொன்னீர்
அருதவே ஆறுதலம் தெரியு மென்றீர்
அப்பரமு யோகமதை அடக்கச் சொன்னீர்
பொருதவே யெப்படித்தான் வாசி தன்னை
போத்திரவாய்க் காணுகிற புகளும் சொல்லும்
கருதவே மும்மலம் பிரித்துச் சொல்லும்
கருவூறில் காங்கயனே கருவா யுண்ணே // 31.

கருவாகச் சொல்லுகிறேன் மாணா கேளு
கருமான குண்டலியை மேலே நோக்கு
உருவாக மேல்நோக்கிப் பார்க்கும் போது
உத்தமனே பிடரிவழி யுயர்ந்து ஏறும்
மருவாயி நித்தமந்தான் விசாவ் கூட்டி
அப்பனே பதிமூன்று வருசம் மட்டும்
கூடுவாக நீயிருந்து கூர்மை பாரு
ஒருவிரிய வாசியுந்தான் இதியாதி வாறே // 32

இதியாது இங்காது உடல்தா னப்பா
கூர்மையது நீளாது இறையா தப்பா
அதியாது உடல்தானும் மூப்பா தப்பா
ஆரூபச் சுடரினையும் அறிவாய்க் கூடும்
பதியாது மதியாரவி மேலே நோக்கும்
பலபல விதங்களெல்லாம் பாணியில் போகும்
காதியாது ணதிசாரை கட்டிப் போகும்
நமனுடைய நினைவெல்லாம் நாச மாமே // 33

நாசமறப் பண்ணுமடா மும்மூலங் கொண்டால்
நல்வினையும் தீவினையும் மறைந்து போகும்
பாசமறப் பண்ணுமடா மும்மூலங் கொண்டால்
பலபல புத்தியெல்லாம் பாழாய்ப் போகும்
வாசமறப் பண்ணுமடா வாசி நாட்டம்
வாக்கான சுழினையுமே வாரிக் கொள்ளும்
ஆசமறப் பண்ணுமடா சூரிய மூர்த்தான்
ஊர்ந்து போம் சுவாத சார்ந்தத்தைத் தொடர்ந்து
நில்லே / 34.

நில்லடா வாக்குமன தொன்றாய் நில்லு
நிச்சயத்தைப் பத்தியாணி நினைவாய் நின்று
அல்லடா ஆறுதலங் கடந்தீ ரானால்
வாயிறத்தைட் டுமாத் தழுகு முண்டு
வல்லடா வாசியைத்தான் மேலே நோக்கு
மைந்தனே கீழ்நோக்க மாட்டா தப்பா
அல்லடா யாதையறிந்து செய்தீ ரானால்
ஆர்ந்துமாவும் நியாச்சு அய்யா பாரே // 35

அ. பாரப்பா மும்மூலம் பகரக் கேளு
பாலான அன்னமூர்த்தான் பொசித்தீ ரையா
ஆரப்பா மூனுபாங்கு கழிந்து போச்சு
ஆறுமனம் இச்சைவிட்டு அகன்று போகும்
நேரப்பா மூன்றையுந்தான் கொண்டீ ரானால்
நிச்சயமாய் மும்மூல நிலையா தாகும்
காரப்பா வாறுமாவுங் கழன்று போகா
கள்ளணையு மொருநிலையாய்க் கட்ட
லாமே / 36

கட்டலாம் கெடத்த சித்த னாவாய்
கயிலாச தேகமடா கிருணை யாகும்
வெட்டலாம் காலனையும் விரட்டி மைந்தா
வேல்முனையா லேறியுந்தா னாடல் செய்வார்
~~தட்டலாந் சூரசம் காரஞ் செய்து~~
~~முறுக்கலாம் கருவிகளை மூட~~
தட்டலாந் தமர்திறக்கும் வாசல் தோணும்
தாயான சிற்பரையுந் தன்தாயாய்ப் போவாள்
மூட்டலாந் சூரசம் காரஞ் செய்து
முறுக்கலாம் கருவிகளை மூட்டலாமே // 37

மூட்டலா மூச்சடரின் தயிலத் தாலே
மோதலா மணக்குளிகை முறையாய் மைந்தா
தட்டலாந் தந்திதனை லேறி மைந்தா
தனைதான உறமுறையைச் சண்ணிப் போடு
கட்டலாம் கர்மத்தைக் கருவாய் மைந்தா
காரணமா மும்மலக் கணையா னாலே
நாட்டலாம் நாதமணி ஒன்ற தாக
நலமான வஸ்த்ததுவை நாட்டுந் தானே // 38

நாட்டமுடன் கும்பகமும் பூரகமும்
நடுவான ரேசகமும் மூன்று மொன்றாய்
வாட்டமுடன் ஒன்றாகக் கயர தாக்கி
வாங்கியே மேல்நோக்கி வசுவா யுண்ணு
நாட்டமுடன் சதாகோடி ரவியுந் தோணும்
தமர்திறக்கும் வாசலது தயவாய்த் தோணும்
பூட்டமுடன் பூரகத்தி லேறினாக்கால்
புத்திரனே பொல்லாப்புப் போகுந் தானே //
39

35. போகுமடா புல்பூடு சீவ செந்து
புத்திரனை மற்றதெல்லாம் நாமே யாகும்
ஆகுமடா அருமுனையைக் கண்டோர்க் கெல்லாம்
ஆறுவரை யூடுருவி அருவில் சேரும்
நாகுமடா நாகமணி சுரந்தான் கூடும்
நல்வினையும் தீவினையு மாண்டு போகும்
பாகுமடா பராபரமு னைக்குச் சித்தி
பாஞ்சுபரி யேறியுந்தான் நடத்தி வாமே/ 40.

நடத்துவா யோகமுந்தா னாண்டு சென்றால்
நலமான கும்பகத்தா லாடிச் செல்லும்
வடத்துவாய் ஓங்காரத் துள்ளோ நூங்கி
யாதிவஸ்த்தை யுண்டென்று அறிவிற் றங்கி
முடத்துவாய் முன்னணியாய்ப் பூசை செய்து
மூத்தண்டம் பிரமனையு மோதித் தாங்கி
கடத்துவாய் கரிமானைக் கருவாய்க் கொண்டு
கசவிகளைச் சிறுத்து யேறுவாயே/ 41.

யேறுவா யிப்படியே ஆன பின்பு
யெண்மகனே அஸ்டசித்த மாகிப் போவாய்
தேறுவாய் கற்பூரச் சுடர்போல் நிற்பாய்
தேவியுந்தா னருளினால் தெண்டு செய்வாள்
நேருவாய்ப் பாக்கியமு னைக்குக் கிட்டும்
நேரான நவிமதியு மாண்டு போகும்
பாருபார் பராபரனும் நீயு மாவாய்
பக்திவாச் சித்தரென்று பகர லாமே/ 42.

அ. பகரவா மென்றுசொல்லிச் சொன்னீ ரைய்யா
பதிவான யோகமென்ற பதமை சொல்லும்
மகரவாம் மறிப்ட மறியச் சொல்லும்
அஞ்செழுத் தானதையு மறிவாய்க் காட்டும்
சிகரவாம் பிராணாயம் (பிராணாயாமம்) அறியச் சொல்லும்
மிட மறிந்து யென்னாளு மிருக்கச் சொல்லும்
தகரவாற் றிதியுட தனுவுஞ் சொல்லும்
சண்முகனே சடாட்சரனே சாற்று வீரே// 43.

சாற்றுகிறேன் யென்மகனே மாணா கேளு
சத்தியமாய் யோகமென்ற தனுவைச் சொல்வேன்
யேற்றுகிறேன் முன்சொன்ன மவுனம் பூட்டு
இன்பமுள்ள பேரொளியு மெண்ணிக் காணும்
வாற்றடா நித்தமுத்தா னெண்ணாறை வீசம்
வளமான பிராணாயம் பொருந்திக் கூட்டே// 44.

கூட்டியே யோகமுந்தான் பார்த்தீ ரானால்
குறையாத பேரொளியைக் குணமாய்க் காண்பாய்
யாட்டியே யாறுப வெளியு மாவாய்
ஆயிரத்தெட்டு மலரறிவாய்க் காண்பாய்
நாட்டியே அமிர்தமுந்தான் வடியு மைந்தா
நரகமென்ற பேச்செல்லாம் நாச மாகும்
பூட்டியே பூரணம்போ லிலங்கும் தேகம்
புதுமைசார் சாரங்களெல்லாம் போக்க லாமே// 45

போக்கலாம் ஐந்தெழுத்தின் வகையைக் கேட்டாய்
36. புத்திரனே ஐந்தெழுத்தைப் பிரித்துச் சொல்வேன்
ணாக்கலாஞ் சிகாரமென்ற நெல்லி யென்று
அப்பனே மகாரமென்ற நீரு மென்று
வாக்கலா முகாரமென்ற நாத மென்று
மைந்தனே அகாரமென்ற வஸ்த்து வென்று
மாக்கலாம் நாதமணிச் சிவந்தா னென்று
நலமான பஞ்சகரு யிதுதா னாட்சே // 46.

ஆச்சப்பா யிதுவல்லோ கிற்பாவி கற்பம்
அடாஸ்காத முப்பூலம் அருமை யாச்சு
யேச்சப்பா சொல்வார்கள் வேறிருக்குதென்று
யெண்மகனே யென்னசொல்வே னிந்த மார்க்கம்
வாச்சப்பா யிதையுண்டால் வழுத்துப் போச்சு
வாசியென்ற வவ்வாரி வருமே பாரு
மூச்சப்பா மூச்சற்ற யடமுந் தோணும்
முனையான சுடரினையும் முழங்கலாமே // 47.

முழங்கவே கருவிகரணம் கிடுத்தே யோடும்
முச்சுடரும் ஒன்றாக முழங்கி நிற்கும்
தழங்கவே தேகமுந்தான் வழுத்துப் போகும்
காயான சிற்பரையுந் தனதாய்ப் போவாள்
யிளங்கவே யம்மேலம் கொண்டா யானால்
யீசனுக்கு மேலாக யிருக்கலாமே //

யிதற்கு மேல் பாடத்தில் ஓர் சீரில்லை. 48.
யிதிலும் ஓர் சீரில்லாது நூல்கண்ட புண்ணிய
வான்கள் எழுதவும். // 48.

இருக்கவடா சொல்லுகிறே னின்னங் கேளு
விதமான பூசையுந்தான் செய்யும் போது
அருக்கவடா ஓம்நம சிவாய மென்று
ஆறுதல் தீட்டினையும் அடக்கஞ் செய்து
பெருக்கவடா பிராணாயாமங் கட்ட வேணும்
பிசகாமல் சிங்குவையும் பூட்ட வேணும்
நெருக்கவடா நின்னயமாய் நின்றா யானால்
நிசமான பரகதிக்கி நீஞ்சலாமே // 49.

நீஞ்சலா மிதைவிட்டால் கதிய மில்லை
நித்தமுந்தான் மும்மூலங் கொள்ள வேணும்
பாஞ்சலாஞ் சிகாரத்தை மகாரத்தை யுன்னி
பத்தியுடன் அணுவளவு விட்டிடாதே
வாஞ்சலாம் பதிமூணு வருசங் கொண்டு
வாசியென்ற யோகந்தனை வளர்த்து நின்றும்
ஆஞ்சலாம் இவருந்தான் பட்டுப் போவார்
ஆத்மாவைக் கிணலா மறிந்துப் பாரே // 50.

பாரப்பா அப்படியே யுண்டேன் யானும்
பலபல யோசனைகள் பாழாய்ப் போச்சு
ஆரப்பா மும்மூலம் மருந்துக் கொண்டேன்
அதிவஸ்த்தை யனுதினமும் பணிந்து கொண்டேன்
நேரப்பா யோகசித்தன் நிலையைக் கண்டேன்
நிச்சயத்தைப் பத்தியுந்தா னினைத்துக் கொண்டேன்
காரப்பா கருவிகளும் பட்டுப் போச்சு
கர்த்தனென்றும் நமனுக்குப் பெருமாச்சே // 51.

பேராகி யூராகிப் பெரிது மானேன்
பின்னுமொன்று மொருகிற கனையு மற்றேன்
நேராகி நிலையாகி நின்று கொண்டேன்
நிச்சயத்தைப் பத்தியுந்தான் விளைத்துக் கொண்டேன்
பாராகி பருபதமாய்ப் பலவிதமு மானேன்
பச்சைமயி லேறியுந்தான் பறந்து சென்றேன்
நாராகி நாதமுந்தா னுண்டு கொண்டேன்
நாதனென்று நமதனக்குப் பேரு மாச்சே // 52.

37. நாதனென்று பேரெடுக்க வருமோ சும்மா
நாடியே முட்டுமெல்லாம் கொள்ளாப் பேர்க்கு
நாதமல்ல தாரமல்ல சொன்னேன் பாரு
கண்டுக்கு மத்தியிலே கருதிப் பாரு
பாதமல்ல பூரகதிதான் கிட்டு மைந்தா
பருமணியாய்க் கர்மமுந்தான் திரண்டு போகும்
மாதமல்ல வாறுதல முருகி யேறு
மதிநாளே ஆறுமுக மென்றும் பேச்சே // 53.

பேச்சிட்டு வாயினால் பேசினாலும்
பிழைவருமே முட்டுமெல்லாம் பிரித்துச் சொன்னால்
ஆச்சிட்டு அறிவத்தை யறியாட் டாக்கால்
அலைவாகக் கொதித்திடுமே தேகமப்பா
வாச்சிட்டு வாசியாலே யேறாட் டாக்கால்
வாறிவிடும் இன்னையுந்தான் மைந்தா சொன்னேன்
மூச்சிட்டு முனைமுழங்கி நியு மைந்தா
முச்சுட்டா ரெண்ணைக்கு முழங்கி நில்லே //
54.

நில்லடா மும்மலமுங் கொண்டு தானும்
நிலையான வாசியுந்தா னினைத்துப் போற்று
அல்லடா கற்பமுந்தான் கொள்ளா விட்டால்
அறிவான வாசியல்தா னெறி நாக்கால்
மெல்லடா தேகமுந்தான் பெருத்துப் போகும்
மேன்மையுள்ள வாசியுந்தான் தெரிந்து வோடும்
வல்லடா வல்லவனாய்க் கற்பமுங் கொண்டு
வாய்வான வாசியைத்தான் வாங்கி வாயே //
55.

வாங்கியடா ரவிதனை மதியில் கட்டு
வாரிவிடும் பிரமத்தில் வளர்ந்தே நிற்கும்
யேங்கியடா மனக்கண்ணுந் திறந்து போகும்
யெல்லையில்லாப் பேரொளியு மறிவா நிற்கும்
தாங்கியடா தமர்திறந்து அமிர்தம் பாயும்
சண்டனென்ற சூத்னையும் சண்ணிக் கொள்ளும்
தூங்கியடா மும்மலம் மற்றுப் போகும்
முக்கியமாய்ச் சிவயோக வாக்கியந் தானே //
56.

வாய்க்குமோ வாயாதோ வென்று நீதான்
மனதிலே தங்கியினி யலைய வேண்டாம்
மெய்க்குமே அஞ்ஞான மெல்லா முன்னை
தப்பிரமை வந்து யழுத்திக் கொல்லும்
தாய்க்குமே தாய்பதத்தைப் பூசை செய்து
தானவனாய் யொண்டியாய் நினைத்து வாழ்ந்து
காய்க்குமே கருவிகளைக் களத்திப் போட்டு
காரணசற் குருவையுநீ கண்டு கொள்ளே //
57.

கொள்ளவே குருவிகளைக் கொன்று போட்டேன்
கோணாறு வாசியைத்தான் கூர்ந்து பார்த்தேன்
வல்லபா அறுமுகனை அறிந்து கொண்டேன்
அப்புறமும் பனிரெண்டு தலமாம் கண்டேன்
மல்லவே பனிரெண்டை யடக்கிச் சென்றேன்
வாய்வான சுழல்க்காத்தில் மருவிச் சென்றேன்
மெல்லவே பூமலரின் வாசம் கண்டேன்
மேதினியைத் தான்படைத்துக் கொண்டேன்
கேனோ // 58.

38. கோடா மேகநிறம் பூண்டுக் கொண்டேன்
கேணியெனும் மழிகுழியைத் தள்ளிப் போட்டேன்
ஆடா அவ்வூரி லிருந்து வாழ்ந்தேன்
அதிசயங்க ளுள்ளதெல்லாம் மறந்து கொண்டேன்
நாடா நான்வழிபாடு செய்யாமல்தான்
நந்திதனி லேறியுந்தான் நடனஞ் செய்தேன்
பாடா ஐம்பூத நிலையும் கண்டேன்
பாஞ்சமயில் மீதேறிப் பறந்திட்டேனே // 59

பறந்திட்டேன் வைகுந்தில் குடிபுகுந்தேன்
பஞ்சவர்ணன் பாவாடை யறிந்து கொண்டேன்
அறிந்திட்டேன் ஆறேறி லடங்கி நின்றேன்
ஆதிவஸ்து வானதையும் அறிவாய்க் கொண்டேன்
தெரிந்திட்டேன் சிவயோக வாழ்க்கை பெற்றேன்
சித்தியெல்லா மென்னுள்ளே தெளிந்து கொண்டேன்
விரிந்திட்டேன் வாசிவழி வேலை வாங்கி
வல்லாளருக் குபதேசம் ஓட்டினேமே // 60.

மாட்டினோம் பூருவத்தின் சித்த னையும்
மதனையா யனுதினமு மதிக்கப் பெற்றேன்
நாட்டினேன் சிங்கியையும் பிடித்த தாலே
நமனையுத்து நாடியே நாச மாச்சு
கூட்டினேன் குருவருளைக் கூட்டிக் கூட்டிக்
குணமான மும்மூலக் கூர்மை யாலே
காட்டினேன் கருணைவல்லி யுண்ட தாலே
காரணசற் குருவென்றுங் கருத லாச்சே // 61.

கருதவே புலியூரல் புகுந்து வாழ்ந்தேன்
கபடத்த சித்தனென்றுங் கருதை லாச்சு
அ. வருதவே யாறுதல மருத்துக் கொண்டேன்
புனிதினாலே அரனுக ஆசா னானேன்
பொருதவே புலியூர்க்கு மேற்கே சென்றேன்
பொல்லாப்புச் சகலத்தையும் போக்கிப் போட்டேன்
கருதவே மகாரமென்ற நீரை யுண்டேன்
கருவான காத்தனையுங் காண லாச்சே // 62

காணாத காட்சியெல்லாங் கண்டு கொண்டேன்
கருதவே லாடமுந்தான் கருதிக் கொண்டேன்
பூணாத ஆபரணம் பூண்டு கொண்டேன்
புகழான வேடமுந்தான் திரித்துக் கொண்டேன்
நாணாத நாயமெல்லாம் நாச மற்றேன்
நல்வினையுந் தீவினைக ளிரண்டு மற்றேன்
நாணாத மயில்மீதி லேறிக் கொண்டேன்
தந்திமுகன் தனக்கிளைய சாமி தானே // 63

நானான நீணவனாய் நானு மானேன்
நங்கைசிவ காமியம்மை நானு மானேன்
உண்ணான உற்பனமா யுலக மானேன்
அண்வீட்டுக் குள்ளிருக்கும் ஒளியு மானேன்
மானான மாலயனும் நானு மானேன்
மரகத பச்சையுந்தான் மதிக்கப் பெற்றேன்
நானான ஆரூப வெளியு மானேன்
ஆதிவஸ்த்து வானதுவும் நான்தான் பாரே // 64.

பாரப்பா உலகமெல்லாம் படர்ந்தெறி நின்றேன்
பத்தருட பங்கிலையும் பதிவாய் வாழ்ந்தேன்
ஆரப்பா அஷ்ட்டாங்க நிலையும் பெற்றேன்
அறிவான மயக்கமதால் அறிவாய் நின்றேன்
39. நேரப்பா நிறமதியை ஆத்தான் வீட்டில்
நிருத்தியா னிருக்கையாலே நிதானங் கண்டேன்
காரப்பா கருக்கிடையுங் கண்டேன்
கோபாலமங்கே திறந்துவிடுங் கண்டு கொள்ளே // 65.

கொள்ளடா நான்சொன்ன மூலம் போலே
குருவறியச் சொல்வார்கள் கூர்ந்து கேளு
அல்லடா யெமைப்போலே சொல்வா ருண்டோ
அடங்காத மனசித்து அறிவைத் தானும்
வல்லடா வல்லவனாய்ச் சொல்லிப் போட்டேன்
வளிபாதை யானதொரு வகைகள்க் கெல்லாம்
மெள்ளடா யாதையறிந்து மெஞ்ஞானங் கண்டால்
மேதினியில்ச் சித்துவிளை யாட லாமே / 66

ஆடலாம் பிரமத்தி லடுத்து யேறி
ஆயிர முளாம் பத்தி லறிவிற் சேறில்
பாடலாம் பதினெட்டு நாகம் பாஷை
பருமணியில் சென்றுபரி யேறிக் கொள்ளும்
நாடலாம் நமனையுந்தா னுதைத்துப் போடும்
நரகமென்ற பேச்சையெல்லாம் நாச மாக்கும்
காடலாம் கருவழித்து வெட்டிப் போடும்
கருஞ்சாரை யரண்டுமுதல் கன்ற லாமே // 67.

களருகின்ற நரம்பெல்லா மிறுகிப் போகும்
கனமான மும்மலக் கணையு மாலே
அளருகின்ற பாசமெல்லாம் அற்றுப் போகும்
ஆரூப வெளியிலையு மடங்கிப் போகும்
தளருகின்ற தாயபதத்தின் தானே சேர்க்கும்
தத்துவங்க ளானதையுந் தகர்த்துப் போடும்
வளருகின்ற வாய்வான யோகத் தாலே
வச்சிரமிட்ட தேகமாய் வளருந் தானே // 68.

வளருமடா யற்புதமுறை யறிய வேணும்
மரகதப் பச்சையய் வேற வேணும்
அளருமடா அக்கினியைத் தள்ள வேணும்
ஆயியுட மௌனத்தை அறிய வேணும்
தளருமடா தாயபதத்தைப் போற்ற வேணும்
தந்தையுட வெளிதாண்டி யிருக்க வேணும்
களருமடா கர்மத்தைக் கட்ட வேணும்
கருவிகளைக் கொன்றுகட்டித் தேற வாயே // 69.

அ. தேறுவது வேவுக்கல்ல வாய்ப்பேச் சல்ல
தெளிந்தசிவ யோகியென்றால் தேறு வான்காண்
மேறுவது மேருவைப்போல் மேரு வார்வான்
மேலான பதவியாலே மேவிக் கொள்வான்
ஆறுவது ஆசையென்ற கங்கம் போகும்
அகத்தியனே விண்டோனக்கு அறிவாய்ச் சொன்னேன்
நேறுவது நிச்சயமு நிதானங் காட்டும்
நிலவறையில் தீபம்போல் நிற்க லாமே // 70.

நிற்கலா மென்றுசொல்லி சொன்னீ ரையயா
நிமலருக்கு உபதேசம் நீருஞ் சொன்னீர்
யெக்கலா மிறாறு தல்முஞ் சொன்னீர்
யாந்திரகிரி பருபதத்தி வேரச் சொன்னீர்
அக்கலா மும்மை மறியச் சொன்னீர்
ஆத்துமாவைக் காணுகிற அறிவுஞ் சொன்னீர்
மிக்கலா மொறறா தர்மொன்றே யென்றி
மேதினியில் தெய்வங்க ளென்டோ சொல்லே // 71

சொல்லுகிறேன் யென்மகனே மாணா கேளு
சூட்சமெல்லா மவனுடைய சூட்ச மல்லால்
வெல்லுகிறேன் வெறொன்று விதமாய் காணோம்
வெட்ட வெளி யென்றுநிசம் வெளியே மைந்தா
வல்லுகிற ஆத்மாவே யென்றோ தெய்வம்.
அவனியிலே தெய்வமில்லை ஐயா கேளு
தள்ளுகிற கருவிகளைத் தள்ளி னாக்கால்
தானவனாயித் தன்னுக்குள் ளறிய லாமே // 72.

40. அறியலாம் பூரணமே யொன்றே தெய்வம்
மாரூப மானதுவு மதுதா னப்பா
தெரியலாம் மும்மலங் கொண்டால் மைந்தா
தீவினைகள் தானகன்று தெளிந்து போவாய்
வறியலாம் வழிபாதை யாதுதா னப்பா
வஸ்துவையுங் காணுதற்கு வகையி தாகும்
பரியலாம் பழிபோகும் பாவம் போகும்
பரகதிக்குப் பாங்கறி யேற லாமே // 73.

ஏறலா மென்றுசொல்லிச் சொன்னா ரப்போ
இவ்வுலகில்த் தெய்வஸ்தல மென்று சொல்லி
பேறெல்லாங் கூடியுமே ரதந்தான் கட்டி
பேசாத கல்லுகளைப் படைத்து வைத்து
வாறெல்லாம் பூசைநெய் வேத்தியஞ் செய்து
வல்லோருங் கூடியுந்தான் பண்ணிய லாமோ
வேறெல்லாம் வேறொருவ னென்று சொன்னீர்
வேல்முருகா யாதவகை விளம்பு வீரே // 74.

விளம்புகிறே னென்மகனே மாணாக் கேளு
விதமாக அப்படியு மில்லா விட்டால்
நிஷ்டம்பெறவே ஞானமதைப் பார்த்துத் தினும்
நாட்டமுள்ள சென்மங்களெல்லாம் யோகியாவார்
தளம்பெறவே அதையறிந்து சிவனா ரையா
தானான உலகத்தை மயக்கிப் போட்டார்
வழமான ஞானமது முன்னிட் டாக்கால்
வஸ்தான பொருளினைத்தா னறிந்து
காணே // 75

காணப்பா கோவிலென்றுந் தீர்த்த மென்றும்
காசினியில் செம்புவிக்கிரக மென்றும்
அ. பேணப்பா வுலகத்தோர் தங்கள் தன்னை
பேய்போலே திரியவுந்தான் படைத்தானீசன்
நாணப்பா தெய்வதைக்கிப் படைத்திட்டாரும்
நதிதனிலே வைகுதீரில் மூழ்கிட்டாரும்
பேணப்பா வுள்வீட்டிற் குள்ளிருக்கும்
ஒளிவான வத்தைத்தா னறிந்து காணே // 76.

காணடா வெழுத்தான பூசை யென்றால்
காசினியோர் செய்யுகிற வகையைக் கேளு
வாணடா வனுஷ்டானம் பூசை செய்து
அனேகந்தி தெய்வமெல்லா மருளாய்ப் போற்றி
தானடா அத்தவத்தால் முத்தி யில்லை
தானிருந்து வாழ்வமென்று தானஞ் செய்து
ஆணடா உண்டார்கள் கோடா கோடி
உற்பனமாம் ஞானபத முறுதி காணே / 77

உறுதியாய் ஞானமதைப் பாரா மல்தான்
உண்டவர்கள் கோடாறு கோடி மைந்தா
வறுதியாய் ஞானமதைப் பார்க்க வேணும்
வார்மானை அறுதிணமும் போற்ற வேணும்
நிறுதியாய் நிச்சயத்தை அறிய வேணும்
நீணி காலமுந்தான் வாழ வேணும்
வறுதியாம் வாய்வான காலை நோக்கி
வகையான சிம்மேலம் வருந்திக் காணே /
78.

காணப்பா மனதடங்கி அறிவில் நின்று
காரணசற் குருவைத் கண்டு தேறு
பூணப்பா முன்சொன்ன நூல மென்று
புதுமைசரா சரங்களெல்லா மறிந்து பாரு
தோணப்பா யப்படியே யருந்து வாழ்ந்தேன்
நந்திதனி லேறியுந்தான் னடுவாய் நின்றேன்
உணப்பா ஆணைன்ற உபத்திரமு மற்றேன்
நெருங்கான கமயத்தி லொடுங்கி னேனே // 79.

41. ஒடுங்கினேன் ஓங்கார நிலையிற் குள்ளே
உற்பனமாஞ் சிவலிங்க மதினிற் கண்டேன்
நடுங்கினேன் மும்மலங் கொள்ளும் போது
நாற்பத்தி முக்கோண நடுவாய்ச் சென்றேன்
வடுங்கினே னார்மாவுக் குள்ளே மைந்தா
வடங்காத சித்தனென்று வறிவிற் சென்றேன்
நடங்கினேன் நந்திதனி லேறிக் கொண்டேன்
நாயான பராபரையைப் போற்றி னேனே // 80.

போற்றினேன் னைவ்வயிருந் நான்தா னென்று
புத்திரனை பூசித்து வினைகள் போக
வேற்றினேன் முக்கோண நவியிற் குள்ளே
இயல்பான மும்மல மெண்ணிக் கொண்டேன்
வாற்றினேன் பாசாண முண்டு கொண்டேன்
வஸ்த்தான வஸ்த்தோடே வணங்கிச் சென்றேன்
காற்றினேன் கருவிகளைக் கொன்ற தாலே
கார்த்திகை யீசனென்று நமக்குப் பேரே // 81.

பூசனா யெங்கிமா யருந்து கொண்டேன்
இமையோர்க்குத் தெய்வமா யருந்து வாழ்ந்தேன்
வாசனாய் வாசவனா யருந்து வாழ்ந்தேன்
வாய்த்ததொரு மேன்றைகுத்தை அறிந்து கொண்டேன
பாசனாயிப் பாசமதை அறுத்துக் கொண்டேன
பச்சைமயில் மீதேறிப் பறிந்திட் டேனே // 82.

பறிந்திட்டேன் பராபரத்தில் பாய்ந்து யேறி
பல்லாயிரங் கோடியண்டம் பாஞ்சு சென்றேன்
அறிந்திட்டே னரூப வெளியு மாகி
ஆயிரத்தெட்டு மேறாகி நின்றேன்
நிறைந்திட்டே நிமலியுட பாதம் போற்றி
நீசனென்ற நூற்றையும் நினைவாய்க் கொன்றேன
வறைந்திட்டேன் வாய்வான காலி னாலே
வாசிவடி வேளையுந்தான் வாங்கி னேனே //
83.

வாங்கியே வேலையுந்தன் காரிமை செய்து
வஞ்சரென்ற ஐவரையும் வதைத்துக் கொன்றேன்
யேங்கியே ஆற்றையு மறுத்துக் கொன்றேன
யாண்பதுன்ப இரண்டையுந்தா னிழந்து ~~சே~~
போனேன்
தாங்கியே தாயான வஸ்த்தைக் கொன்றேன்
தயங்கியே யுறமுறையைத் தகர்த்துப் போட்டேன்
ஓங்கியே ஒருதிரனாய் யொடுங்கி நின்றேன
ஓநம சிவாய மென்று உரைத்திட் டோமே //
84.

உரைத்திட்ட ஞானமெல்லாம் பார்க்க வேணும்
உத்தமனே உலகத்தி லிருந்தா லென்ன
நிறைத்திட்ட மாடமுந்தான் கூடங் கட்டி
நீணிலத்தி லிருந்திட்டா லாய தேது
பறைத்திட்ட பராபரத்தைப் பற்றி நீங்கள்
பார்தனிலே நெடுநாளாய் வாழ்வும் பெற்று
வரைத்திட்ட மும்மல வழ்த்து வாசி
வாலையுட கருணைபெற்று வாழு வீரே // 85

42. வாழ்கவென்றா லகத்தியனே வகையுஞ் சொன்னேன்
வாஞ்சிறைதோர் ஞானமெல்லா மதிக்கச் சொன்னேன்
தாள்க வென்று கேட்டாக்கா லென்ன செய்வேன்
தெமர்க்கினையுங் கடந்தேற மாட்டா தப்பா
நான்க வென்று யெமன்வந்து பிடித்துப் போனால்
நாதாந்தச் சொர்க்கமுந்தான் வருகா தப்பா
தாள்க வென்று நிலைகளுந்தான் கெட்டுப் போனால்
தானென்ன செய்வமடா தானாய் நில்லே // 86

தானவனாய்த் திர்மமாய் நிலைக்க வேணும்
சச்சதா னந்தவெளி காண வேணும்
மேனென்ற வுலகத்தில் வாழ வேணும்
முப்பயமதில் சிவலிங்கங் காண வேணும்
ஞானநா வென்றுகவி பாடி னாலும்
நாதாந்தப் பேரொளியின் னற்புதங் காணார்
ஆணான அறிவத்தை அறிந்து மைந்தா
அசுரர்கிளை தங்களையு மறுத்தி டீரே // 87

அருக்கவே வேணுமடா மனத ருக்கை
அறுத்தாக்கா லவன்யோகி அவனே சித்தன்
பெருக்கவல்லோ பிராணாயாம் கண்டு நீயும்
பிசகாமல் பிராணாயாம் கூட்டிச் செய்து
தருக்கவல்லோ தாய்பதத்தைப் போற்றி செய்து
தமக்கிளையுங் கடத்தேற வேணு மென்று
இருக்கவல்லோ வேணுமடா சொன்னேன் மைந்தா
யீடேறாவிந்து போனாக்கா லென்ன செய்வேன் // 88.

யென்னமோ யெப்படியோ வென்று நீயும்
யிருந்தாக்கால் வாறிவிடுஞ் சொன்னே மைந்தா
அ. வன்னமோ வாய்ப்பான மும்மூலத்தை
மைந்தனே அறுதினமு மண்டு தேறு
நன்னமோ நாதாந்த வறிவிற் சேரு
நாணைந்து வாசலையு மடைத்துக் கொள்ளு
முன்னமே சொன்னமொழி முறையைக் கொண்டு
பூதண்டப் பிரமத்தில் முழங்கு வாயே // 89.

முழங்குகின்ற சத்தமடா இடிபோல் வீறும்
மச்சுடரு மொன்றாக மோதிக் கொள்ளும்
மழங்குகின்ற ஆறுவரை அந்தே யேறு
அப்பாற்மேற் தோன்றுகின்ற ரவியும் வீசும்
வழங்குகின்ற மனோன்மணியாள் வாசல் சென்று
மந்திரத்தைக் கட்டறுத்து மதிக்கப் பெற்று
யிழங்குகின்ற வடிவாகி யிருந்து வாழ்ந்து
யீசனுக்கு மேலாக யிருந்து கொள்ளே // 90

கொள்ளுவென்று உனக்குமதி புத்தி சொன்னேன்
குறையாத பராசக்தியின் குறியே சொன்னேன்
அள்ளவென்று அரிபாடம் பார்க்கச் சொன்னேன்
ஆயிரத் தெட்டுமல ரறியச் சொன்னேன்
வள்ளுவென்று வர்மத்தை உனக்குச் சொன்னேன்
வாயிவான சுழினையிலே வாழச் சொன்னேன்
மெள்ளவென்று மெஞ்ஞானங் காட்டச் சொன்னேன்
மேன்மையென்ற பராசக்தியில் மேவிக் கொள்ளே// 91.

43. கொள்ளென்று யென்குருவே குமர நாதர்
கொடியதொரு ஞானமெல்லாம் கூர்ந்து சொன்னீர்
அள்ளென்று தெய்வமில்லை யென்று சொன்னீர்
ஆரூப மானபொரு ளாகு மென்றீர்
வள்ளதொரு வஸ்தோடே வாழச் சொன்னீர்
வாயிவான சுழினையிது மிருக்கச் சொன்னீர்
மெள்ளதொரு மெஞ்ஞான மாற்றுமாத் தானும்
மேதினியா விருக்குகின்ற சொரூபஞ் சொல்லே// 92.

சொல்லுகிறே னென்மகனே மாணா கேளு
தேட்சமுள்ள ஆத்மாவுஞ் சுருதி மார்க்கம்
வெல்லுகிறே னென்னாலுஞ் சொல்லக் கூடா
வெட்ட வெளி யானதொரு சொரூபந் தன்னை
அல்லுகிற ஆணுமல்லப் பெண்ணு மல்ல
அப்பனே அலியல்ல சொன்னேன் கேளு
தள்ளுகிற பெரிசல்லோ சிறிசு மல்ல
தானாக நின்றவர்கள் தன்மை தானே// 93

தானென்ற உள்வீட்டி லிருந்த சோதி
தம்பிரான் றனையறிய வகையைக் கேளு
ஊனான முன்சொன்ன மூல முண்டால்
அத்தமனே சோதிதனை யுள்ளே காண்பாய்
நானான நாதமதை யறிந்து உண்டால்
ஞாந்திகொளு விருப்புமங்கே நாடிக் காணும்
ஆனான அரூப வெளியுந் தோணும்
ஆதிவஸ்த்தை அச்சினமே அரிய வாமே // 94.

அ. அறியவே யாறு22ள்ளிற் கண்டு கொண்டேன்
ஞதினாலே அருமுக னென்றும் பேரு
பிரியலாம் பிரிதிவியைப் பிடித்த தாலே
பேசாத வஸ்த்தாகிப் பிரபலமு மானேன்
துரியவற் றுரியமந்தாத் ஞதிர்ந்து போச்சு
துவாதேசி வீதியிலே துளாவிக் கொண்டேன்
பரியெலாம் பரிமீதி லேறிக் கொண்டேன்
பகலவன்றன் மணிக்கொலுவி லிருந்திட் டேனே/ 95.

வீற்றிருந்தேன் வேடிக்கை யாகவந்தான்
வேசையர்கள் மோகமென்று விரித்துச் சொன்னார்
பார்த்திருந்தேன் பருமணியாய்த் திரண்ட பின்பு
பாவையரை மோகமந்தான் பரிவாய்ச் செய்தேன்
யேற்றிருந்தேன் மோகமெல்லா மேலே கொண்டேன்
யென்னசொல்வேன் ஞிதுமார்க்க மிதுவே மைந்தா.
காத்திருந்த சுரோணித்தை மேலே வாங்கிக்
கோபால மணி யாசனையும் கடந்திட் டேனே// 96

கடந்திட்டேன் அறுசுவையைக் களித்தே கொண்டேன்
காரண மூர்த்தியென்று கருதி னார்கள்
நடந்திட்டேன் னம்பலத்தி லாடல் செய்தேன்
ஆச்சரிய மானதையு மறிந்து கொண்டேன்
படந்திட்டேன் பராபரமாய் யொடுங்கி நின்றேன்
பகலிரவு யானாகிப் பதிவும் பெற்றேன்
னடந்திட்டேன் னடனமுந்தா னாதங் கொண்ட
னானாகி நீயாகி யிருந்திட் டேனே //97.

44. யிருந்திட்டே னென்னைத்தானு மீச னென்று
எல்லோரும் போற்றவுந்தான் னருளை பெற்றேன்
மறந்திட்டேன் மனோன்மணியாள் மையல் தன்னில்
மாறாட்ட வாசியெல்லாம் மறைத்துப் போட்டேன்
அறைந்திட்டேன் ஞானமெல்லா முனக்கே மைந்தா
அரூப மானதையு மறியச் சொன்னேன்
வரைந்திட்டேன் பக்குவந்தா னிதுதா னென்று
வாகான ஞானமதைப் புகட்டி னேனே //98.

புகட்டியடா புத்திமதி யுனக்கே சொன்னேன்
பொல்லாப்பு ஆனதையும் போக்கச் சொன்னேன்
வாட்டியடா நெஞ்சருக்கை வாங்கச் சொன்னேன்
வயிரமங்கே யிருக்கிற வழியுஞ் சொன்னேன்
னாட்டியடா நாதமதைக் கொள்ளச் சொன்னேன்
நந்திதனி லேறியுந்தான் வாழச் சொன்னேன்
காட்டியடா கருவிகளைக் கொல்லச் சொன்னேன்
கபடத்த சித்தனென்று வந்தி டாயே //99

வந்திடவே வச்சிரமணி வெயும் கிட்டும் காணும்
வழக்கான வாசியுந்தான் வழியாய்க் கிட்டும்
தந்திடவே தமர்திறக்கும் வாசல் தோணும்
தாயான சிற்பரையுஞ் சித்தி யாவாள்
விந்திடவே விந்துவந்தான் கட்டிப் போகும்
வீறான வீரியமுந் தணிந்து போகும்
அந்திடவே யாரூப வெளியு மாவாய்
ஆதிவஸ்த்து நீயாவா யறிந்து கொள்ளே// 100.

பாரப்பா கேசரியு மென சித்தி
பாறான மும்மலமும் பகர்ந்து கொண்டால்
வாரப்பா ஆதிவஸ்த்தை அறிந்து உன்று
யாரூப மானதிலே யடங்கி நில்லு
நேரப்பா நினைவான ஆசை தள்ளு
நித்திரையைப் போக்கியனி நினைவாய் நில்லு
காரப்பா கடம்பவனத் தருகே செல்லு
காவலர்கள் தன்னையுந்தான் கருவாய்க் கொள்ளு// 101.

கொள்ளடா மும்மலம் கொள்ளா விட்டால்
குருவறியக் கர்மமுந்தான் குதித்தே ஆடும்
அல்லடா அம்மலம் கொண்டீ ரானால்
அணுவளவு கர்மமுந்தா னையா தையா
மெல்லடா பதிமேன்று வருசம் கொள்ளு
மேதினியால் சஞ்சரித்து விரும்பி யப்பா
வல்லடா வல்லவனாய் யோகம் பார்த்து
வாய்வான சுளிணையாலே வருந்தி நில்லே//
102

நில்லடா முப்பூவாய் கொண்ட போது
நினைவற்று ஆசையற்றுப் பொறியு மற்றே
நில்லடா சாதிகுலம் சமைய மற்றேன்
வேறுயாரு நாமென்று நினைத்து நின்றேன்
வல்லடா வாய்வீறு மதமு மற்றேன்
வையகத்தோ ரென்னையுந்தான் வணங்கப் பெற்றேன்
செல்லடா செல்வமதி லேறிக் கொண்டேன்
சிவமான திருபதத்தைப் போற்றி னேனே // 103.

போற்றினோ மென்று சொன்னீ ரையயா யப்போ
புகழான முப்பூவாய் கொண்டோ மென்றீர்
யேற்றினதோர் கற்பமுந்தான் தேகத் துள்ளே
யிருக்குதென்று யெம்பிரா னெனக்குச் சொன்னீர்
வாற்றினதோர் ரிதைவிட்டுக் கற்பந் தானும்
வையகத்தி லிருக்கிற வகையுஞ் சொல்லும்
சாற்றினீ ரைந்தனுக்கு வகையாய்ச் சொல்லும்
சண்முகனே அந்தவழி சாற்று வீரே // 104.

45. சாற்றுகிறேன் யென்மகனே நன்றாக் கேளு
தாரணியில் கற்பவகை தனுவாய்ச் சொல்வேன்
யேற்றுகிற தாரணியிற் கற்பந் தானும்
இருக்குதென்று சொல்வதல்லா லில்லை மைந்தா
~~வாற்றுகின்ற முப்பூவைக் கற்பாய் கொண்டால்~~
~~பொய்யெல்லாம் போயறந்து போகுந் தானே //~~
வாற்றுகிற வையகத்தோ ரோடி யோடி
மாள்வதல்லால் வேறொன்று மில்லை சொன்னேன்
போற்றுகின்ற முப்பூவைக் கற்பாய் கொண்டால்
பொய்யெல்லாம் போயறந்து போகுந் தானே //
105.

போகுமடா செடிபூடு கற்ப மில்லை
புகன்றான சரக்குவகை யதினு மில்லை
ஆகுமடா அவரவர்கள் தேகந் தன்னை
அடங்கிநிற்கும் கற்பமென்று அருமை மைந்தா
நாகுமடா நாதமணி யங்கே நிற்கும்
நளினமென்ற சாரையுந்தா னுன்னே நிற்கும்
பாகுமடா பருமலைக்குள் ளிருந்து யேறும்
பச்சைமால் காவலென்று பகர்ந்திட் டோமே // 106.

பகர்ந்திட்டோம் கருநெல்லி மரந்தான் கேளு
பணரந்சு கொம்பொன்று புகுந்தே நிற்கும்
வகுர்ந்திட்ட வாசலது ஒன்ப தாகும்
வீரனுடைய காவலடா ஐயா சொன்னேன்
இகர்ந்திட்ட மந்திரகிரி மரமதாகும்
யீராறு தலமுண்டு யாதுக்கு மைந்தா
தகர்ந்திட்டா லொன்றுக்கு மாகா தையா
தற்பரமாஞ் சொல்லுகிறேன் சார்ந்து கேளே // 107.

கேளடா அதுபழுத்து விழுந்து நித்தம்
கெடியாக அப்பழத்தை விட்டிடாதே
ஆளடா அதையெடுத்து உண்டு கொண்டு
அப்பவல்லோ மும்மலந்த ருமை யாச்சு
மேளடா யப்பழத்தை யுண்ணா விட்டால்
மெஞ்ஞானி யாகவுந்தான் மாட்டாய் சொன்னேன்
யாளடா யதையெடுத்துக் கொண்டா யானால்
ஆத்மாவே நீயாச்சு அய்யா பாரே // 108

அ. பாரென்று யிப்படியே சொன்னீ ரையா
ஐ பருதில்லா நாதமதைப் பகர்ந்து சொன்னீர்
ஆறென்ற சாதிவகை யஞ்சென் றீர்க
ளாறுடைய நாதமென்று அறிந்து கொள்வேன்
நேரிந்த நிலையாகச் சொல்ல வேணும்
நிதானமா யெந்தனுக்கு உரைக்க வேணும்
கூறிந்தக் குருமுனையைக் காட்ட வேணும்
கபடத்து யெந்தனுக்குக் குருது வீரே // 109.

ஒருத்துகிறோ மென்மகனே மாணா கேளு
கன்னியர்கள் சாதியுட கபட்டைக் கேட்டாய்
அருத்துகிற சாதிஐந்து வகையோ யென்றா
யதுவெல்லா மூந்தனுக்கு அறியச் சொல்வேன்
நெருத்துகிற சாதிவகை யொன்றே யாகும்
நிணில்த்து வெவ்விடத்தும் நீயும் வாங்கு
பருத்துகிற சாதியெல்லா மவனே யாகும்
பராபரமுந் தானிறியப் பகர்ந்து வாங்கே // 110

வாங்கடா யெந்தாயை யுருவை தாக்கி
மைந்தனே நாதமதை உண்டு கொள்ளு
தாங்கடா சாதியஞ்சு பிரிவாய்ச் சொன்னோம்
தன்மை யுந்தனுக்குச் சாற்றக் கேளு
ஓங்கடா ஓடியுந்தான் செற்றுப் போக
உமைபாக னலகத்தி லுத்தாரஞ் செய்தார்
தாங்கடா அதையறிய வேணு மென்று
சனங்களெல்லாஞ் சித்தர்கள் சாற்றுங் கேளே // 111

46. கேளடா சாதிவகை வகையென்றே யாகும்
கிருபையுடன் சொல்லுகிறேன் மைந்தா கேளு
ஆளடா நாதமெல்லா மொன்றே யாகும்
அவனிசரா சரங்களெல்லா மொன்றே யாகும்
நாளடா வேதமெல்லா மொன்றே யாகும்
நாலென்ற சாதியெல்லா மொன்றே யாகும்
வாளடா விதையறிந்து மைந்தா நீயும்
வஸ்துதான வஸ்துவையுந்தா னுண்டு கொள்ளே // 112.

கொள்ளடா யானுமந்தப் படியே யுண்டேன்
குமரனென்ற பேராகிக் கீர்த்தி பெற்றேன்
அல்லடா யென்னைப்போலே உண்டீ ரானால்
வாதிவஸ்துவை அறிந்திடுவாய் ஐயா சொன்னேன்
மெல்லடா சடாரிலையுஞ் சொக்கி வாழ்வாய்
மேன்மையென்ற பரகதியை மேவிக் கொள்வாய்
அல்லடா வல்லவனா யிருந்து நீயும்
வஸ்துதான வஸ்துவினையும் வளரு வாயே // 113

வளரவல்லோ வகைவகையாய்ப் புத்தி சொன்னேன்
வாய்போன மும்மலாங் கொள்ளச் சொன்னேன்
அளரவல்லோ அழிகுழியை மறக்கச் சொன்னேன்
ஆருயிரு நாமென்று நினைக்கச் சொன்னேன்
தளரவல்லோ தாய்பதத்தில் தாளச் சொன்னேன்
தற்பமாய யனுதினமு மிருக்கச் சொன்னேன்
கிளருகின்ற காமத்தைக் கட்டச் சொன்னேன்
கரைகாணா தன்பொருளைக் காட்டி
னேனே // 114.

காட்டினோ மெனைப்போலே ஆசானுண்டோ
கருவறைல்லி மரத்தையுந்தான் கருது வாரோ
பூட்டினோ னெனைப்போலே பூட்டு வாரோ
புதுமையாய்த் திறந்துயினிப் பூட்டு வாரோ
நாட்டினோ நமைப்போலே சித்த ருண்டோ
நல்வினையுந் தீவினையு மறுப்பா ருண்டோ
சூட்டினோஞ் சூரசங் காரஞ் செய்தோம்
சுப்பிரமணிய நாதனென்று சொல்ல லாச்சே//
115.

ஆச்சப்பா சூரசங் காரஞ் செய்தேன்
அசுரர்கிளை தங்களையும் அறுத்துப் போட்டேன்
வாச்சப்பா வாசிவடி வேலை வாங்கி
வல்லபையாள் தன்னையுந்தான் பூசை
செய்தேன்
யேச்சப்பா பூசையங்கே செய்யும் போதும்
யந்திர மணியொளிவது தானடைத்துப் போச்சு
வாச்சப்பா கருவிகரு மிறந்து போச்சு
வச்சிரமிடை காயமாய் வுதித்துப் போச்சே//
116

வதுவாகி வடிவேலை வாங்கிக் கொண்டேன்
வாய்வான சுழல்தனிலே சொக்கிக் கொண்டேன்
47. அதுவாகி ஆயிரத்தைட் படிதாண்டி கண்டேன்
அடங்காத சமாதியாலே அடங்கிச் சென்றேன்
னதுவாகி நாதமணி நற்புரம் கொண்டேன்
நாராச மணத்தையுங் கட்டிக் கொண்டேன்
கருவாகி சுழுமுனையாங் கரைந்தே
சென்றேன்
கரைகாணாப் பேரொளியைக் கட்டி னேனே//
117.

காட்டினேன் மனந்தெறிக் காண வேணும்
காவலர்க் களைவரையுங் கடத்த வேணும்
மாட்டினே நூரு சுவையைத் தள்ள வேணும்
ஆசானைக் கண்டாக்கால் வணக்கம் வேணும்
பூட்டினேன் பூட்டெல்லாந் திறந்து சொன்னேன்
பூரணத்தை அனுதினமும் போற்றச் சொன்னேன்
வாட்டினேன் வகாரநிலை யறிய வேணும்
வையகத்தோர் தம்பிகளையும் வதைத்துத் தள்ளே// 118.

வதைத்திடவே வஞ்சகங்க ளான தெல்லாம்
வச்சிராதி மகரகத்தில் வாறித் தள்ளு
அதைத்திடவே ஆசுதல மருந்தே செல்லு
ஆயியுட பாதமது அறிவாய் வாய்க்கும்
சிதைத்திடவே சதைநரம்பு யாவுகிப் போகும்
சினமான உறவின்முறை தானே மாளும்
புதைத்திடவே அரூப வெளியு மாவாய்
புண்ணியனே ஆசான்போ லருளு மாச்சே/ 119.

ஆச்சப்பா மாசற்ற சித்த னாவாய்
அண்ட சரா சரங்களெல்லா மாடல் செய்வாய்
யேச்சப்பா சொல்லவில்லை இந்த மார்க்கம்
யாரும்புகளை யீட்டிக்கச் சொன்னே னப்பா
வாச்சப்பா மெய்ஞான முனக்கே வாய்க்கும்
வஞ்சகங்க ளனுவளவு வைய்க்க வேண்டாம்
மூச்சப்பா பேச்சற்ற யாடுமிந் தோணும்
முக்கியமாய் ஞானவெள்ள முழுங்கி
வாயே/ 120.

அ. முருங்கவல்லோ முன்னேதான் மொழிந்து சொன்னேன்
மோட்சமுள்ள முனையிலேதான் முழங்கச் சொன்னேன்
அருங்கவல்லோ மனத்தருக்கை அழுக்கச் சொன்னேன்
ஆயியுட பாதமதைப் போற்றச் சொன்னேன்
மருங்கவல்லோ மனமதனை யறுக்கச் சொன்னேன்
மாறாட்டாப் பேச்சையெல்லாம் மறுக்கச் சொன்னேன்
வருங்கவல்லோ வாசியைத்தான் வாங்கச் சொன்னேன்
வஞ்சகத்தை யுடைத்து மனதில் தங்கே // 121.

தங்கியடா சகந்தனிலே ஓடாதையா
தருமமென்ற பேச்சையுந்தான் மறக்காதையா
அங்கியடா அங்குஷ்ட்ட மாகித் தானும்
அன்கான அம்பல மறிந்து சொன்னேன்
பாங்கியடா போட்டுயினித் திரிய வேண்டாம்
பலபல கற்பமதைப் பழக வேண்டாம்
சிங்கியடா சிங்குவையும் பூட்டி நீயும்
சிவகாமி பாதமுந்தான் தினமும் போற்றே // 122.

போற்றினேன் புலியூரி லருத்தச் சென்றேன்
48. பொல்லாப்பு ஆனதையும் போகச் சொன்னேன்
யேற்றினேன் கலைமாறி யழுத்துக் கொண்டேன்
ஈசனங்கே சித்திரப்பு யடமுமே கண்டேன்
வாற்றினே வச்சிரவடி வேழுமே கண்டேன்
வயிரமணி மேடையாலே நெருங்கச் சென்றேன்
நாற்றினே ணறுகோண கிட்டி யேயும்
மேடைப் பொருந்து மெலிகையுந்தா னிருந்திட்டேனே // 123.

இருந்திட்டேன் சோதியைத்தான் பார்க்கும் போது
யெவராலும் மதிக்கறிது யென்ன சொல்வேன்
னருந்திட்ட மும்மூலம் கொண்ட தாலே
அச்சுடறிக் சொக்கியாள் அருளும் பெற்றேன்
பருந்திட்டேன் பருபதத்துச் சித்த னானேன்
பாவங்க ளத்தனையும் பரிவாய்க் கொன்றேன்
வருந்திட்டேன் வஞ்சகங்க ளற்ற தாலே
வாசிவழி வேளைக்கு வாச்சு தென்றே // 124.

வாய்க்குமோ அஞ்சையாத மணிபூ ரத்தை
வழுவாக வருந்தேறி வகையைக் கண்டு
யேய்க்குமென்று சொல்லிநீ யருந்தி டாதே
யென்மகனே பூரகத்தி னெண்ணி யேறு
பாய்க்குமே பரியேறி நடத்தச் சொல்லும்
பாசாங்க மானதையும் பகட்டிக் கொல்லும்
வாய்க்குமே ஞானமுந்தான் வந்து கூடும்
வழுவாச்சு தேகமுந்தான் மைந்தா பாரு // 125

பாரப்பா சிகதலத்தி லிருக்கு கின்ற
பஞ்சவர்ணக் கட்டிகளைப் பணிந்திட் டாலும்
மாரப்பா தீர்த்தங்க ளாடி னாலும்
அடிமுடியும் சிவனையுந்தா னறிந்திட் டாலும்
நேரப்பா மும்மூலம் கொள்ளா விட்டால்
நிச்சயமாய்ப் பரகதியுங் கிட்டா தய்யா
காரப்பா மும்மூலக் கருவைக் கண்டால்
கடத்தேறிக் கரையேறிக் கொள்ளு வாயே // 126

அ. தொள்ளவே மும்மேலாய் கொண்ட பேர்கள்
கோடியிலே ஒருவனடா இருத்தே நிற்பான்
நள்ளவே அறிந்தாலு சொன்ன மாட்டான்
நாருயிரு நாதமென்று நினைக்க மாட்டான்
நள்ளவே வாய்ஞானம் பேசி பேசி
நாதாந்தப் பேரொளியில் நாட மாட்டான்
வள்ளவே மும்மேலாய் கொண்டே நானால்
அருமுனையில் சொக்கியிணி வாழ வாமே// 127

வாகாமல் போகாமல் மைந்தா சொன்னேன்
மதனையென்ற சொருபமுந்தான் மதிக்கச் சொன்னேன்
ஆளாம லாண்டுகொள்வாய் இந்த மார்க்கம்
மட்டக்கமர்ந்த முனையையு மறிவா யேறி
நாளாமல் நாள்வழிபடு செய்தி டாதே
நந்திகொது விருப்பத்தை நாடிச் சென்றும்
பாளாமல் பாளாகப் போக வேண்டாம்
பச்சைமயி லேறியுந்தான் பருகு வாயே// 128

பரியவல வேறுமடா சொன்னே னப்பா
பாரதனிலே யாருந்ததினால் பலந்தா னேது
அரியவல்லோ மூலமதை யடுத்துத் தானும்
அச்சுகள்தான் தெரியாமல் அறிவாய் நில்லு
பிரியவல்ல பிரிதிவியைப் பிடித்து யேறு
பிசகாமல் நந்தியுடைப் பட்டம் காணும்
நரியவல்லோ நாதமதை யுண்டு கொண்டு
நாதாந்தச் சிவமணியை நாடிக் காணே// 129

காணடா கணக்கான படியுஞ் சொன்னேன்
கயிலாச நாதரையுங் காணச் சொன்னேன்
தோணடா யோகவெளி திறந்து சொன்னேன்
சச்சுதானந்தவெளி சாரச் சொன்னேன்
நாணடா ஆணவத்தை அடக்கச் சொன்னேன்
ஆயிரத்தெட்டுமேலேறியச் சொன்னேன்
ணாணடா அப்படியே புகுந்து வாழ்ந்தேன்
நாதாந்தப் பேரொளியில் நாடினேனே // 130.

நாடினேன் சிகமெல்லாம் படைத்து யானும்
49. நாதனென்று யெல்லோரும் பணிந்து கொண்டார்
ஆடியேன் செகமெல்லாம் படைத்துத் தானும்
அண்டபரா பரனென்று அருளை பெற்றேன்
பாடினேன் தலங்களெல்லாம் பரிந்தே நின்றேன்
பகல்மதிய மேடையிலே பதிவாய்ச் சென்றேன்
சூடினேன் வாசியைத்தான் மேல தாக
சூட்சம் காரணந்தான் செய்திட்டேனே // 131

செய்திட்டே னெவ்வுயிரு மாறு மானேன்
சிவனுக்கு மேலான சிவனு மானேன்
நெய்திட்டே னவ்வூறில் அறிவாய்ச் சென்றேன்
ஆதிமகா மேலமைந்த றருளை பெற்றேன்
கய்திட்டேன் கருவூறில் கடக்க நின்றேன்
கருமமென்ற பாசத்தைக் கடத்திப் போட்டேன்
மெய்திட்ட மெய்ஞானி குருவு மானேன்
மேலான பதவியிலே மேவினேனே / 132.

மேவியெங்கு மாய்நிறைந்தோ மென்றீ ரைய்யா
மெஞ்ஞானம் பெற்றதையும் விரும்பிச் சொன்னீர்
ராவியே மும்மூலங் கொள்ளா மலேதான்
யதிசெயமாய்ச் சிரஞ்சீவி யருளைத் தாறும்
ராவியே வாசியைப் பாரா மலேதான்
தானவனா கும்படியாய் தகமை செய்வார்
ஆவியே அறுமுகனே அருள்வா யப்போ
ஐயனே யிந்தவகை அருளு வீரே // 133.

அருளுகிறோம் யென்மகனே மாணா கேளு
அப்பனே சிரஞ்சீவி யருளை கேட்டீர்
வுருளுகிற மும்மூலங் கொள்ளா விட்டால்
வடிவுள்ள தேகமுந்தான் மாண்டு போகும்
முருளுகிற சிரஞ்சீவியைக் கேட்டால் நீயும்
உத்தமனே சிரஞ்சீவியை உரைத்துச் சொல்வேன்
னருளுகிற பேரொளியைக் காணப் போகு
அதிசெயமாஞ் சிரஞ்சீவி யாகா தென்றே // 134.

ஆகாத சிரஞ்சீவிக்கி வயதை கேளு
அப்பனே அரனுக்கு வயது சொல்வேன்
நாகாத நாட்டுக்கு வயது சொல்வேன்
நாட்டிலுள்ள ரவிமதிக்கி வயசு சொல்வேன்
போகாத பூமிக்கி வயது சொல்வேன்
x புத்திரனே யென்மகனே பொருந்திக் கேளு
யேகாத நாகமுதல் கெவுங்க ளெட்டும்
யெல்லவுயிருந் தானிறந்து மடியுந் தானே // 135

கேளடா பதினெட்டு யுகமாய் நிற்கும்
கெடியாகத் தொண்ணூற்றி ரெண்டு கோடி
ஆளடா யெல்லாரு மிறப்பா ரப்பா
அய்யனே அஷ்ட்ட கெச மிறந்து போகும்
நாளடா மண்மலையு மிடிந்து போகும்
நலமான மாந்தரெல்லாம் நாச மாவார்
வாழடா மும்மூலங் கொண்ட பேர்கள்
வஸ்த்தான வஸ்த்தோடே வாழு வாரே // 136

வாழுவார் மாலயனும் மாண்டு போவார்
மைந்தனே முத்தேவர் மாண்டு போவார்
தாழுவார் செகமெல்லாம் மிடிந்து போகும்
தானான சிரஞ்சீவியும் தாண்டு போவார்
சூழுவார் மும்மூலங் கொள்ளா விட்டால்
கருவான வுயிருமது மடிந்து போகும்
மாளாவே யிப்படியே யிருந்து தானும்
யல்லோரு மாண்டார்கள் அனந்தந் தானே // 137

50. தானென்ற மும்மூலம் கொண்டு தானும்
சாகாத வரத்தோடே சார்ந்தே நிற்பார்
ஆனென்ற பெருவழியு மாகித் தானும்
அழியாத வஸ்த்தோடே அறிவாய் நிற்பாய்
ஊனென்ற உடல்தானும் மழியா ததா
ஒருநாளுஞ் சாகாம லுறுதி யாவாய்
தானான வென்றுகவி பாடினானும்
நாதாந்தப் பேரொளியான் நற்பைக் காணான் //
138

கோணாமல் மாந்தரெல்லா மிறந்து போனார்
கேடமாய்ச் சொல்லவில்லை குருவாய்க் கேளு
ஆணான மும்மூல மருந்துக் கொண்டால்
அழியாத வஸ்த்தாகி யவனே நிற்பான்
உன்னான உபத்திரிய நாடா தப்பா
உலகமெல்லாஞ் சித்துவிளை யாடிக் கொள்வர்
யாணான ஆண்பிள்ளை யானாற் கேளு
அம்பலத்தி லெய்யாமல் அறிவாய்க் கொள்ளே // 139

கொள்ளென்று வென்குருவே குமரா சொன்னீர்
கூறாக யெல்லோரு மிறப்பா ரென்றீர்
வல்லென்று அண்டமெல்லா மிடியு மென்றீர்
அருபமட்டும் நானழியா தென்றீ ரையா
மல்லென்ற வல்லமைதா னழியா னென்றீர்
மகாசித்த ரிருக்கிற வகையைச் சொல்லும்
நில்லென்று அண்டமெல்லா மிடியும் போது
நிசமான சித்தருடை நிலையைச் சொல்லே / 140

சொல்லுகிறே னென்மகனே மாணா கேளு
சயமான சிலந்தானுங் கொதித்த போது
வெல்லுகிற சிலத்தோடே விரிவாய் நிற்பார்
விதமான அக்கினியா யுசந்த போது
அல்லுகிற அக்கினியாய் வளர்ந்தே நிற்பார்
அப்பனே திசைமெல்லா மிடிந்து தானால்
வல்லுகிற வஸ்த்தோடே வளர்ந்தே நிற்பார்
வகையான மும்மூல யோகி தானே // 141.

தானாகித் தானவனாய் வாழ்ந்தே நிற்பார்
தபமான மும்மூலத் தருமை யாலே
அ. வானாகி வான்முட்டி வளர்ந்து நிற்கும்
வல்லோனா யென்றைக்கும் வளர்ந்தே நிற்கும்
பானாதி யழியாத பொருளாய் நின்ற
பாராயிரத் தெட்டுமெல் றுவிக் கின்னோ
உணாகி உத்தமர்க்கு இதுதான் கிட்டும்
உலகத்தி லிதையறிய மாட்டா ரென்றே //
142

மாட்டார்க ளொன்றுசொல்லி மதிக்கச் சொன்னீர்
மென்று மின்று மிழந்துமினி வாரு மென்றீர்
கூட்டாக வத்தொன்று மழியா தென்றீர்
பூரணமா யோகியுந்தா னழியா தென்றீர்
நாட்டாத சிகமெல்லா மிழந்து தானும்
நலமாகப் படைக்கும்வகை நமக்குச் சொன்னீர்
காட்டாத கருமானம் நமக்குச் சொல்லும்
கறைகாணா தன்ப பொருளாக் கருவாய்க்
கொள்ளே //
143.

உண்ணவே யென்மகனே மானா கேளு
உற்பனமாய் படைக்கும்வகை உரைசொல்வேன்
தின்னவே தெவியுந்தான் வசத்தில் நின்று
திருநடனம் புரியவுந்தான் வருகுவாளாம்
நன்னவே அவளையுந்தான் சேர்ந்து யானும்
நலமான பிள்ளையைத்தான் பெறுகுவாளாம்
அன்னவே அரனாரைப் பெறுகுவாளாம்
அதிலிருந்து வந்தவகை அருள்செய் வேனே //
144.

அருளாகவே அரனையுந்தான் அழைத்து யானும்
ஆத்தாளை யவர்தனக்குப் பாரி செய்வேன்
இருளவே தீயக்கண்ணும் கொடுப்பேன் யானும்
திருமந்திர உபதேச தியானஞ் சொல்வேன்
யருளாவே திருமூர்த்தித் தனைப்ப டைத்து
அண்டமெல்லாம் அரசாக ஆண்டு கொள்வார்
வருளாவே மந்திரங்கள் தனைப்ப டைத்து
வையகத்தோர் வணங்கும்படி வழங்கு வாரே// 145.

வழங்கவே ரவிமதியைப் படைத்துத் தானும்
மாந்தருக்கு மாயவலை கட்டிச் செய்வார்
51. இணங்கவே அண்டத்தைக் கோட்டை செய்வார்
இயல்பான அறுசுவையைப் படைத்து மேவார்
துழங்கவே பூதகணந் தனைப்ப டைத்தும்
தானான மேருமென்றுந் தனைத்தே செய்வார்
அணங்கவே வசுத்தனையும் படைத்துத் தானும்
மரனென்றும் பேராகி அருளு வாரே// 146.

அருள்கிற பேச்செல்லா மரன்றா னையா
அவனியெல்லாம் படைத்ததுவு மரன்றா னையா
இருளுகிற பேச்செல்லா மரன்றா னையா
யீசனென்று சொல்லுமது மரன்றா னையா
வருளுகிற வாய்வெல்லா மரந்தா னையா
வையகத்தில் வார்த்தையெல்லாம் னான்றா னையா
உருளுகிற உற்பனமும் நான்றா னையா
வடையவனா றென்றதுவும் நாந்தா னாச்சே// 147.

ஆச்சப்பா உருவாகித் திருவு மாகி
அவனிசரா சரங்களெல்லா மெங்கு நின்றேன்
வாச்சப்பா வாசியென்ற மயிலி னாலே
வஞ்சித்தான வஞ்சித்தர்க்கு மேலே நின்றேன்
மூச்சப்பா மூச்சற்ற யடமௌனங் கண்டேன்
முச்சுடரா யென்னுக்கும் முழங்கி நின்றேன்
மாச்சப்பா மாயைகளெல்லாம் மடித்துத் தள்ளி
மெத்தான மும்மேலத் தாது மாச்சே // 148.

ஆச்சென்று யென்குருவே அறிவாயச் சொன்னீர்
அரன்றனையு மீன்றோமென் றதுவுஞ் சொன்னீர்
வாச்சென்ற வரனார்க்கும் பிள்ளை யென்றே
வையகத்தோர் சொல்லுகிற வகையைச் சொல்லும்
மூச்சென்று முக்கண்ணர்க்கு உபதேசித்த
முறைமையைத்தா னெந்தனுக்கு மௌனியுஞ்
சொல்லும்
வாச்சென்று யிந்தவகை யான தெல்லாம்
வசுவாக யெந்தனுக்கு வழுத்து வீரே // 149.

அ. வழுத்துகிறே னென்மகனே ரணா கேளு
வல்லவற்கு பிள்ளையென்ற வகையுஞ் சொல்வேன்
னழுத்துகிறே னாத்தாளை யவர்க்கீய்ந்த தேனே
யதனாலே அரனுக்குப் பிள்ளை யென்றார்
தொழுத்துகிற வகையுந் தானீயந்தேன் யானும்
துய்யவெளி யுபதேசம் துறந்து சொல்லி
அழுத்துகிற அதனாலே ஆசா னென்று
அல்லோரும் மெனைத்தாறு மருளி னாரே //
150.

அருளியதோர் கூத்தெல்லா மாத்மா வாகும்
அவனிசரா சரங்களெல்லா மவனே யாகும்
மருளினதோ ருப்பனமு மவன்தா னாகும்
உள்வீட்டுக் குள்ளிருக்கும் ஒளிவு மாகும்
வருளினதோர் வாய்மையெல்லாம் மவன்றா னாகும்
வையகத்தோர் நடத்தையென்ற வாற மாகும்
மருளினதோ ருலகமெல்லா மவனே யாகும்
உற்பனமாய் வெட்டவெளி யாச்சுப் பாரே // 151.

பாரப்பா அண்டசரா சரமு மாகிப்
பலபல பாசையதாய் பாஞ்சு நின்றார்
ஆரப்பா வேதமந்தா னாதுண் டாக்கி
யவனியெல்லாம் வெவ்வேறா யருளாய் நின்றார்
காரப்பா கருவிகளைப் படைத்து நின்றார்
காலனென்று வேறாகிக் கபட மானார்
ஆரப்பா யாதுவெல்லாம் மாத்மா வாகும்
அண்டமெல்லாந் தீக்கூத்து ஆடி னாரே // 152.

ஆடினதோர் கூத்தெல்லாம் அண்டர் மெச்சி
யாரூப மானதிலே யடக்க மானார்
நாடினதோர் கூத்தெல்லாம் நாதர் மெச்சி
நடனமது புரிந்துவிட்ட நாத னாரை
வாடியே தேடியுந்தா னலைந்திட் டாலும்
வஞ்சகனைக் காணாது மைந்தா சொன்னேன்
பாடினதோர் மும்மலம் பகர்ந்து கொண்டால்
பராபரனைக் காணலாம் பாஞ்சு பாரே // 153.

52. பாரேது புவனமாய் படைத்தே நின்று
பஞ்சவர்ணக் குட்டியாயும் பரிந்து நின்றார்
ராரேது அவனிசரா சரங்க ளாகி
அழியாத விஷ்ணுவாய் அருளாய் நின்றார்
வாரேது வாலையென்ற சொரூப மாகி
வையகத்தோர் தங்களையும் மயக்கிப் போட்டாள்
ஆரேது அவனியெங்குந் தானாய் நின்று
அண்டர் மெச்சக் கூத்தாடி அய்க்க மானார் // 154.

அய்க்கியே ஆருயிரு மவனு மாகி
ஆறுமுக னென்று சொல்லி பெரும் பெற்றேன
முயங்கியே மூவுலகு மொன்றாய் நின்றேன
முருகனென்று பெருமிட்டு முறைமை யானேன்.
தயங்கியே தந்திமுகன் றனவு மானேன்
தாயான சிற்பரையும் யானு மாச்சு
வயங்கியே சகமெல்லா மொன்றாய் நின்றேன்
வளமாக யெவ்வுயிரு மியானு மாச்சே // 155

ஆச்சப்பா வாறுதலைமை யூறுக் குள்ளே
அறிவான ஆத்மாவை யறிந்து கொண்டேன்
யேச்சப்பா யிடகலையும் வலகலையும்
மெதிரக வாங்கியணி முடித்துக் கொண்டேன்
வாச்சப்பா வாசிவழி வெகுங் கண்டேன்
மாறாத சிரஞ்சீவியை வாங்கிக் கொண்டேன்
மூச்சப்பா முதுகண்ணை முக்கிய மாக
முனியே யானுமினிக் கண்டிட் டேனே // 156.

கண்டபடி காணவென்றால்ச் சொல்லப் போமோ
கருமான கூடம்மேலக் கபடு தன்னை
அண்டர்களு முனிவர்களுந் தேடித்தேடி
ஆத்தாளைப் பூசித்துப் பேறு பெற்றார்
வண்டபடி வாமத்தை யுண்டு கொண்டு
வஷ்த்தான வஷ்த்துவையும் வாங்கி நின்றார்
மண்டலிகர் அண்டர்மகிழ் மனோண்மணியைக் கண்டு
மனோண்மணியாய் வாசியைத்தான் மாட்டினாரே //
157.

மாட்டினார் கும்பகத்தில் தேக்கச் சொன்னேன்
மாறாம வஷ்த்தமதை உண்கச் சொன்னேன்
பூட்டினேன் புருவமையத் தமர்திறந்து
பொல்லாப்பு ஆனதையும் போகச் சொன்னேன்
காட்டினேன் கருவையெல்லாந் துறந்து மைந்தா
கபடகத்தை யின்னதென்று கண்டு கொள்ள
உரைட்டினே னுனக்காக மைந்தா கேளு
உண்மையுள்ள மேல்வாசல் கண்டு கொள்ளே //
158.

கொள்ளடா வெளிதாண்டி ஒளிவுந் தாண்டி
குமரனைக்குரும்பு குமரியைத்தான் வெளியே தாண்டி
அள்ளடா ஆருப் மேனில் சென்று
ஆயார்த்த தெட்டுமேல றறிந்து கொண்டு
விள்ளடா மேலான வீட்டில் சென்று
மேதினியும் நம்மிதென்று மேவிக் கொண்டு
வள்ளடா வாசியைத்தான் வாங்கி
வச்சிரவே அந்தனுக்கு வாய்க்கிற னாக்கால் தாணே //
159.

ஊறாத பேச்சையெல்லாம் சொல்ல வில்லை
வாய்மையான சட்டறையுந்தான் விளங்கச் சொன்னேன்
தேறாத பேர்களுக்குத் தெளிவு தேது
திரிந்துதிரிந்துதான் பார்த்தாலும் உறவு தேது
காறாத சீஷனுக்குக் கருவாம் கேது
கைமுறையை விட்டாக்கால் கணக்காம் கேது
நேறாத பேர்களுக்குப் பரகதிதா னேது
நிச்சயத்தை யறிந்தாக்கால் ஞானியாச்சே //
160.

53\. ஆச்சப்பா கமலைமதி மாலைக் குள்ளே
அருகோடி வருஷமந்தா தாங்கி நின்றேன்
னேச்சப்பா நாலான ~~பதவியைத்தா~~ யைத்தா
னெண்ணாமல் வஸ்துவையும் இறுத்துக் கொண்டேன்
வாச்சப்பா வஸ்த்தனை வஸ்த்தில் தானும்
ஆடிவான தும்பைமலர் வடிவாய்க் கண்டேன்
யேச்சப்பா யொளிவுமினி வெளியாய் நிற்கும்
இதுமலர்போல் மத்தியாலே யிருக்கும் பாரே // 161

பாரடா ரவிமதியைக் கண்ணாக
பலகலையும் நாகமதை மாலையாக
தாரடா வமர்ந்திருந்த ஆன்மாவைத்தான்
ஆயிரத்தெட்டுமலர் அறிவில் கண்டேன்
நேரடா அவருடைய நிலையைப் பார்த்தால்
நேமமாய் நிதானமோ நிலையைக் காட்டும்
மாரடா மகுடத்தில் வாழ்க்கை யென்னா
யப்பனே அறிந்துமினிச் சொல்லப் போமே //
162. //

சொன்னடா பூரணமே வெளிய தாகச்
சொரூபமா யிருக்கின்ற நிலையுஞ் சொன்னேன்
நன்னடா அவுடதைய வழுகைச் சொன்னேன்
ஆத்மாவாய் நிறைந்திருக்கு மறிவுஞ் சொன்னேன்
ரன்னடா நாற்பத்தி முக்கோணஞ் சொன்னேன்
நாலெங்கு வாசலையும் டைக்கச் சொன்னேன்
வின்னடா விஷ்ணுவுட விபரஞ் சொன்னேன்
விதிப்பாகும் வகையெல்லாம் விசினேனே / 163.

விசினே னிம்மார்க்கம் பாரா மல்தான்
விதமான சமையத்தோர் மேவிக் கெட்டார்
ஆசினேன் வாசியைத்தான் னருத்தே கண்டால்
வெளிக்கான முமமேல மறிவாய்க் காணார்
தாசியே யெனமென்று சொல்லா யல்லோ
தானாகிச் செத்தவர்கள் தலையா தப்பா
றேசியே முமமேலாய் கொள்ளா மல்தான்
னிளுக்கான சமைத்த தோ ரிறந்திட் டாரே // 164.

அ. கிறந்திட்டா ரினமென்று சொல்லி மைந்தா
றிரும்பான சமையத்தோ ரிறந்து போனார்
நிறைந்திட்ட முமமேலாய் கொண்டா ராகில்
நிலையான ஆத்மாவை நிலைக்கக் காண்பான்
பரந்திட்ட பராபரத்தை அருந்து யேறி
பாஞ்சுமயில் மிசேறிப் பதியால் கூடி
அரந்திட்டத் தனையறிந்து அன்பாய்க் கண்டு
ஆனந்த மயாலேறிப் பரிந்திட் டேனே / 165

பரியவடா யிணக்கமதாய்ச் சொன்னேனையா
பாலகனே யுனக்காகப் பதறிச் சொன்னேன்
அரியவடா அடிமுடியும் மத்தி சொன்னேன்
னாயிரம் மூன்கம்பத் தன்கு சொன்னேன்
பிரியவடா கருவிகளைப் பிளக்கச் சொன்னேன்
பேசாத வஸ்த்துநிலை பிரித்துச் சொன்னேன்
வரியவடா வாசியுட நிலையுஞ் சொன்னேன்
வாய்வான சுளினிலையும் வருந்தி நில்லே // 166

நில்லடா ஒருமனதாய் நிலையில் நின்று
நீசனென்ற காலனையும் திமிர்த்திப் போடும்
மெல்லடா கேசரியாம் மௌனம் வாய்க்கும்
ஆயிரத் தெட்டுமல ரறிவாய்க் காணும்
வல்லடா கஜ்ஜூறில் வாழ்ந்தே நிற்பாய்
வாய்வான வயிரத்திரு விளக்கைக் காண்பாய்
இல்லடா யீராறு கலமுந் தோணும்
மிந்திரமதிப் பருமதத்தி லிருக்க லாமே // 167

இருக்கலா மனேகநாள் மட்டும் மைந்தா
யியல்வான வஸ்த்துவும் இருக்க மட்டும்
பெருக்கலாம் பிரணவத்தோ டொறை சுத்தும்
பிசகாம வுன்மனையும் பிளத்துப் போடும்
மெருக்கலா மெருக்கான தேகையுங் கூட
அசுரர்கிளை தலைகளையு மறுத்துப் போடும்
நெருக்கலாம் பரகதியும் நிறைந்தே காணும்
நிச்சயமாய் ஆத்துமாவே நினைக்க லாமே //
168

54. நிலைக்குமோ நிலையாதோ வென்று நீயும்
நின்றாக்கால் வாரிவிடும் நிலைக்கொட் டாது
தலைக்குமேல் சுடர்முனையில் வாய்வு தாங்கி
தந்திதனி லேறியுந்தான் மெய்வாய் நின்று
அலைக்குமே னாணைத்தி அருந்தக் கொண்டு
அரூப வெளியாதுவு மறிவாய்ப் பார்த்து
மலைக்குமே மலையேறி மெயேற்றிரங் குத்தி
மதலையாய் யனுதினமும் வாழ்ந்தி வாயே // 169.

வாழவே மதலையா யாருந்து யானும்
மனோன்மணியாள் ராமிர்தமதை வாங்கியுண்டேன்
நாளவே அறுமுகமாய்ப் பணிந்தே நின்றேன்
அச்சுதன் தன் குருவென்று அருளைப் பெற்றேன்
நாளவே நால்வழிபடுஞ் செய்யா மலேதான்
நலமான மும்மூலம் நாடிக் கொண்டேன்
நாளவே அமிர்தமுந்தான் பாய்ந்தே யுண்டேன்
அடாங்காத சித்தரென்று அருளி னாரே // 170.

அருளினா ரென்று சொல்லி சொன்னீ ரைய்யா
அறுமுகனே கனகவெளி யகண்ட நாதர்
வருளினதோர் மும்மூல வகையுஞ் சொன்னீர்
வாயான சு—திலியும் முளங்கச் சொன்னீர்
தருளினதோர் தாய்பதத்தைப் போற்றச் சொன்னீர்
தமர்கிளையுந் தன்கிளையு முருக்கச் சொன்னீர்
ரருளினதோர் நாளையுந்தான் சாவார்க்
அவரவர்க்குக் காணுகுறி கெல்லாம்
அறைந்திட்
டாரே // 171.

அ. அறையுறே னென்மகனே மாணா கேளு
அப்பனே நானாமுதற் சாவார்க் கெல்லாம்
நிறையுகிற காலனென்ற நிழல்தா னப்பா
நிச்சயமாய்க் கூத்தாட்டம் நிதானம் காட்டும்
வறையுகிற அதையறிந்து மைந்தா நீயும்
வளமான மும்மூலம் வகையாய்க் கொண்டால்
நிறையுகிற அறுவையாரும் போகா தப்பா
நிச்சயமா யந்தநிலை நினைவாய்த் தீரே // 172.

தீர்க்கமடா மும்மூலம் மனுவளவு தானும்
திறந்தப்பா விடாதே நீ திறமாய்ச் சொன்னேன்
ஆர்க்குமடா அறுவையாரும் போகா தப்பா
அண்டவெளிக் குள்ளிருந்து ஆடல் செய்வான்
மார்க்கமடா மரகதத்தின் வழியைக் காண்பாய்
மாறாத சிரஞ்சீவி மகிமை யாவான்
கார்க்கவடா கர்மமுந்தான் கட்டிப் போகும்
கயிலாச நாதனையுங் காண லாமே // 173.

காணலாம் காலனென்ற நிழல்தான் சாகும்
கசவியென்ற தத்துவமும் கழன்று போகும்
மாணலாம் வெண்சாரை யருந்திக் காண்பா
யாரூப வெளியாலேயும் அடங்கிக் கொள்வான்
நாணலாம் நாகமணி கட்டிப் போகும்
நந்திகொடு விருப்பாடும் நாடிக் காணும்
நூணலாம் புற்பாகம் மலையா லேறிப்
பொல்லாப்பு ஆனதையும் போக்கி வாயே //
174.

போக்கவே யீராறு தலமுமுங் கண்டு
போதமய மாகவந்த ரனைத்துச் சொன்னேன்
பார்க்கவே அந்திநிலை பகர்ந்து சொன்னேன்
பாவமெல்லாந் தீருகின்ற பண்பு சொன்னேன்
கார்க்கவே கர்மத்தைக் கட்டச் சொன்னேன்
கோலமாங்கே திறக்குகிற கடவுஞ் சொன்னேன்
தீர்க்கவே திரிபுரையைக் கண்டு கொண்டு
தெளிவான சித்தனென்றுந் தெளிந்து கொள்ளே // 175.

கொள்ளடா வெளிதாண்டி ஒளியுந் தாண்டி
குறையாத பேரொளியால் கூட்டிக் கொள்ளு
அள்ளடா அவ்ட்டாங்க நிலையுங் காணும்
மாயையென்ற மௌனத்தை யடக்கிக் கொண்டு
மெள்ளடா சிலம்பொலியுங் காதில்க் கேட்கும்
மேலான பராபரத்தில் மேன்மை யாகும்
வெள்ளடா சுடரொளியைக் கண்டு போற்றி
வழமான மெய்ஞானம் வாய்க்கும் பாரே // 176.

வாய்ப்பாகச் சொல்லிவைத்தேன் மனதிரங்கி
வஸ்த்தான வஸ்த்திலையும் வரரச் சொன்னேன்
யேப்பாகச் சொல்லவில்லை யிந்த மார்க்கம்
இரும்பாலேச் சைத்தாக்கா லென்ன செய்வேன்
காய்ப்பாகக் காலனையுங் கட்ட ஜத்து
கயிலாச மேருவையுங் கடந்து நிற்கும்
பாய்ப்பாகப் பாஞ்சுமினிப் பரியா வேறி
பராபரத்தை நோக்கியினிப் பதித்து வாயே // 177.

பத்தவே வாசியுந்தான் பதறி யோடும்
பங்குபங்காய்க் கருவியெல்லாம் பறந்தே
யோடும்
மத்தவே ஆசாரி யடங்கிப் போகும்
அரமான தற்குந்தான் னறிந்தே வாய்க்கும்
பெத்தவே யிப்படியே பெற்றேன் யானும்
பிலத்தநந்தி பீடத்தில் போந்து சென்றேன்
னத்தபின்பு அருநாகம் தனைய றுத்தேன்
னாதினாலே ஆறுமுக னென்றும் பேரே // 178

பேராகி யூராகிப் பெரிது மானேன்
பேசாத வஸ்த்துவாய்ப் பிலத்து நின்றேன்
ஆரனாகி அரியாகி அயனு மாகி
அண்டச்சுவர் தன்னையுந்தான் னகத்துத் தாண்டி
நேராகி நிறையாகி நிர்மதியு மாகி
நிமலனென்று பேறெடுத்து நிசமாய் நின்றேன்
காராகி கயிலாச கிரியு மாகிக்
கடம்பவனத் ததியனென்று கருதி னாரே // 179.

கருதினார் கர்த்தனெனக் கண்டு மெச்சிக்
கபடனென்ற பேச்சையெல்லாம் கட்ட றுத்தேன்
உருகினா ருள்முனையால் ஒளிவாய் நின்று
ஓங்காரக் கம்பத்தில் ஒடுங்கி நின்றேன்
னருகினா ராசனமும் மணியு மேயேந்தார்
அறிவாகக் காதிலிரு குழையு மேயேந்தார்
கருதினார் கர்த்தனென்று பேரு மிட்டுக்
கெடுத்த சித்தனென்றுமல் கருதி னாரே // 180

குருதினா றெனைப்போலே கண்டா ருண்டோ
கபடத்த வாசலையுங் கடந்தா ருண்டோ
அருதினார் மேல்த்தை அருந்தா ருண்டோ
ஆருயிரு நாமென்று நினைப்பா ருண்டோ
இறுதிநாள் யானுமினி அலைந்து நானும்
தேவியுட கிருபையினால் தெளிந்தேன்
அறிவினால்த் தான்கடந்து யானும் அப்பால்ச் சென்று
ஆனந்தமானதையும் அறிந்திட் டேனே// 181

56. அறிந்திட்டே னாத்மாவை யானு மைந்தா
வன்னான பருவெளியைத் தள்ளிப் போட்டேன்
திரிந்திட்டேன் சுடரிலையுஞ் சொக்கி யானும்
துரியமென்ற வெளியிலையுங் கடந்து கண்டேன்
வுரிந்திட்டேன் வாசியென்ற குதிரை மேலே
வாய்ப்பாக வேறியுந்தான் வரிந்தே சென்றேன்
முரிந்திட்டே னார்முறை யார் தன்னை விட்டு
முக்கியமா மும்மலங் கொண்டிட் டேனே// 182

கொண்டிதினால் குருவாகி குமர னாகி
குறையாத பேரொளியால் கூடிக் கொண்டேன்
கண்டதினால் சொரூப வெளியு மானேன்
ஆத்மாவை யானாகி அருளும் பெற்றேன்
வுண்டபடி வண்டர்களை வதைத்துப் போட்டேன்
வாசிவடி வேலையுந்தான் வாசிக்கி கொண்டேன்
தண்டபடி தாய்பதத்தில் தஞ்சம் பெற்றேன்
தமர்திறக்கும் வாசலையுங் கண்டிட்டேனே// 183

கண்டபடி யேழுகடல் வழுர்த்துங் கொண்டேன்
கனமான பச்சங்களைக் கரைத்துப் போட்டேன்
அண்டபடி அக்கடலி லடுக்கச் சென்றேன்
ஆசானை அச்சினமே அறிந்தே கொண்டேன்
மண்டபடி மனமுருகி மனந்த னர்ந்தேன்
மாறாட்டப் பேச்சையெல்லாம் மறிக்கப் பெற்றேன்
தொண்டபடி தொண்டுபண்ணி நினைத்துக் கொண்டேன்
த்வாதெசி வீதியிலே சொக்கினேனே // 184.

சொக்கியே யருக்கையாலே வாயித்தல் ஆதில்
சணாங்களென்ற மரத்தையுந்தான் சூழ்ந்து கொண்டேன்
அக்கியே அம்மரத்திலப் பாலுமுண்டேன்
ஆயர்த்த நெட்டுருமாத்த தடுகு மாச்சு
முக்கியே உழவலகை யருகினேன்
முச்சுடராய் தெக்குந்தா னொழிந்து போச்சு
பக்கியே பராபரனை சேனமாக்கி
பச்சைசுழியில் வர்ணணை அங்கு வெடிவாக்கி னேனே // 185.

வெடியாக்கிக் கழிவாளாம் கனேசனாக்கி
வெடிக்கை மயில்மேல் ஏறிக் கொண்டேன்
படியாக்கி அண்டபரா பராங்களெல்லாம்
பாஞ்சுசென்றேன் கெதிமாய் சுற்றி வந்தேன்
னடி ஆக்கிப் பூமியைத்தான் மைந்தராயாகும்
மண்டவெளி தன்னையுந்தான் சிரசதாக்கி
குடியாக்கிப் பூதலத்தில் மாந்தரென்னைக்
குறைத்திக்கிக் கணவனென்றும் கடாறி னாரே // 186

57. கூறாகக் குறையாத பொருளு மாகிக்
குலைக்கார ணென்றுசொல்லக் கூறும் பெற்றேன்
ஆறாகி அவனியெல்லாந் தெய்வ மாகி
ஆறுமுக மாயைக்கு மருளே கொண்டேன்
நீறாகி நிலையாகி நிச்சயமா யெங்கும்
நீங்காம லெவ்வுயர்க்கும் யாறு மானேன்
மாறாகி மனமதன்றன் ரூப மாகி
மரகதமாய் யறுதினமும் வாழ்ந்திட் டேனே //
187.

வாழ்ந்திட்டேன் தெய்வசபைக் கிறைவன் யாறும்
வள்ளியெனுந் தெய்வக்கு மணவா ளன்றான்
தாழ்ந்திட்டேன் தந்திக்குத் தம்பி முன்னே
தாயான சிற்பரைக்குப் பிள்ளை யானேன்
ஆய்ந்திட்ட அரனுக்கும் பிள்ளை யானேன்
யல்லோர்க்கும் தெய்வமா யறிவாய் நின்றேன்
காய்ந்திட்ட காலனுக்குக் கர்த்த னானேன்
கண்டவர்க்கு மெய்ஞானங் கருது வோமே //
188.

கருதுவோ மிதனாலே யாறு மைந்தா
காரணசற் குருவாய்க் கருத்தி னாலே
அருகவே முழுமூலங் கொண்ட தாலே
அரனுக்குப் பிள்ளையென்றுந் தகப்ப னானேன்
வருந்தவே வாய்வான யோகத் தாலே
வயாத்திரு விளக்கையுந்தான் வசமாய்க் கண்டேன்
திருந்தவே திரிபுரையாள் கிருபை யாலே
தீயான அக்கினியால் சேர்ந்திட் டேனே //
189.

அ. சேர்ந்திட்டே னக்கினியில் சொக்கி வாழ்ந்தேன்
தீர்த்தங்க ளானதையுந் திறமாய்க் கண்டேன்
தேர்ந்திட்டே னம்புரமு மேலே சென்றேன்
தமர்திறக்கும் வாசற்படி யையும் பெற்றேன்
வார்ந்திட்டேன் அத்தசில மாங்கே கண்டேன்
வாய்வான பாக்கியத்தை வழியாய்க் கொண்டேன்
ஆர்ந்திட்டே னச்சுடரின் அழகு தன்னை
ஆராலுஞ் சொல்லரிது ஐயா பாரே // 190.

பாரென்று யென்குருவே சொன்ன தையா
பலபல பேச்சுகளைப் பகட்டிச் சொன்னார்
ஆரென்று அத்தசில மறியச் சொன்னார்
அதிசயங்க ளுள்ளதெல்லாம் அறியச் சொன்னார்
காரென்று யெற்றிடத்தி லிருக்க யாரும்
கடவுளரே யெந்தனுக்குக் காட்ட வேணும்
தாரென்று மெய்யுயிர்க்கு முயிராய் நின்ற
சிந்தனை யெந்தனுக்குக் கருது வீரே // 191.

கருதுகிறோ மென்மகனே மானா கேளு
காலமுட தேசமடா தெட்சணாந்த ணமோ
அருந்துகிற பொதிகைமலைச் சார்பு முண்டு
அத்தேச மேடாக உகந்தே நிற்கும்
வருந்துகிற அம்மலையா லிருந்தே வாழ்வாய்
மாறாத சிரஞ்சீவியாய் வாழ்ந்தே நிற்பாய்
தருகுகிற அங்குஷ்டத் தளவு மேவாய்
தற்பரம்போல் வடிவாகித் தானாய் நில்லே //
192.

நானாகி நீயாகி யானு மாகி
தந்தையைப்போ லனுதினமுந் தானாய் நிற்பேன்
ஆணாகி பெண்ணாகி அலியு மாவாய்
அவனியுள்ள சித்தர்களு மித்தே செல்வார்
உளனாகிச் சித்தரெல்லாம் உன்னைக் கண்டு
உறுதியாய்ப் போற்றியணி வணங்கி
வாழ்வார்
வானாகி வானவர்கள் போற்று வார்கள்
வல்லவன்தா னனுதினமும் வருகி வாரே //
193

வெற்றிவேர் முனிவரெல்லாம் வணங்கிநிற்பார்
வாய்ப்பான மாந்தரெல்லாம் வணக்கஞ்
செய்வார்
தந்திருவார் கிம்புருட நாட்டில் செய்வார்
சதாகோடி ரவிபோலே தானாய் நிற்பார்
விற்திருவார் விமானமென்ற வாசி தன்னில்
வீற்றிருப்பா ரனுதினமும் விலகா மல்தான்
நந்திருவார் நந்தியாலே நாடி நிற்பார்
நாலஞ்சு வாசனையு மடைத்துக் கொள்ளே //
194

கொள்ளடா முன்சொன்ன மூல மொன்றை
குறையாது ஆயுசுமுதல் கடந்து சொன்னேன்
எள்ளடா அணுவளவும் விட்டிடாதே
அகத்தியனே புத்தியா அறிவாய் நில்லே
வள்ளடா வல்லத்துக் கோட்டைக்குள்ளே
வணங்காத சேனையும்நீ வணக்கஞ் செய்து
நில்லடா நிச்சயத்தில் வருந்து நீயும்
நீங்காத வஸ்தலொடே நிலைத்து நில்லே //
195

நில்லடா வாசியைத்தான் வாங்கிக் கொண்டு
நிலையான கருவிகளை வதைத்துப் போடும்
அல்லடா ஐயனைப்போலே ஆசானையா
அப்பனை ஒத்தனுக்கு வாய்த்தப்பா
செல்லடா சிவஞானக் கருவிக் குள்ளே
தினந்தினந்தான் பணிந்து செபம் திட்டமாய்த் தானும்
நில்லடா சகலகலை யறிந்து கொண்டு
நீங்காத சோதியாலே நிஞ்சி நில்லே // 196.

நில்லடா சகலகலை ஞானஞ் சொன்னேன்
நீங்காத மும்மல நிலையுஞ் சொன்னேன்
அல்லடா ஆதிவஸ்த்தை அறியச் சொன்னேன்
நீ அடங்காத சித்தனென்று ஆடச் சொன்னேன்
வல்லடா சிவயோக வகையுஞ் சொன்னேன்
வர்க்கான மும்மலம்வி கொள்ளச் சொன்னேன்
அல்லடா அதையெடுத்து உண்டு தானும்
அடங்காத ஆத்மாவை வடங்கும் பாரே // 197

பாரப்பா பலபலவாம் நினைவை நீக்கி
பாங்கான பாவையைப்போ வழியை உன்னு
நேரப்பா இணையளவு உசந்து நாடி
நிறையாக யடம் வலமுஞ் சுத்தி சுத்தி
உரப்பா யாருடம்போ னென்று மில்லை
உத்தமனே உனக்குகந்த உண்மை போலாம்
ஆரப்பா சொல்வார்க ளிதுக ளெல்லாம்
அவ்வும் உவ்வும் மவனோசை அறிந்தி
டாயே / 198

அறிந்திடவே மகாரமென்ற நீணை டோர்க்கு
அறுவளவு கோபமுந்தான் னவர்க்குண்
டாமோ
நெறிந்திடவே பசியில்லை ஆசை யில்லை
நிச்சயமாய்த் திரோதாய் மாயிகை யில்லை
உறிந்திடவே சாதிவர ணாட்சரமு மில்லை
ஒகோகோ அறுபதுபேர் பட்டு வீழ்ந்தார்
விறிந்திடவே ஓமப்பால் விடாமல்க்
கொண்டால்
விதமான முப்பத்து ஆறும் போச்சே // 199.

நிச்சயமாய் யாந்தவகை முறையைச் சொன்னேன்
நெறிநொளாய் வாளவென்று நீதானுஞ் சொன்னேன்
அச்செயமா யென்னுடைய இருணாருள் ளே
அடாங்காத கருவையெல்லா மடக்கிப்
போட்டேன்
பச்செயமாயிப் பராபரத்தி னிலையுஞ்
சொன்னேன்
பாஞ்சுமயா னேறுகிற பதுமை சொன்னேன்
அச்செயமா யாதையறிந்து மவுனங் கொண்டு
அடாங்காத யாருமும் அடாங்க முற்றே //
120.

திருச்சிவகிரி தண்டாயுதபாணி பாதார
விந்தமே துணை. வேதம் மொழியும்
துணை. பாலாம்பிகை துணை செய்யவும்.